மலர் : 51 இதழ் : 5

தமிழரசு

நவம்பர் 2020
விலை ரூ. 20/–

தமிழரசு 1970-2020
50 பொன்விழா ஆண்டு

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

விவசாயிகளுடன் குடிமராமத்து பணி ஆய்வு

நடமாடும் அம்மா உணவகம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 04.11.2020 அன்று தலைமைச் செயலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில், மூன்று நடமாடும் அம்மா உணவகங்களின் சேவைகளை துவக்கிவைத்து, பொதுமக்களுக்கு உணவுகளை வழங்கினார்கள்.

தமிழரசு

தமிழ்நாடு அரசு

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி வருடம் : ஐப்பசி – கார்த்திகை
நவம்பர் 2020

மலர் : 51 விலை ரூ.20 இதழ் : 5

ஆசிரியர் - வெளியிடுபவர்
தெ. பாஸ்கர பாண்டியன் இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
சீ. ராஜன்
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
எஸ். சீதாலட்சுமி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
சு. கமலா
தேச. கலையரசன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
ச. மஞ்சுளா
மு. மோகனவல்லி
மு. மணிமேகலை
அ. மதன்

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

வடிவமைப்பாளர்
கோ. முரளி கிருஷ்ணன்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542221 / 22542224
மின்னஞ்சல் : tamilarasujournal@gmail.com
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு www.tamilarasu.org என்ற இணையதளத்தில் சந்தாத் தொகையினை நேரடியாக செலுத்தலாம்.

தனி நபர் வருவாய் படிப்படியாய் உயர்ந்து, கொரோனா சூழலால் ஏற்பட்ட பொருளாதார பாதிப்பிலிருந்து தமிழ்நாடு விரைந்து மீண்டு வருகிறது.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்

இந்த இதழில்...

✪ **தூத்துக்குடி மாவட்டத்தில் புதிய தொழிற்பூங்கா அமைப்பதன் மூலம் ரூ.2,000 கோடி முதலீடு ஈர்க்கப்பட்டு, 2,500 நபர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்படும்**
*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் தலைமையில் 11.11.2020 அன்று, தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தொற்றுத் தடுப்புப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து* 6

✪ **கோவிட்–19க்கு எதிரான, மக்கள் இயக்க விழிப்புணர்வு விளம்பர வாகனங்கள்**
*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 28.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்* 20

✪ **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களுக்கும், அரசுக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்த "நமது அரசு" வலைதளத்தை துவக்கி வைத்தார்கள்** 43

✪ **புதுக்கோட்டை மக்கள் எதிர்பார்த்த காவேரி–குண்டாறு திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள், அதனை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்துகிறது**
*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் தலைமையில் 22.10.2020 அன்று புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தொற்றுப் பரவல் தடுப்புப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை* 65

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 22.10.2020 அன்று காவேரி–வைகை–குண்டாறு இணைப்பு திட்டத்தில் முக்கிய அங்கமான புதுக்கோட்டை மாவட்டம், கவிநாடு கண்மாயில் முடிவுற்ற குடிமராமத்து பணிகளை மாட்டு வண்டியில் விவசாயிகளுடன் சென்று பார்வையிட்டார்கள்.

நவம்பர் 1 : தமிழ்நாடு நாள்

தமிழ் பேசும் நம் மாநிலத்தை இந்திய அரங்கில் உயர்த்த தொடர்ந்து பாடுபடுவோம்!

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்
“தமிழ்நாடு நாள்” – வாழ்த்துச் செய்தி

“இமிழ்கடல் வேலியைத் தமிழ்நாடு ஆக்கிய
இது நீ கருதினை ஆயின்”

என்று சிலப்பதிகாரத்தின் வஞ்சிக் காண்டத்தில் இளங்கோவடிகள் இந்தியப் பெருங்கடல், வங்கக் கடல், அரபிக் கடல் ஆகிய மூன்று கடல்களையும் வேலியாகக் கொண்டு விளங்கும் தமிழ்நாடு என்று குறிப்பிடுகிறார்.

தமிழின் தலைசிறந்த இலக்கண நூலான தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய இளம்பூரணர், “நம் நாடு யாது என்றால் தமிழ் நாடு என்றல்” என்ற ஒரு வாக்கியத்தில் “தமிழ்நாடு” என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளதைப் பார்க்க முடிகிறது.

மொழிக்காக பல காலகட்டங்களில் நம் முன்னோர்கள் நடத்திய போராட்டங்களால் மொழிவாரியாக மாநிலங்கள் அமைந்தபோது, தமிழ் பேசும் பகுதி 01.11.1956ஆம் ஆண்டு தனியாக பிரிக்கப்பட்டு மெட்ராஸ் மாநிலம் என ஆனது. இத்தகைய தனித் தன்மைமிக்க நிலப்பரப்பிற்கு பேரறிஞர் அண்ணா அவர்களால் ‘தமிழ்நாடு’ எனப் பெயர் மாற்றம் செய்ய சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அன்று முதல் ‘தமிழ்நாடு’ எனும் பெயர் உலகெங்கும் ஓங்கி ஒலிக்கிறது. அதற்கென அர்ப்பணிப்பு உணர்வோடு கூடிய தமிழர்களின் போராட்ட வரலாற்றை நினைவு கூரவும், அந்தப் போராட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட சான்றோர் பெருமக்களை நினைந்து போற்றவும், அவ்வகையில் மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்ட நாளினை சிறப்பிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு சார்பில், “தமிழ்நாடு நாள் விழா” சென்ற ஆண்டு 01.11.2019 முதல், அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்களைத் தொடர்ந்து மாண்புமிகு புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் திருவள்ளுவர் விழா கொண்டாடவும், அரசு அலுவலகங்களில் திருவள்ளுவர் ஆண்டு குறிப்பிட்டு எழுதும் நடைமுறையும் கொண்டு வரப்பட்டது. நம் தாய்த் தமிழ் மொழிக்கென ஒரு பல்கலைக்கழகம் தஞ்சாவூரில் நிறுவியது, ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடத்தியது, மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கத்திற்கு அடிக்கல் நாட்டியது எனத் தமிழுக்காகவும், தமிழர்களுக்காகவும், அவர் ஆற்றிய பணிகள் போற்றுதலுக்கு உரியதாகும். அவரைத் தொடர்ந்து இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு மீட்டெடுக்கப்பட்டுப் புதுப்பொலிவுடன் கொண்டாடப்பட்டு வருவது, எட்டாம் உலகத்

தமிழ் மாநாட்டை தஞ்சாவூரில் நடத்தியது, தமிழ் அறிஞர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 7 விருதுகளை 55 விருதுகளாக உயர்த்தி வழங்கியது, சங்க தமிழ் காட்சிக் கூடத்தை மதுரையில் நிறுவியது, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தைத் தரம் உயர்த்தியது முதலான அளப்பரிய பணிகள் தமிழுக்கு பெருமை சேர்ப்பனவாகும்.

உலகத் தமிழர்களின் காவல் தெய்வம் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நெறியைப் பின்பற்றி, மாண்புமிகு அம்மாவின் ஆட்சியிலும் தொடர்ச்சியாக தமிழ் வளர்ச்சித் திட்டங்கள், தமிழ் நல் உள்ளங்கள் போற்றும் வகையில் சீரும் சிறப்புமாக செயல்படுத்தப்பட்டு வருகிறன்றன. அவற்றில் சில:–

- அயல் நாடுகளில் தமிழ் மொழியை வளர்க்கும் நோக்கத்துடன், அமெரிக்க நாட்டில் உள்ள ஹார்வர்டு மற்றும் ஹூஸ்டன் பல்கலைக்கழகங்களுக்கு தமிழ் இருக்கை நிறுவுவதற்கு நிதி உதவி வழங்கப்பட்டது;
- பிறநாட்டு இலக்கியப் படைப்புகளைத் தமிழ்மொழியில் கொண்டு வரவும், நம் நாட்டு இலக்கியங்களைப் பிறமொழியில் படைத்திடவும் பாடுபட்டு வரும் சிறந்த மொழிபெயர்ப்பாளர்களுக்கு ஆண்டுதோறும் “மொழிபெயர்ப்பாளர் விருது” வழங்கப்பட்டு வருகிறது; அயல்நாட்டில் புலம்பெயர்ந்து வாழும் தமிழறிஞர்களின் சிறந்த படைப்புகளைப் போற்றும் வண்ணம் ஆண்டுதோறும் “உலகத் தமிழ்ச் சங்க விருதுகள்” வழங்கப்பட்டு வருகின்றன;
- எல்லைக் காவலர்கள், தமிழறிஞர்கள் மற்றும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கும், அவர்தம் மரபுரிமையர்களுக்கும் வழங்கப்பட்டு வந்த உதவித்தொகை உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது;
- தொல்காப்பியருக்கு சென்னை பல்கலைக்கழகத்தின் மெரினா வளாகத்தில் சிலை நிறுவப்பட்டது. தொல்காப்பியத்தின் பெருமையை விளங்கச் செய்யும் வகையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் “தொல்காப்பியர் ஆய்விருக்கை” அமைக்கப்பட்டது;
- திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் கண்ட தமிழ் அறிஞர் இராபர்ட் கால்டுவெல் பெயரில் ஆய்விருக்கை நிறுவ ஆணையிடப்பட்டது;
- சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் புரட்சித்தலைவர் சமூகவியல் கலை மேம்பாட்டு ஆய்விருக்கை நிறுவப்பட்டது;
- சங்ககாலப் புலவர்களின் இருப்பிடங்களைப் பெருமைப்படுத்தும் வகையில் நினைவுத் தூண்கள் நிறுவப்படுகிறது.
- அன்றாட பயன்பாட்டில் உள்ள பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் மற்றும் புதிய சொற்களுக்கு தகுந்த தமிழ்ச் சொற்களை உருவாக்க சொற்குவைத் திட்டம் துவக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்காக இதுவரை 20,000 சொற்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.
- 8,050 பக்கங்களில், 7 மடலங்களாக செந்தமிழ் சொற்பிறப்பியல் பேரகராதிகள் திருந்திய பதிப்பாக விரைவில் வெளியிடப்பட உள்ளன.
- தமிழ்ச்சாலை என்னும் செயலி உருவாக்கப்பட்டு, பெரும்பாலான தமிழ் அறிஞர்களாலும், மாணவர்களாலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், தமிழ் வளர்ச்சிக்கான ஏராளமான திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருவதை அனைவரும் அறிவர்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், “தமிழ் தன்னையும் வாழ வைத்துக்கொண்டு பிற மொழிகளையும் வளர்த்தெடுக்கும் ஆற்றலைப் பொருந்திய மொழி” என்பதை எடுத்துக்காட்டியுள்ளார். அவர்தம் வழியில் நாம் நமது அடையாளமாகப் பெற்றிருக்கின்ற தமிழ் எனும் உன்னத செல்வத்தை வளர்த்தெடுப்பதிலும், தமிழ் பேசும் நம் மாநிலத்தை இந்திய அரங்கில் உயர்த்துவதிலும் தொடர்ந்து பாடுபடுவோம் என்கின்ற உறுதி மொழியோடு அனைவருக்கும் தமிழ்நாடு நாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமது உயர்வை அறியாதவரே சான்றோர்.

உலகம் ஒரு புத்தகம் அதைப் படியாதவன் எவ்வளவு படித்தவன் ஆயினும் படியாதவனே.

தூத்துக்குடி மாவட்டத்தில் புதிய தொழிற்பூங்கா அமைப்பதன் மூலம் ரூ.2,000 கோடி முதலீடு ஈர்க்கப்பட்டு, 2,500 நபர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்படும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் தலைமையில் 11.11.2020 அன்று, தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தொற்றுத் தடுப்புப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து...

தூத்துக்குடி மாவட்டத்தை பொறுத்தவரை வேளாண் தொழில், மீன்பிடித் தொழில், உப்பு உற்பத்தி தொழில் பிரதானமாக உள்ளன. உப்பு உற்பத்தி தொழிலை பொறுத்தவரை, தமிழகத்தில் உப்பு உற்பத்தியில் முதலிடம் வகிப்பது தூத்துக்குடி மாவட்டம் ஆகும். மீன்பிடி தொழிலும் இங்கே அதிக அளவில் உள்ளது. மீனவர்களின் கோரிக்கைகள் பல நிறைவேற்றப்பட்டுள்ளன. கடல் அரிப்பை தடுப்பதற்கு தடுப்புச்சுவர், தூண்டில் வளைவுகள் போன்றவை கூடுதலாக அமைப்பதற்கு அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாணவர்கள் உயர்கல்வி படிப்பிற்காக புதிய கல்லூரிகள் உருவாக்கப்பட்டுள்ளன. தூத்துக்குடி மாவட்ட மக்களுக்கு உயரிய சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதற்காக, அரசு தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நேரில் சென்று, புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கதிர்வீச்சு சிகிச்சையின் மூலமாக சிகிச்சை அளிப்பதற்கு, உயர்தர மருத்துவ கருவிகளை மக்களின் பயன்பாட்டிற்காக துவக்கி வைத்தேன்.

அதேபோல, மாண்புமிகு அம்மாவின் அரசு ஏரிகள், குளங்கள், ஊரணிகள் அனைத்தையும் தூர்வார வேண்டும் என்பதற்காக குடிமராமத்து திட்டத்தை அறிவித்து, அதனையும் சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது. இதனால் பல ஆண்டுகளாக தூர் வாராத ஏரிகள், குளங்கள் தற்போது தூர்வாரப்பட்டு, பருவகாலங்களில் பொழிகின்ற மழைநீர் முழுவதும் சேமித்து வைக்கின்ற சூழ்நிலையை ஏற்படுத்தி உள்ளோம். பருவகாலங்களில் பொழிகின்ற மழை நீர் ஓடைகள் நதிகளின் வழியாக வீணாக கடலில் கலப்பதை தடுத்து தடுப்பணைகள் கட்டி, நிலத்தடி நீரை உயர்த்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள்

எடுக்கப்பட்டு வருகிறது. அதற்காக மூன்று ஆண்டு கால திட்டமாக ரூ.1,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

தூத்துக்குடி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் தடுப்பணைகள் கட்டப்படுகின்றன. பொதுப்பணித் துறையின் சார்பாக மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு கட்டடப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மக்களின் குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பல கூட்டு குடிநீர் திட்டங்கள் இந்த மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதேபோல இன்னும் நிறைய புதிய திட்டங்களை துவக்க இருக்கின்றோம்.

திருச்செந்தூர் வட்டம், ஆலந்தலை கிராமத்தில் ரூ.52.60 கோடி மதிப்பீட்டில் தூண்டில் வளைவு அமைக்கும் பணிகள் துவங்கப்பட உள்ளது. முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தின் மூலம் மக்கள் அரசு அலுவலர்களை சந்திப்பதற்கு பதிலாக, அரசு அலுவலர்கள் மக்களை சந்தித்து, அவர்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று, அவர்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தான் முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தை துவங்கி வைத்தேன். தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்ட நிருவாகமும் அந்த பணியை சிறப்பாக செய்து வருகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் பெறப்பட்ட 12,628 மனுக்களில் 5,426 தகுதியான மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது இலவச வீட்டு மனைப்பட்டா கோரி பெறப்பட்ட 4,796 விண்ணப்பங்களில், தகுதியான 3,225 மனுக்கள் ஏற்கப்பட்டு, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.

தூத்துக்குடி மாவட்டத்தில் அல்லிக்குளம் பகுதியில் புதிய தொழிற் பூங்கா அமைப்பதற்கு நிலம் கையகப்படுத்தும் பணிகள் அரசின் பரிசீலனையில் உள்ளது. விளாத்திகுளம் வட்டம், வைப்பார் கிராமத்தில் ஒரு தொழில் பூங்கா அமைக்க 1,019 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் சிப்காட் நிறுவனத்தின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்பூங்காவின் மூலம் சுமார் ரூ.2,000 கோடி முதலீடு ஈர்க்கப்பட்டு, 2,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்படும்.

சென்னை – கன்னியாகுமரி தொழில் பெருவழி திட்டத்தின் கீழ், திருச்செந்தூர் –பாளையங்கோட்டை வரை சுமார் 50 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூ.165 கோடி மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளது. இவ்வாறு பல திட்டங்கள் இம்மாவட்டத்தில் செயல்படுத்தப்பட உள்ளன என்ற செய்தியை தெரிவிக்க விரும்புகிறேன்.

திருச்செந்தூர் கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் தங்குவதற்கு வசதி வேண்டும் என்று வைத்த கோரிக்கையையும் அம்மாவின் அரசு நிறைவேற்றி கொடுத்திருக்கிறது. சாத்தான்குளம் நகரத்தில் புறவழிச்சாலை அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக குடிமராமத்து திட்டத்தின் கீழ், பல குளங்கள், ஊரணிகள் தூர்வாரப்பட்டு இருக்கின்றன.

தூத்துக்குடி மாவட்டத்தில் 7,707 மகளிர் சுய உதவிக் குழுக்கள் இயங்கி வருகின்றன. அதில் 92,504 உறுப்பினர்கள் உள்ளனர். கடந்த 3 ஆண்டுகளில் இந்த குழுக்களுக்கு வங்கி இணைப்பு கடனாக ரூ.635.96 கோடி வழங்கப்பட்டுள்ளது. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 2020–2021ஆம் ஆண்டிற்கு ரூ.518 கோடி வங்கி கடன் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை ரூ.140.23 கோடி வழங்கப்பட்டுள்ளது.

பணிபுரியும் மகளிருக்கு மானியத்துடன் அம்மா இரு சக்கர வாகனம் வழங்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். அம்மா வழியில் செயல்படும் அம்மாவின் அரசு அதனை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றது. அம்மா இரு சக்கர வாகனத் திட்டத்தின் கீழ், 2017–2018 முதல் 2018–2019ஆம் ஆண்டு வரை 5,023 நபர்களுக்கு வாகன ஒதுக்கீடு வழங்கப்பட்டு ரூபாய் 12.57 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 2019–2020 ஆண்டில் 2,013 மகளிருக்கு 5.05 கோடி ரூபாய் இரு சக்கர வாகன மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி நகராட்சியில் 95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தூத்துக்குடி மாநகராட்சியில் விடுபட்ட மற்றும் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில், சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ், பகுதி சார்ந்த வளர்ச்சி (Area Based Development) பகுதிகளில் உள்ள 35 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில், 143.60 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பாதாள சாக்கடைத் திட்டத்திற்கான விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நிதியாதாரம் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

“ஜல் ஜீவன் மிஷன்” திட்டத்தின் கீழ் 2020–2021ஆம் ஆண்டில் 226 ஊராட்சிகளில் உள்ள 875 குக்கிராமங்களில் 1 இலட்சத்து 43 ஆயிரம் வீடுகளுக்கு 71.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வீடுகளுக்கான குடிநீர் இணைப்பு வழங்கிட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

இவ்வாறு பல திட்டங்கள் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவின் அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது இன்னும் பல்வேறு திட்டங்களை இந்த மாவட்டத்திற்கு கொண்டுவருவதற்கு அம்மாவின் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

தூத்துக்குடி மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 11.11.2020 அன்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ரூ.22.37 கோடி மதிப்பீட்டிலான 16 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, ரூ.328.66 கோடி மதிப்பீட்டிலான 29 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 11.11.2020 அன்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பணியின்போது வீரமரணம் அடைந்த காவலர் திரு. சுப்பிரமணியன் அவர்களின் மனைவி திருமதி புவனேஸ்வரிக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.50 இலட்சத்திற்கான காசோலை மற்றும் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான பணிநியமன ஆணையை வழங்கினார்கள். உடன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜூ, சட்டமன்ற உறுப்பினர்கள், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

கன்னியாகுமரி மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 10.11.2020 அன்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், காவல்துறை, மீன்வளத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, பள்ளிக்கல்வித் துறை, சமூகநலத் துறை, கூட்டுறவுத் துறை, நிலஅளவைத் துறை ஆகிய துறைகளின் சார்பில் 153.92 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 21 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, பொதுப்பணித் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, போக்குவரத்துத் துறை ஆகிய துறைகளின் சார்பில் 60.44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 36 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 10.11.2020 அன்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு, புதுடெல்லிக்கான தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி திரு. என். தளவாய் சுந்தரம், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. மா. அரவிந்த், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில்,
ரூ.324 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள குடிநீர் திட்டம்
ரூ.255.12 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப் பணிகள்
ரூ.39.03 கோடி மதிப்பீட்டில் பெருநகர சென்னை மாநகராட்சி திட்டங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 04.11.2020 அன்று தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக ரூ.162.43 கோடி மதிப்பீட்டில் தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி, கடமலைக்குண்டு – மயிலாடும்பாறை மற்றும் தேனி ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 250 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் ரூ.161.57 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகராட்சி நிருவாகம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூ.294.15 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்
04.11.2020 அன்று தலைமைச் செயலகத்தில்,
காணொலிக் காட்சி மூலம், குடிநீர் திட்டப்
பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும்,
முடிவுற்ற திட்டப் பணிகளை
திறந்தும் வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் கடந்த 07.03.2018 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில், "ஆண்டிப்பட்டி மற்றும் மயிலாடும்பாறை ஒன்றியங்களில் விடுபட்டுப் போன பகுதிகளுக்கு வைகை அணைக்கு கீழ் பகுதியிலிருந்து புதிய கூட்டுக் குடிநீர் அமைக்க ஆய்வு மேற்கொள்ளப்படும்" என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக ரூ.162.43 கோடி மதிப்பீட்டில், தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி, கடமலைக்குண்டு – மயிலாடும்பாறை மற்றும் தேனி ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 250 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.

மேலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ரூ.9.90 கோடி மதிப்பீட்டில், கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வெலகலஹள்ளி மற்றும் 39 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம்;

கிருஷ்ணகிரி மாவட்டம், கீழமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ராயக்கோட்டை மற்றும் 28 குடியிருப்புகளுக்கு ரூ.8.46 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள கூட்டுக் குடிநீர் திட்டம்;

திண்டுக்கல் மாவட்டம், பாலசமுத்திரம் பேரூராட்சிக்கு ரூ.9.62 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள குடிநீர் அபிவிருத்தித் திட்டம்;

நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள 893 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு ரூ.42.46 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள கூடுதல் நீராதாரம் ஏற்படுத்துவதற்கான திட்டம்;

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த 134 குடியிருப்புகளுக்கு ரூ.91.13 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள கூட்டுக் குடிநீர் திட்டம்;

என மொத்தம் ரூ.324 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள குடிநீர் திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

மேலும், ரூ.46.32 கோடி மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், வையம்பட்டி மற்றும் மருங்காபுரி ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 135 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்;

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள 1,153 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ், தஞ்சாவூர் வட்டம், பிள்ளையார்பட்டி கிராமத்தில் ரூ.6.60 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய திட்ட அலுவலகக் கட்டடம்;

நகராட்சி நிருவாகம் சார்பில் மதுரை மாவட்டம், திருமங்கலம் நகராட்சியில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நகராட்சி அலுவலகக் கட்டடம்; தேனி மாவட்டம், தேனி – அல்லிநகரம் நகராட்சியில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தூய்மைப் பணியாளர் குடியிருப்பு; ஆவடி, மாநகராட்சியில் ரூ.197.20 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 4 MLD சுத்திகரிப்பு நிலையம்;

என மொத்தம் ரூ.255.12 கோடி மதிப்பீட்டிலான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் நகராட்சி நிருவாகத்தின் முடிவுற்ற திட்டப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

தேனி அல்லிநகரம் நகராட்சி – தூய்மை பணியாளர் குடியிருப்பு

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், ரூ.21.82 கோடி மதிப்பீட்டில், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புடன் புனரமைக்கப்பட்ட 31 நீர்நிலைகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியால் புனரமைக்கப்பட்ட 117 சமுதாய கிணறுகள், சென்னைப் பெருநகர் குடிநீர் வடிகால் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் புனரமைக்கப்பட்ட 174 சமுதாய கிணறுகள் என மொத்தம் 291 சமுதாய கிணறுகள்;

சென்னை, திரு.வி.க. நகர், ஸ்டிரஹான்ஸ் சாலையில் ரூ.13.49 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய மண்டல அலுவலகக் கட்டடம்; துரைப்பாக்கம், இராஜீவ் காந்தி சாலையில் ரூ.1.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையக் கட்டடம்; தேனாம்பேட்டை, கே.பி. தாசன் சாலையில் ரூ.69 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சிறப்பு காப்பகக் கட்டடம்; வில்லிவாக்கம், சிட்கோ நகர், 4ஆவது பிரதான சாலை குடியிருப்பு பகுதியில் ரூ.1.8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பூங்கா;

என மொத்தம் ரூ.39.3 கோடி மதிப்பீட்டிலான பெருநகர சென்னை மாநகராட்சி திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூ.27 இலட்சம் மதிப்பீட்டிலான 3 நடமாடும் அம்மா உணவகங்கள், ரூ.4.34 கோடி மதிப்பீட்டிலான குப்பைகளை உறிஞ்சி அகற்றும் உபகரணங்கள் பொருத்தப்பட்ட 15 சிறிய வகை வாகனங்களை, பெருநகர சென்னை மாநகராட்சியின் பயன்பாட்டிற்கு வழங்கிடும் விதமாக, அவ்வாகனங்களுக்கான சாவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 5 ஓட்டுநர்களுக்கு வழங்கினார்கள்.

இத்தாலிய பேரறிஞர் வீரமாமுனிவர் அவர்களின் பிறந்தநாள் விழா

படமும்/ செய்தியும்

தமிழ் வளர்த்த இத்தாலிய பேரறிஞர் வீரமாமுனிவர் அவர்களின் பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் 08.11.2020 அன்று, சென்னை காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

நவம்பரில் பூத்த

செம்மொழிச் சிற்பிகள்...

வீரமாமுனிவரின் தமிழ்த் தொண்டு

தோற்றம் : 08.11.1680

இத்தாலியிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்து, தமிழை முறையாக கற்றுத் தமிழிலே அரிய காவியங்களைப் படைத்தவர் வீரமாமுனிவர் அவர்கள்.

வீரமாமுனிவர் சிறந்த சிந்தனையாளர்; எல்லோரும் எதையும் தெளிவாயும் எளிதாயும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்குடையவர்.

இன்றுபோல் அன்று தமிழில் அகராதிகள் இல்லை. அன்றைக்கு தமிழில் திவாகரம், சூடாமணி முதலிய நிகண்டுகளே இருந்தன.

நிகண்டுகள் என்றால், ஒரு பொருளுக்கு உரிய பல பெயர்களையும், ஒரு பெயர் உணர்த்தும் பல பொருள்களையும், அறிந்து கொள்வதற்காகச் செய்யுள்கள் மூலம் தொகுத்து வைக்கப்பட்டிருந்தன. அந்நூல்களே நிகண்டுகள் என்று வழங்கப்பட்டன. நிகண்டுகள் செய்யுள் வடிவில் இருந்த காரணத்தால் தமிழ் மொழியை முறையாகக் கற்றுத் தேர்ந்தவர்களால் மட்டுமே அவற்றைப் படித்துப் பொருள் தெரிந்து கொள்ள முடிந்தது; மற்றவர்களால் முடியவில்லை. இது வீரமாமுனிவர் தமிழகத்திற்கு வந்தபோது இருந்த நிலைமை.

அதனால், மேனாட்டு மொழிகளிலிருந்து அகராதி – அஃதாவது, ‘டிக்ஷனரி’ முறைப்படி ‘அ’ முதல் ‘ன’ வரையிலுள்ள சொற்களைத் தொகுத்து சொற்பொருள் விளக்கம் தரவேண்டும் என்று வீரமாமுனிவர் விரும்பினார். தாம் விரும்பியபடியே தமிழில் அகராதி ஒன்றை ஆக்கினார். அதற்குச் ‘சதுரகராதி’ என்று பெயரிட்டார். அந்த அகராதி அனைவருக்கும் பயனுள்ளதாக இருந்தது. இன்றைக்கு தமிழில் உள்ள அகராதிகள் அனைத்திற்கும் வீரமாமுனிவரின் சதுரகராதியே முதல் நூலாகவும் வழிகாட்டியாகவும் அமைந்தது.

தமிழ்ச்சொற்களுக்கு தமிழிலேயே பொருள்தரும் தமிழ் அகராதி மட்டுமன்றித் ‘தமிழ் – இலத்தீன் அகராதி’, ‘போர்த்துகீசியம் – தமிழ் – இலத்தீன் அகராதி’ என்ற இரு வேறு அகராதிகளையும் அவர் ஆக்கியுள்ளார். அஃதாவது அவர் மொத்தம், மூவகை அகராதிகளை இயற்றியுள்ளார். அதன்மூலம், தமிழில் புதுமை படைத்ததோடு, பிறமொழியினர் தமிழ் மொழியைக் கற்பதற்கும் வழி வகுத்துள்ளார். நம் அன்னைத் தமிழுக்கு வீரமாமுனிவர் ஆற்றியுள்ள அரும்பணியை நம்மால் ஒருநாளும் மறக்கவே முடியாது.

இலக்கண இலக்கிய நூல்களை எழுதிய வீரமாமுனிவர் தமிழ் எழுத்துக்களையும் சீர்திருத்தினார். அக்காலத்தில் ‘எ’ என்னும் குறில் எழுத்தை ‘எ்’ என்றும் ‘ஏ’ என்னும் நெட்டெழுத்தை ‘எ’ என்னும் புள்ளியில்லாமலும் எழுதுவர். கொடு, கோடு என்னும் சொற்களை , கெ்ாடு, கொடு என்று எழுதுவர். இவற்றின் புள்ளிகளை நீக்கிச் சீர்திருத்தியவர் வீரமாமுனிவரே ஆவார்.

எ் – எ	**கெ் – கெ**	**கெ்ா – கொ**
எ – ஏ	**கெ – கே**	**கொ – கோ**

என்று புள்ளியை நீக்கிக் கொம்பை இருபுறம் சுழித்து மாற்றினார். இன்று நாம் எழுதும் எழுத்துகள் வீரமாமுனிவரின் மொழியறிவாலும் முயற்சியாலும் கிடைத்தவை.

தமிழ்த் தாய்க்கு பல்வேறு துறைகளில் தொண்டாற்றிய வீரமாமுனிவர் தமிழ்த் தாயின் தவப்புதல்வர் எனப் போற்றப்பட்டது பொருத்தமன்றோ!.

மறைவு : 04.02.1746

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை சார்பில், ரூ.5 கோடி மதிப்பீட்டில் ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்கு அன்னை சத்தியா அம்மையார் நினைவு அரசு குழந்தைகள் காப்பகம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 04.11.2020 அன்று தலைமைச்செயலகத்தில், காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 04.11.2020 அன்று தலைமைச் செயலகத்தில், சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை சார்பில் மதுரை மாவட்டம், மதுரை, டாக்டர் தங்கராஜ் சாலையில் அன்னை சத்தியா அம்மையார் அரசு குழந்தைகள் காப்பகத்திற்கு ரூ.5 கோடி மதிப்பீட்டில், துயிற்கூடங்கள், சமையலறை, வகுப்பறைகள், அலுவலக அறைகள் உள்ளிட்ட அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தை திறந்து வைத்தார்கள்.

குழந்தை நலக் குழுக்கள் வழியாக இளைஞர் நீதி அமைப்பின் கீழ் வரும், பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளை அரசு குழந்தை இல்லங்களில் அனுமதித்து அவர்களுக்கு பாதுகாப்பு, நீண்ட கால பராமரிப்பு, பிரச்சினைகளுக்கான தீர்வு, கல்வி, பயிற்சி, மேம்பாடு மற்றும் மறுவாழ்வு வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 13.06.2018 அன்று சட்டப்பேரவை விதி எண் 110இன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், “ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகள் வழங்க தமிழ்நாடு அரசால் காப்பகங்கள் ஏற்படுத்தப்பட்டன. மதுரையில் செயல்படும் அன்னை சத்தியா அரசு குழந்தைகள் காப்பகம், 1986ஆம் ஆண்டிலிருந்து மாநகராட்சி கட்டடத்தில் இயங்கி வருகின்றது. தற்போது இக்கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், ஒரு புதிய கட்டடம், துயிற்கூடம், குழந்தைகள் நலக் குழு அறை, வகுப்பறை, தொழிற் பயிற்சி கூடம் மற்றும் உணவுக் கூடம் ஆகியவை கட்டப்படும்’’ என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, மதுரை மாவட்டம், மதுரை, டாக்டர் தங்கராஜ் சாலையில் 2,210 சதுர மீட்டர் பரப்பளவில், ரூ.5 கோடி மதிப்பீட்டில், 100 குழந்தைகள் தங்கி பயனடையும் வகையில் துயிற்கூடங்கள், சமையலறை, உணவுக்கூடம், வகுப்பறைகள், கண்காணிப்பாளர் அறை, அலுவலக அறைகள், பணியாளர் அறைகள் மற்றும் ஆலோசனை / ஆற்றுப்படுத்தும் அறை உள்ளிட்ட அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள அன்னை சத்தியா அம்மையார் அரசு குழந்தைகள் காப்பகத்தின் புதிய கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.



PLEASURE BOATING IN THE COOUM

Phases of Work—

" As a first phase of work, one 35 feet width sluice (Madaku) with two letouts and a jetty of 250 feet length have been constructed at a total cost of Rs. 66 lakh.

" The second phase of work is slabbing both sides of the Cooum from Chetput railway station to Napier Bridge a distance of more than six miles, plus paving a 10 feet width pedestrian path on both sides of the Cooum all along the same distance and construction of 8 ferry stops throughout the length of the Cooum. This work had been executed at a cost of Rs. 1.5 crore.

Nor is this all. To prove that this government is not only interested in reclaiming the river so as to make it suitable for pleasure boating but also it holds dear and near to its heart the welfare of the hut dwellers, the government has constructed *941 fire proof huts to provide dwelling place for almost all hut dwellers displaced from the banks of the river, at a cost of Rs. 12 lakhs. Thus the total expenditure in all works out to Rs.2.28 crore.



கொரோனா தொற்றால் பாதிக்கப்படும் மக்களின் அவசர தேவைக்காக ரூ.1.14 கோடி மதிப்பீட்டில் அதிநவீன திரவ பிராணவாயுக் கலன்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 04.11.2020 அன்று தலைமைச் செயலகத்தில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை சார்பில், சேலம் மாவட்டம், சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 1 கோடியே 14 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள 35,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட அதிநவீன திரவ பிராணவாயுக் கலனை காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலமாக புதிதாக தெரிவு செய்யப்பட்ட 95 சிறப்பு மருத்துவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 மருத்துவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

கொரோனா தொற்றால் பாதிக்கப்படும் மக்களின் அவசர தேவைகளை கருதி தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டது. அத்தகைய நடவடிக்கைகளில், அரசு மருத்துவமனைகளில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சிகிச்சைக்கு முக்கிய தேவையான ஆக்ஸிஜன் தங்கு தடையின்றி வழங்க ஏதுவாக திரவ ஆக்ஸிஜன் கொள்ளளவை உயர்த்தியதும் ஒன்றாகும்.

கொரோனா பாதிப்புக்கு முன்பாக 34 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் இருந்த திரவ ஆக்ஸிஜன் மொத்த கொள்ளளவு 355.1 கிலோ லிட்டர் ஆகும். இந்த கொள்ளளவை மேலும் 36 அரசு மருத்துவ

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 04.11.2020 அன்று தலைமைச் செயலகத்தில், அதிநவீன திரவ பிராணவாயுக் கலனை காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் கூடுதலாக 30 புதிய ஆக்ஸிஜன் கொள்கலன்கள் பல்வேறு அளவுகளில் கொள்முதல் செய்யப்பட்டு 413.5 கிலோ லிட்டர் அளவுக்கு உயர்த்தி, அதன்மூலம் மொத்த கொள்ளளவு 834 கிலோ லிட்டர் அளவுக்கு உயர்த்த முடிவு செய்யப்பட்டது. அதன்படி, 70 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் புதிய சேமிப்பு கலன்கள் மற்றும் ஏற்கெனவே இருந்த குறைந்த சேமிப்பு கலன்களுக்கு பதிலாக உயர் கொள்ளளவு சேமிப்பு கலன்கள் 11 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டு வருகிறது.

திரவ ஆக்ஸிஜன் கொள்ளளவை உயர்த்துவதன் ஒரு பகுதியாக, சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஏற்கெனவே இருந்த 6,000 லிட்டர் கொள்ளளவு கலனுக்கு பதிலாக அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளிலேயே மிக உயர்ந்த கொள்ளளவான 35,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட அதிநவீன திரவ பிராணவாயுக் கலனை 1 கோடியே 14 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவி, நோயாளிகளுக்கு தங்கு தடையின்றி, ஆக்ஸிஜன் வழங்கப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

பணிநியமன ஆணை

அரசு மருத்துவமனைகளில் ஏற்படும் காலிப் பணியிடங்கள் மற்றும் புதியதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்களை உடனுக்குடன் நிரப்பி, அரசு மருத்துவ நிலையங்களுக்கு வரும் ஏழை, எளிய மக்களுக்கு தங்கு தடையின்றி மருத்துவ சேவை வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்திற்காக, இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழ்நாட்டில் சுகாதாரத் துறைக்கென மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் ஜனவரி 2012இல் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் துவக்கப்பட்டது. இவ்வாரியம் இதுவரை, 16,120 மருத்துவர்கள் மற்றும் சிறப்பு மருத்துவர்கள், 24,849 செவிலியர்கள் உட்பட 50,121 மருத்துவம் மற்றும் மருத்துவம் சாராப் பணியாளர்களை தெரிவு செய்துள்ளது.

அந்த வகையில், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலமாக அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிதாக தெரிவு செய்யப்பட்ட 95 சிறப்பு மருத்துவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 8 மருத்துவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

நவம்பரில் பூத்த செம்மொழிச் சிற்பிகள்...

கி.ஆ.பெ.விசுவநாதம்

தோற்றம் : 10.11.1899

முத்தமிழ்க்காவலர் என போற்றப்பட்டவர். 75 ஆண்டுகளாக குறள் பரப்பும் பணியைத் தன் எழுத்தாலும் பேச்சாலும் மேற்கொண்டவர். வள்ளுவர் கோட்டம் அமைய முக்கியக் காரணியாக இருந்தவர். தமிழ் மேல்கொண்ட பற்றின் காரணமாக 25க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தால் டாக்டர் பட்டம் கொடுத்துப் பாராட்டப்பட்டவர்.

கி.ஆ.பெ. விசுவநாதம் திருச்சியில் பிறந்தவர். தந்தை பெரியண்ணன், தாயார் சுப்பம்மாள். பள்ளிக்குச் சென்று படிக்காமலே ஆசிரியரிடம் மணலில் எழுதிப்படித்து மனப்பாடம் செய்து தமிழ் கற்று பெரும் புலவர் ஆனவர்.

சங்கம் வைத்து தமிழ் வளர்த்தது போல தானும் தமிழ் வளர்க்க ஆசைப்பட்டு நாற்பத்து ஆறுபேர் கொண்ட புலவர் குழு ஒன்றை உருவாக்கி அதன் தலைமையிடமாகத் தன் வீட்டையே மாற்றினார். அதே போல தமிழரின் மரபான சித்த மருத்துவம் அழிந்துவிடாமல் தடுக்க முயற்சி மேற்கொண்ட விசுவநாதம் அதற்காக தமிழக அரசு தனியாக ஒரு வாரியம் அமைக்கக் காரணமாக இருந்தார்.

அறிஞர் அண்ணா தலைமையில் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டிற்கு அண்ணாவால் மாநாட்டின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

1965இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு உயிர்நீத்த 26 மாணவர்களின் தியாகத்தைப் போற்றும் விதமாக ஒவ்வொரு மாதமும் 26ஆம் தேதியன்று உண்ணா நோன்பு மற்றும் பேசா நோன்பு ஆகியவற்றை இறக்கும் வரை கடைப்பிடித்து வந்தார் என்பது அவரது தமிழ் ஆர்வத்திற்கு அவர் விட்டுசெல்லும் இணையற்ற சான்று.

மறைவு : 19.12.1994

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை சார்பில், தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 04.11.2020 அன்று தலைமைச் செயலகத்தில், காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 04.11.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை சார்பில், சென்னை, கிண்டியில் அமைக்கப்பட்டுள்ள சுகாதார நலனுக்கான தமிழ்நாடு உயர் திறன் மேம்பாட்டு மையம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடத்தில் உள்ள இன்டோஸ்பேஸ் தொழிற் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள சரக்கு நகர்வு மேலாண்மை மற்றும் போக்குவரத்து பிரிவிற்கான தமிழ்நாடு உயர் திறன் மேம்பாட்டு மையம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு முதலீட்டு மேம்பாட்டுத் திட்டம் – நிலை IIஇன் ஒரு பகுதியாக ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகமை (JICA) மற்றும் தமிழ்நாடு அரசிற்குமிடையே 50:50 விகிதாசார பங்களிப்புடன் ரூ.20 கோடி திட்ட மதிப்பீட்டில் சுகாதார நலனுக்கான தமிழ்நாடு உயர் திறன் மேம்பாட்டு மையம் (TN Apex Skill Development Centre for Healthcare) அமைக்க நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் பங்காக ஒரு கோடி ரூபாயும், தொழில் நிறுவன கூட்டமைப்பின் சரிசமப் பங்காக காவேரி மருத்துவமனையின் ஒரு கோடி ரூபாய் பங்களிப்புடன், பொது மற்றும் தனியார் கூட்டமைப்பாக, இலாப நோக்கமற்ற நிறுவனமாக சென்னை, கிண்டியில் அமைக்கப்பட்டுள்ள சுகாதார நலனுக்கான தமிழ்நாடு உயர் திறன் மேம்பாட்டு மையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இம்மையத்தில் உலக தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு வசதிகள் கொண்ட வகுப்பறைகள், ஆடியோ காட்சி விரிவுரை அரங்கம், நிர்வாக அலுவலகங்கள், மாநாடு மற்றும் உள்கூட்ட அரங்குகள் போன்ற கட்டமைப்பு வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மையத்தின் மூலமாக மருத்துவர்கள், செவிலியர்கள், நிர்வாகப் பணியாளர்கள் மற்றும் அனைத்து நிலை சுகாதார பணியாளர்களுக்கும் உயர்நிலை திறன் பயிற்சி மற்றும் உயர் தொழில்நுட்ப திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு, உயரிய வேலைவாய்ப்பினை அவர்கள் பெற உறுதி செய்வதே இம்மையத்தின் முக்கிய நோக்கமாகும்.

மேலும் இம்மையத்துடன் 'World Health Organization' எனப்படும் 'உலக சுகாதார அமைப்பும்' கைகோர்த்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். தற்போதைய Covid–19 நோய்த் தொற்றால் ஏற்பட்ட பேரிடரை கருத்தில் கொண்டு உலக சுகாதார அமைப்புடன் இணைந்து Covid–19 தொற்று தொடர்புடைய பயிற்சி பாடத்திட்டத்தினை தொடங்குகிறது.

தமிழ்நாடு முதலீட்டு மேம்பாட்டுத் திட்டம் – நிலை IIஇன் ஒரு பகுதியாக ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகமை (JICA) மற்றும் தமிழ்நாடு அரசிற்குமிடையே 50:50 விகிதாசார பங்களிப்புடன் 20 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் சரக்கு நகர்வு மேலாண்மை மற்றும் போக்குவரத்து பிரிவிற்கான தமிழ்நாடு உயர் திறன் மேம்பாட்டு மையம் (TN Apex Skill Development Centre for Logistics) அமைக்க நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் பங்காக ஒரு கோடி ரூபாயும், தொழில் நிறுவன கூட்டமைப்பின் சரிசமப் பங்காக, சரக்கு நகர்வு மேலாண்மைக்கான துறை திறன் குழுமத்தின் (Logistics Sector Skill Council) ஒரு கோடி ரூபாய் பங்களிப்புடன், பொது மற்றும் தனியார் கூட்டமைப்பாக இலாப நோக்கமற்ற நிறுவனமாக காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடத்தில் உள்ள இன்டோஸ்பேஸ் தொழிற் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள சரக்கு நகர்வு மேலாண்மை மற்றும் போக்குவரத்து பிரிவிற்கான தமிழ்நாடு உயர் திறன் மேம்பாட்டு மையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். இம்மையத்தில் உலகத் தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு வசதிகளுடன் சரக்கு நகர்வு மேலாண்மை குறித்த உயர் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

வாணியம்பாடியில் புதிய பல்நோக்கு திறன் மேம்பாட்டு மையம் அமைத்திட புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளுதல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 28.11.2019 அன்று நடைபெற்ற திருப்பத்தூர் மாவட்ட தொடக்க விழாவில், தோல் பதனிடும் தொழிலை மேம்படுத்தும் வகையில், வாணியம்பாடியில் புதிய பல்நோக்கு திறன் மேம்பாட்டு மையம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள்.

அதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், தோல் பதனிடுதல் துறையில் பல்நோக்கு திறன் மேம்பாட்டு மையம் வாணியம்பாடியில் 20 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்திட, மத்திய காலணி பயிற்சி நிறுவனத்திற்கும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

நவம்பரில் பூத்த செம்மொழிச் சிற்பிகள்...

வல்லிக்கண்ணன்

தோற்றம் : 12.11.1920



திருநெல்வேலியில் திசையன்விளையில் பிறந்தவர். தந்தை ராஜவல்லிபுரம் மு. சுப்ரமணிய பிள்ளை, தாயார் மகமாயி, பெற்றோர் இட்டபெயர் கிருஷ்ணசாமி. கவிஞர், சிறுகதை எழுத்தாளர், விமர்சகர், மொழிபெயர்ப்பாளர் எனப் பல்வேறு வடிவங்களில் இலக்கியத்துக்காகத் தன் வாழ்வை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர். 86 வருடங்களில் 75 நூல்கள் என எழுதத் தெரிந்த நாள் துவங்கி வருடத்துக்கு ஒன்று என்ற கணக்கில் இடைவிடாமல் எழுதிக் குவித்தார். எளிமை, அதிரப் பேசாத பண்பு, தனக்கு வரும் புத்தகங்கள் அனைத்தையும் கூடுமானவரைப் படித்து விமர்சனம் செய்து அதைக் கடமையாக எண்ணி வாழ்க்கை முழுமையாக நவீன இலக்கியத்திற்கு ஒப்புக்கொடுத்த பண்பு ஆகியவை பேரிலக்கியங்களுக்கு ஈடானவை.

மறைவு : 09.11.2006

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்

தோற்றம் : 28.11.1839

நெல்லை மாவட்டம், நெற்கட்டும் செவல் எனும் ஊரில் பிறந்தார். தந்தை செந்திநாயகம் பிள்ளை, தாயார் பேச்சிமுத்தம்மை. ஆலயங்களில் தமிழ் வழிபாட்டை வலியுறுத்திய தமிழ்த் துறவி. வடலூராரைப் போலவே இவரும் சமய சீர்திருத்தக் கருத்துகளையும் சமய ஒற்றுமையையும் வலியுறுத்திப் பாடல்கள் புனைந்தவர். தமிழ்த்தொண்டுக்காகத் துறவு பூண்டு வாழ்வை அர்ப்பணித்தவர்.

மறைவு : 05.07.1898

கோவிட்-19க்கு எதிரான, மக்கள் இயக்க விழிப்புணர்வு விளம்பர வாகனங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 28.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 28.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் கோவிட்–19க்கு எதிரான 33 எண்ணிக்கையிலான மக்கள் இயக்க விழிப்புணர்வு விளம்பர வாகனங்களை துவக்கி வைக்கும் அடையாளமாக, 7 வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள். மேலும், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் கோவிட்–19 தொடர்பான விழிப்புணர்வு குறும்படங்கள் மற்றும் குறும்பாடல்கள் அடங்கிய குறுந்தகட்டினை வெளியிட்டு, கோவிட்–19 தொற்றை கட்டுப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வு கையேடுகளை பார்வையிட்டார்கள்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் 08.10.2020 அன்று, கோவிட்–19க்கு எதிரான மக்கள் இயக்கத்தினை நாடு முழுவதும் தொடங்கி வைத்து, கோவிட்–19க்கு எதிரான போராட்டத்தில் அனைவரும் இணைய வேண்டுகோள் விடுத்தார்கள். **“முகக்கவசம் அணிய வேண்டும், கை கழுவ வேண்டும், தனி மனித இடைவெளியை கடைப்பிடிக்க வேண்டும், 6 அடி தூர இடைவெளி நடைமுறையை பின்பற்ற வேண்டும்” என்று வலியுறுத்தியுள்ள மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், நாம் ஒன்றாக வெற்றி பெறுவோம், கொரோனாவை வெல்வோம் என கூறியுள்ளார்.**

தமிழகத்தில் கோவிட்–19 தொற்று பரவலைத் தடுக்கும் பொருட்டும், மக்களிடையே கோவிட்–19 தொற்று குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும், நாளிதழ்கள் மற்றும் தொலைக்காட்சிகளில் கொரோனா தொற்று தொடர்பான அரசின் செய்தி குறிப்புகள் மற்றும் செய்தி வெளியீடுகள் வெளியிடப்பட்டு வருகிறது. கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோர் மற்றும் குணமடைந்தோரின் புள்ளி விவரங்கள் தினசரி அறிக்கையாக வெளியிடப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கொரோனா தடுப்பு தொடர்பான வேண்டுகோள், தொலைக்காட்சிகளிலும் மற்றும் தனியார் உள்ளூர் தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பு

செய்யப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விழிப்புணர்வு வேண்டுகோள் குரல் அழைப்புகளாகவும், குறுஞ்செய்திகளாகவும் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் மூலம் பொதுமக்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றுப் பரவலை தடுப்பது குறித்து பொதுமக்களுக்கு போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் "மக்கள் செய்யக் கூடியது மற்றும் செய்யக்கூடாதது", "தனிமைப்படுத்தப்பட்ட வீட்டில் உள்ளவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள்", "தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கான மனநல ஆலோசனை", "அறிந்து கொள்ளுங்கள்" உட்பட 24 தலைப்புகளில் துண்டு பிரசுரங்கள் மற்றும் மடிப்பேடுகள் தயாரிக்கப்பட்டு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் மாநகராட்சி / நகராட்சியை ஒட்டியுள்ள மக்கள் தொகை அதிகமாக உள்ள ஊராட்சி பகுதிகளில் வீடுதோறும் விநியோகிக்கப்பட்டுள்ளது.

வாகனங்கள் மூலம் விழிப்புணர்வு பிரச்சாரம்

அதேபோல, மாநகராட்சி, நகராட்சி பகுதிகளில் மக்களுக்கு காவல் துறை வாகனம் மற்றும் ஆட்டோக்கள் மூலம் விழிப்புணர்வு பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் கலைக்குழுவினர் மூலம் கொரோனா குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இதுவரை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோள், மருத்துவர்கள் மற்றும் காவல்துறையினர் பொதுமக்களுக்கு விடுத்த வேண்டுகோள், பொதுமக்களுக்கான அறிவுரை, மூத்த குடிமக்களுக்கான அறிவுரை, தொழிற்சாலை / அலுவலகங்களில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், கடைகள் / மீன் மார்கெட்களில் தனி மனித இடைவெளியை பின்பற்றுவதின் அவசியம், வீட்டில் தனிமைப்படுத்துதல் – செய்யக்கூடியது செய்யக்கூடாதது, பொதுமக்களுக்கு கொரோனா நோயாளியின் அறிவுரை, முகக்கவசம் அணிதலின் அவசியம், அடிக்கடி கை கழுவுதல் மற்றும் தனி மனித இடைவெளியை கடைபிடித்தலின் அவசியம் போன்ற கொரோனா தொடர்பான 54 விழிப்புணர்வு குறும்படங்கள் / குறும்பாடல்கள் செய்தி மக்கள் தொடர்புத்துறை, சுகாதாரத்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பிற துறைகளால் தயாரிக்கப்பட்டு அனைத்து தொலைக்காட்சி சேனல்களுக்கும், தனியார் உள்ளூர் சேனல்களுக்கும் வழங்கப்பட்டு தொடர்ந்து ஒளிபரப்பப்பட்டு பொதுமக்களிடையே போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக கோவிட்–19க்கு எதிரான 33 எண்ணிக்கையிலான மக்கள் இயக்க விழிப்புணர்வு விளம்பர வாகனங்களை துவக்கி வைக்கும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 7 வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.

விழிப்புணர்வு குறும்படங்கள், குறும்பாடல்கள்

மேலும், கோவிட்–19 தொடர்பான விழிப்புணர்வு குறும்படங்கள் மற்றும் குறும்பாடல்கள் அடங்கிய குறுந்தகட்டினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்களும், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜூ அவர்களும் பெற்றுக் கொண்டார்கள். மேலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் எல்.இ.டி. விளம்பர வாகனத்தில் ஒளிபரப்பப்பட்ட கோவிட்–19 தொடர்பான விழிப்புணர்வு குறும்பாடல்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள்.

அதனைத் தொடர்ந்து, கோவிட்–19 தொற்றை கட்டுப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வு கையேடுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள்.

நவம்பரில் பூத்த செம்மொழிச் சிற்பிகள்...

கீழச்சேரி இராமலிங்கனார்

தோற்றம் : 12.11.1899

சென்னையை அடுத்த திருவள்ளூர் அருகே கீழச்சேரி எனும் கிராமத்தில் பிறந்தவர். தந்தை இரத்தினம், தாயார் பாக்கியம்மாள். ஆட்சி மொழிக் காவலர் என அன்புடன் அறிஞர்களால் அழைக்கப் பெற்றவர். ஆங்கிலத்திலும், உருதுவிலும், வடமொழிச் சொற்களாலும், புரைமண்டிக் கிடந்த ஆட்சிமொழிச் சொற்களுக்கு தமிழில் சொல் கண்ட பெருந்தகையர். ஆட்சித்துறை தமிழ், ஆட்சி மொழி அகராதி எனும் நூல்களைத் தொகுத்தவர். தமிழ் ஆர்வலர், தமிழ் திருமண வழிபாட்டு முறைக்கெனத் தனியே ஒரு நூலை எழுதி தொடர்ந்து பலருக்கும் தமிழில் திருமணம் செய்வித்தவர்.

மறைவு : 1986

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் வாழ்க்கை வரலாற்றுச் சுவடுகள்

தந்தை	:	உக்கிரபாண்டியத் தேவர்
தாய்	:	இந்திராணி அம்மையார்
பிறந்த நாள்	:	30.10.1908
குடும்பம்	:	இராமநாதபுரம் சேதுபதி மன்னர் ஆளுகைக்குட்பட்ட ஜமீன் குடும்பம்
கல்வி	:	ஆறாம் படிவம் (இன்றைய பள்ளி இறுதித் தேர்வு)
இளமையில் பயின்றவை	:	சிலம்பம், மற்போர், குதிரையேற்றம், துப்பாக்கி சுடுதல், வர்மக்கலை
அரசியல் ஈடுபாடு	:	1927இல் சென்னையில் சீனிவாச ஐயங்காருடன் நேதாஜியை சந்தித்த பின்.
முதல் மேடைப் பேச்சு	:	23.06.1933 சாயல்குடி – விவேகாநந்தர் வாசகர் சாலை திறப்பு விழாவில்.
சுதந்திரத்திற்கு முன்னர் சந்தித்த தேர்தல் களம்	:	1937இல் சென்னை மாகாண சபை தேர்தலில் சேதுபதி மன்னரை எதிர்த்து.
சுதந்திரப் போராட்டம் மற்றும் சமூகப் போராட்டம்	:	குற்றம் பரம்பரைச் சட்டம் எதிர்ப்பு போராட்டம் தொழிற் சங்க போராட்டங்கள் ஜமீன்தாரி முறை ஒழிப்பு போராட்டம் அரிஜன மக்களுக்கான ஆலய நுழைவுப் போராட்டம்
பணியாற்றிய அரசியல் கட்சிகள்	:	1939 வரை இந்திய தேசீய காங்கிரஸ் 1939ற்கு பின் பார்வர்டு பிளாக்
சுதந்திர இந்தியாவில் மக்கள் பிரதிநிதித்துவம்	:	1952 – முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்
	:	1957 – ஸ்ரீவில்லிபுத்தூர் பாராளுமன்றத் தொகுதி உறுப்பினர்
	:	1962 – அருப்புக்கோட்டை பாராளுமன்றத் தொகுதி உறுப்பினர்
ஆற்றிய பிற பணிகள்	:	1949இல் "நேதாஜி" பத்திரிக்கையின் ஆசிரியர்
வாழ்ந்த நாட்கள்	:	20,075
சிறையிலிருந்த நாட்கள்	:	4000
மறைவு	:	30.10.1963

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயிகளின் வாழ்வாதாரமாக விளங்கும் இன்கோசேர்வ் தேயிலை தொழிற்சாலையை நவீனப்படுத்த ரூ.17.68 கோடி கடனுதவி வழங்கப்படும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் தலைமையில் 06.11.2020 அன்று, நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் அரசு விருந்தினர் மாளிகையில் நடைபெற்ற மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தடுப்புப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து....

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த காலத்தில், நீலகிரி மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்தார்கள். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நீலகிரி மாவட்ட மக்களின் நன்மை கருதி பல்வேறு திட்டங்களைத் தொடங்கி, நடைமுறைப்படுத்தி மக்களுடைய எண்ணங்களை நிறைவேற்றியவர். நீலகிரி மாவட்டம் என்றால் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நினைவுதான் வரும். அந்தளவிற்கு நீலகிரி மாவட்ட மக்கள் மீது அன்பு கொண்டவர். ஆகவே, நீலகிரி மாவட்ட மக்களின் எண்ணங்களை நிறைவேற்றுகிற அரசாக அம்மாவின் அரசு தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

நீலகிரி மாவட்டத்தில் மாவட்ட தலைமை மருத்துவமனையும், பல்வேறு அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளும் இருந்தாலும்கூட, இங்குள்ள மக்கள் உயர்தர சிகிச்சை பெற கோயம்புத்தூர் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு அம்மாவின் அரசு, நீலகிரி மாவட்டத்தில் ரூ.447.32 கோடி மதிப்பீட்டில் உயர்தர சிகிச்சை அளிக்க மருத்துவமனையுடன் கூடிய அரசு மருத்துவக் கல்லூரி உருவாக்கப்படும் என்று அறிவித்து, கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இக்கல்லூரியில், ஆண்டுதோறும் 150 மாணவ, மாணவிகள் மருத்துவக் கல்வி பயிலக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நீலகிரி

மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கையான அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை ஆகிய இரண்டையும் நிறைவேற்றித் தந்த அரசு அம்மாவின் அரசு என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இங்குள்ள மலைவாழ் மக்கள், குறிப்பாக பெண்கள் சுயமாகத் தொழில் தொடங்குவதற்கு மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு அதிகளவில் நிதியுதவி வழங்கப்படுகிறது. 2020–2021ஆம் ஆண்டு மட்டும் கோவிட்–19 சிறப்பு நிதிக் கடனாக ரூ.56 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 861 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.7.54 கோடி வழங்கியுள்ளோம். நீலகிரி மாவட்டத்தில் 8,247 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் 25,339 பெண்கள் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர். கடந்த 2019–2020ஆம் நிதியாண்டில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பாக ரூ.225 கோடி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, ரூ.225 கோடியும் முழுமையாக வழங்கப்பட்டு இலக்கு அடையப்பட்டது. 2020–2021ஆம் நிதியாண்டில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பாக ரூ.281 கோடி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு தற்போது வரை 185 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல, பேரூராட்சி பகுதிகளில் 2015–2016ஆம் ஆண்டு முதல் 2018–2019 வரை அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 2,394 பயனாளிகளுக்கு வீடு கட்ட அனுமதி அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. பழங்குடியினருக்கான வீடு கட்டும் திட்டத்தின் கீழ், 153 வீடுகள் ரூ.382 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கின்றது. நீலகிரி மாவட்டத்தில் பழங்குடியினருக்காக ஒரு தொழிற்பயிற்சி நிலையம் ரூ.2.68 கோடி மதிப்பீட்டில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. உள்ளாட்சித்துறை மூலம் 1,794 வீடுகள் ரூ.44 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன.

ஜென்ம நிலங்களின் மொத்த விஸ்தீரணம் 80,088 ஏக்கர் ஆகும். ஜென்ம நிலத்தில் வன நிலமாக மாற்றப்பட்டது 29,948 ஏக்கர். ஜென்ம நிலத்திலுள்ள 6 பழங்குடியின குக்கிராமங்களுக்கு வன உரிமை சட்டம் 2006இன் கீழ், நீலகிரி மாவட்டத்தில் 1,663 தனிநபர்களுக்கும், 111 இனங்கள் சமுதாய உரிமைகளுக்காகவும் வழங்கப்பட்டிருக்கிறது. ஜென்ம நிலத்தில் வசிக்கும் பழங்குடியினருக்கு 1,317 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன, குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு உள்ளன. மின் இணைப்பும் வழங்கப்பட்டுள்ளது. சுமார் ரூ.6.62 கோடி மதிப்பீட்டில் 49 சாலைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. 295 எண்ணிக்கையிலான தனிநபர் உரிமைகள் வன உரிமைச் சட்டம் 2006இன் கீழ் முதுமலை புலிகள் காப்பக எல்லைக்குட்பட்ட பகுதியில் வழங்கப்பட்டுள்ளது. இப்படி பல்வேறு திட்டங்களை நீலகிரி மாவட்டத்தில் வாழ்கின்ற மக்களுக்காக அம்மாவின் அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, தொழில் துறையிலும் பல திட்டங்களை அம்மாவின் அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. நீலகிரி மாவட்டத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறைக்கு முன்னுரிமை அளித்து செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதோடு இன்கோசேர்வ், நீலகிரி மாவட்டத்தில் சிறு தேயிலை விவசாயிகளின் வாழ்வாதாரமாக செயல்படுவதோடு மட்டுமல்லாமல், இப்பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கு ஊன்றுகோலாகவும் இருந்து வருகிறது. கைகாட்டி, குந்தா, மஞ்சூர், பந்தலூர், சாலிஸ்பரி ஆகிய இடங்களில் செயல்படும் இன்கோசேர்வின் தொழிற்சாலைகளில் உள்ள பழுதடைந்த இயந்திரங்களை மாற்றி, புதிய இயந்திரங்கள் பொருத்தவும், இயங்கும் இயந்திரங்களை மேம்படுத்தவும், அடிப்படை புனரமைப்புவதற்கும், நவீனப்படுத்துவதற்கும் ரூ.17.68 கோடி நபார்டு திட்டத்தின் மூலம் கடனுதவி பெற்று வழங்கப்படும். இந்த இயந்திரங்களெல்லாம் மாற்றப்பட்டு நவீனப்படுத்துவதன் மூலமாக, இந்த நிறுவனம் மென்மேலும் வலிவும் பொலிவும் பெறும் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு, மாண்புமிகு அம்மாவின் அரசு சிறு, குறு விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி இருக்கிறது. நீலகிரி மாவட்டத்தில் இதுபோன்று பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, நீலகிரி மாவட்ட மக்களுடைய பிரச்சினைகளை படிப்படியாக தீர்ப்பதற்கு அரசு முனைப்புடன் செயல்படும்.

நீலகிரி மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 06.11.2020 அன்று நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் அரசு விருந்தினர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ரூ.189.35 கோடி மதிப்பீட்டிலான 67 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, ரூ.131.57 கோடி மதிப்பீட்டிலான 123 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 06.11.2020 அன்று நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் அரசு விருந்தினர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் சார்பில் பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலியை பயனாளிக்கு வழங்கினார்கள். உடன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி, சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.ராமு, நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஜெ. இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப., நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் திரு. கப்பச்சி டி. வினோத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

புதியதாக உருவாக்கப்பட்ட கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பெருந்திட்ட வளாகம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்
23.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 23.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், வீரசோழபுரத்தில் 104 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்திற்கும், செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், வேண்பாக்கத்தில் 119 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்திற்கும், காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 08.01.2019 அன்று சட்டப்பேரவையில், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் உரையின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு பிறகு ஆற்றிய பதிலுரையில், விழுப்புரம் மாவட்டம், பெரிய மாவட்டமாக இருப்பதால், நிருவாக வசதிக்காக விழுப்புரம் மாவட்டத்தை பிரித்து கள்ளக்குறிச்சியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் தோற்றுவிக்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பிற்கிணங்க 12.11.2019 அன்று கள்ளக்குறிச்சி புதிய மாவட்டம் தோற்றுவிக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, கள்ளக்குறிச்சி பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், விழுப்புரம் மாவட்டத்திலிருந்து பிரித்து தமிழ்நாட்டின் 34ஆவது மாவட்டமாக உருவாக்கப்பட்ட கள்ளக்குறிச்சி மாவட்டத்தை 26.11.2019 அன்று நடைபெற்ற விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

புதியதாக உருவாக்கப்பட்ட கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு, கள்ளக்குறிச்சி வட்டம், வீரசோழபுரத்தில் 104 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 26,482 சதுர மீட்டர் பரப்பளவில், தரை மற்றும் 8 தளங்களுடன் கட்டப்படவுள்ள கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். இப்புதிய வளாகத்தில், வருவாய்த் துறை, பொதுப்பணித் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சமூக நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை அலுவலகங்கள், திட்ட இயக்குநர் அலுவலகம், குழந்தைகள் நல வாரியம், தொழிலாளர் நலத்துறை, மாவட்ட பதிவாளர் அலுவலகம், மாவட்ட நூலகம், பட்டு வளர்ச்சித் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, சுற்றுலாத் துறை, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், கருவூல அலுவலகம், கடவுச்சீட்டு அலுவலகம், சமூக பாதுகாப்பு திட்ட அலுவலகம் போன்ற துறைகளின் அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படவுள்ளன.

புதியதாக உருவாக்கப்பட்ட செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பெருந்திட்ட வளாகம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 23.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 18.07.2019 அன்று சட்டப்பேரவை விதி எண் 110இன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், காஞ்சிபுரம் மாவட்டத்தைப் பிரித்து செங்கல்பட்டை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் தோற்றுவிக்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பிற்கிணங்க 12.11.2019 அன்று செங்கல்பட்டு புதிய மாவட்டம் தோற்றுவிக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, செங்கல்பட்டுப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், காஞ்சிபுரம் மாவட்டத்திலிருந்து பிரித்து தமிழ்நாட்டின் 37ஆவது மாவட்டமாக உருவாக்கப்பட்ட செங்கல்பட்டு மாவட்டத்தை 29.11.2019 அன்று நடைபெற்ற விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

புதியதாக உருவாக்கப்பட்ட செங்கல்பட்டு மாவட்டத்திற்கு, செங்கல்பட்டு வட்டம், வேண்பாக்கத்தில் 119 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 27,062 சதுர மீட்டர் பரப்பளவில், தரை மற்றும் 4 தளங்களுடன் கட்டப்படவுள்ள செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். இப்புதிய வளாகத்தில், வருவாய்த் துறை, பொதுப்பணித் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சமூக நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், கருவூல அலுவலகம், சமூக பாதுகாப்பு திட்ட அலுவலகம், ஆதார் / இ–சேவை மையம், எல்காட் அலுவலகம், கடவுச்சீட்டு அலுவலகம், மாவட்ட முதன்மை கல்வி அலுவலகம் போன்ற துறைகளின் அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படவுள்ளன.

உணவின் மூலம் சைனஸ்க்கான தீர்வு

உணவில் சேர்க்க வேண்டியவை :

தேன், மிளகு, பூண்டு, முட்டை, கோழி போன்ற உணவுகளை தினசரி சேர்க்க வேண்டியது அவசியமாகும். இதனால் சைனஸ் பிரச்சினைகளில் இருந்து விடுதலை பெற முடியும்.

உணவில் தவிர்க்க வேண்டியவை :

குளிர்ச்சியான உணவுகள், குளிரூட்டப்பட்ட அறை, வாழைப்பழம், திராட்சைப் பழம், தர்பூசணி, ஐஸ்கிரீம் போன்ற பொருட்களை உணவில் சேர்ப்பதை தவிர்ப்பதனால் சைனஸ் பிரச்சினை அதிகரிப்பதை தடுக்கலாம்.

மாண்புமிகு ஆளுநர் அவர்களை, அரசு பள்ளியில் படிக்கும் மாணாக்கர்கள் மருத்துவம் பயில "நீட்" உள் ஒதுக்கீடு சட்டத்திற்கு விரைந்து ஒப்புதல் அளிக்க வலியுறுத்தி கேட்டுக்கொண்டேன்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்
அறிக்கை 23.10.2020

அரசு பள்ளி மாணவர்களும், தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்களும் வெவ்வேறு சமூக பொருளாதார பின்னணியை கொண்டவர்கள். இவர்கள் கற்கும் பள்ளி, வளரும் வீட்டுச் சூழல், பெற்றோர் வருமானம் போன்றவற்றில் வேறுபாடுகள் உள்ளன. எனவே, இவர்களை சமநிலையில் வைத்து பார்ப்பது சமநீதிக்கு எதிரானது. தமிழ்நாடு அரசு பள்ளியில் பயிலும் மாணவர்கள் அதிகமாக நீட் தேர்வில் தேர்ச்சி பெற்றாலும், மதிப்பெண் தரவரிசை அடிப்படையில் அவர்களுக்கு உரிய அளவுக்கு மருத்துவ இடம் கிடைப்பதில்லை. எனவேதான், அரசுப் பள்ளியில் படித்த நான், தமிழ்நாடு அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு தனியாக உள் ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்பதை உணர்வுப் பூர்வமாக உணர்ந்து, கடந்த 21.03.2020 அன்று சட்டப் பேரவையில் 110 விதியின் கீழ், அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் மருத்துவப் படிப்பு பயில உள் ஒதுக்கீடு வழங்கப்படும் என அறிவித்தேன்.

இது சம்பந்தமாக தீர ஆய்வு செய்து தமிழ்நாடு அரசுக்கு தனது பரிந்துரையை வழங்க, ஒய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் திரு.பி.கலையரசன் அவர்களின் தலைமையிலான ஆணையம் ஒன்றினை அமைத்து, அதன் பரிந்துரையின் அடிப்படையில் அமைச்சரவை ஒப்புதல் பெற்று, 7.5 சதவிகித உள் ஒதுக்கீடு சட்ட முன்வடிவு சட்டமன்றத்தில் ஒரு மனதாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, மாண்புமிகு ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்காக 18.09.2020 அன்று அனுப்பப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, நான் கடந்த 05.10.2020 அன்று மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் துறை அமைச்சர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ஆகியோருடன் மாண்புமிகு ஆளுநர் அவர்களை கொரோனா தொற்று நிலை பற்றி விவரிக்க நேரில் சந்தித்த பொழுது நீட் உள் ஒதுக்கீடு சட்டத்திற்கு விரைந்து ஒப்புதல் அளிக்க வலியுறுத்தி கேட்டுக் கொண்டேன்.

தற்போதுள்ள மருத்துவப் பட்டப்படிப்பு இடங்களில், இந்த 7.5 சதவிகிதம் உள் ஒதுக்கீடு வழங்குவதால், ஏழை, எளிய மாணவர்களுக்கு சம நீதி வழங்க இது வழிவகுக்கும் என்பதை உணர்ந்து மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இதற்கு விரைந்து ஒப்புதல் அளிப்பார் என்று உறுதியாக நம்புகிறேன். இந்த உள் ஒதுக்கீட்டு சட்டத்திற்கு விரைந்து ஒப்புதல் வழங்க வேண்டுமென அமைச்சர்கள் குழு, மாண்புமிகு ஆளுநர் அவர்களை 20.10.2020 அன்று நேரில் சந்தித்து வலியுறுத்தியபோது, இது குறித்து ஆய்வு

செய்து விரைவாக முடிவு செய்வதாக மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உறுதியளித்துள்ளார்.

கடந்த 9 ஆண்டுகளில் 1,400 புதிய மருத்துவப் பட்டப் படிப்பு இடங்களை உயர்த்தியும், 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளை உருவாக்கி, அதனால் கூடுதலாக 1,650 மருத்துவப் பட்டப்படிப்பு இடங்களை உருவாக்க நடவடிக்கை எடுத்தும், ஆக மொத்தம் 3,050 மருத்துவ இடங்களை உருவாக்கிய மாண்புமிகு அம்மாவின் அரசு ஏழை, எளிய மாணவர்கள், குறிப்பாக அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் மருத்துவராக வேண்டும் என்ற கனவை நனவாக்கவும், தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உள்ள வசதிகளும், வாய்ப்புகளும் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு கிடைக்கவில்லை என்பதை கருத்தில் கொண்டும், அவர்களுக்கும் சமநீதியும், சமவாய்ப்பும் கிடைக்க வழிவகை செய்ய, மாண்புமிகு அம்மாவின் அரசு தான், உள் ஒதுக்கீடு வழங்கி, அதனை செயல்படுத்த ஆணையம் ஒன்றை அமைத்து, அவ்வாணையத்தின் அறிக்கையைப் பெற்று, அதன்படி 7.5 சதவிகிதம் உள் ஒதுக்கீடு சட்ட முன் வடிவிற்கு சட்டமன்றத்தில் ஒப்புதல் பெற்று, மாண்புமிகு ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பியது. இந்த உள் ஒதுக்கீட்டு சட்ட முன்வடிவை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு விரிவான ஆய்வுக்குப்பின் சட்டமன்றத்தில் நிறைவேற்றியது.

மாண்புமிகு அம்மாவின் அரசு, கொரோனா நோய்த் தொற்றிலிருந்து மக்களை காத்து அவர்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்கி, முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. அதனால்தான் தமிழ்நாட்டில் நோய்த் தொற்று பரவல் கட்டுப்பாட்டுக்குள் உள்ளதோடு, சிகிச்சைக்குப் பின் குணமடைந்து வீடு திரும்புவோர் சதவிகிதம் நாட்டிலேயே அதிகமாக உள்ளது. மேலும், நோய்த் தொற்றினால் ஏற்படும் உயிர் இழப்பும் குறைவாக இருந்து வருகிறது. மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்து வரும் சீரிய நடவடிக்கைகளாலும், பொதுமக்களின் ஒத்துழைப்பாலும், நோய்த் தொற்றின் பரவல் தொடர்ந்து குறைந்து வருகின்றது.

கொரோனா நோய்த் தொற்றை முழுவதுமாக கட்டுப்படுத்திட தடுப்பூசி ஒன்றே நிரந்தர தீர்வு என்பது உலக மக்கள் அனைவரும் அறிந்ததே. அதனை ஆவலுடன் அனைவரும் எதிர்பார்க்கும் இவ்வேளையில், கொரோனா நோய்த் தொற்றுப் பரவலை மிக வெற்றிகரமாக கட்டுக்குள் கொண்டு வந்த மாண்புமிகு அம்மாவின் அரசால், மக்களின் நலன் கருதி, தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டவுடன், தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் விலையில்லாமல் தடுப்பூசி போடப்படும் என்று நான் அறிவித்தேன்.

ஏற்கெனவே கொரோனா தடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளில் மாண்புமிகு அம்மாவின் அரசுக்கு இருந்து வரும் நற்பெயரைக் கண்டு அரசியல் காழ்ப்புணர்ச்சி அடைந்திருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் திரு.ஸ்டாலின் அவர்கள், மேற்கண்ட இந்த புதிய அறிவிப்பினால் தமிழ்நாடு அரசுக்கு மக்கள் ஆதரவு அமோகமாக பெருகி வருகிறதே என்ற அச்சத்தின் காரணமாக வழக்கம் போல் அறிக்கை அரசியல் நடத்துகிறார். இதனை பார்த்து, தமிழ்நாட்டு மக்கள் எள்ளி நகையாடுகின்றனர்.

இயற்கை மூலிகையின் மூலம் சைனஸுக்கான தீர்வு

துளசி

துளசி நமக்கு நன்றாக தெரிந்த ஒரு மூலிகையாகும். இந்த துளசி சளி, இருமல், சைனஸ் போன்ற பிரச்சினைகளுக்கு கை கண்ட ஒரு சிறந்த தீர்வாக உள்ளது. துளசியை தினமும் சிறிதளவு சாப்பிட்டு வந்தால் பல வகையான பிரச்சினைகளில் இருந்து விடுபட்டு, ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ முடியும்.

சைனஸ் பிரச்சினைக்கு 15 மிலி. துளசி இலைச்சாறுடன் தேன் கலந்து உண்ணலாம். இதனைத் தொடந்து செய்து வர சைனஸ் பிரச்சினை குணமாகும்.

பேரரத்தை

நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும் இந்த பேரரத்தை ஆனது அதீத மருத்துவ குணங்களை கொண்டது ஆகும். சைனஸ் பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வாக அமைகிறது. ஒரு கிராம் பேரரத்தைப் பொடியை, பாலில் கலந்து பருகலாம்.

கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் நடமாடும் ஐ.சி.யு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்
28.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 28.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை சார்பில் ஏசிடி பைபர்நெட் லிமிடெட் நிறுவனத்தால் சென்னை, கீழ்ப்பாக்கம், அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள ஒருங்கிணைந்த நவீன தீவிர சிகிச்சை மையத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள்.

ஏசிடி பைபர்நெட் லிமிடெட் நிறுவனம், கூட்டாண்மை சமூக பொறுப்பு (Corporate Social Responsibility) செயல்பாட்டின் கீழ், சென்னை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 10 படுக்கைகள் கொண்ட ஒருங்கிணைந்த நவீன தீவிர சிகிச்சை மையத்தை, கோவிட்–19 வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க நன்கொடையாக நிறுவியுள்ளது. இந்த மையத்தில் 10 படுக்கைகளும், ஒரு செவிலியர் பணிப் பகுதியும் உள்ளது. இந்த மையத்தில் அவசர சிகிச்சை அளிக்கத் தேவையான பிராணவாயு இணைப்புகள் மற்றும்

உயிர்காக்கும் சிகிச்சைக்கான மருத்துவக் கருவிகள் உள்ளன. **மருத்துவமனைக்குள் கோவிட்–19 சிகிச்சைக்காக எங்கெல்லாம் அவசர பிரிவின் அவசியம் ஏற்படுகிறதோ அங்கெல்லாம் இந்த மையத்தை எடுத்துச் செல்லலாம். நோயாளிகளை ஒரே இடத்தில் இருந்து கவனிக்க மைய கண்காணிப்பு வசதியும், புகைப்படக் கருவிகளும் உள்ளன. இத்தகைய வசதிகள் கொண்ட இந்த மையம் இந்தியாவிலேயே முதல் மையம் ஆகும்.** ❖

மார்ச்-16 1973 "தமிழரசு" இதழ் அட்டை படம்...



புதியதாக உருவாக்கப்பட்ட இராணிப்பேட்டை மாவட்டத்திற்கு ரூ.118.40 கோடி மதிப்பீட்டில் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 28.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சி மூலம் அடிக்கல் நாட்டினார்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 28.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் இராணிப்பேட்டை மாவட்டம், இராணிப்பேட்டை நகரில் ரூ.118.40 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தை காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 15.08.2019 அன்று சுதந்திர தின விழா உரையில், பெரிய மாவட்டமாக உள்ள வேலூர் மாவட்டத்தை பிரிக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து வந்த கோரிக்கைகளை பரிசீலித்து, நிருவாக வசதிக்காக, வேலூரை தலைமையிடமாகக் கொண்டு ஒரு மாவட்டமும், திருப்பத்தூரை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டமும், இராணிப்பேட்டையை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டமும் தோற்றுவிக்கப்படும் என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, மாநிலத்தின் 35ஆவது மாவட்டமாக இராணிப்பேட்டை மாவட்டம் உருவாக்கப்பட்டது. புதியதாக உருவாக்கப்பட்ட இராணிப்பேட்டை மாவட்டத்திற்கு, இராணிப்பேட்டை நகரில் 28,711 சதுர மீட்டர் பரப்பளவில், 118 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தரை மற்றும் 4 தளங்களுடன் கட்டப்படவுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். இப்புதிய வளாகத்தில், வருவாய்த் துறை அலுவலகம், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், மாவட்ட கருவூல அலுவலகம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அலுவலகம், கூட்டுறவுத் துறை அலுவலகம், பதிவுத்துறை அலுவலகம், வேளாண்மைத் துறை அலுவலகம், கால்நடை பராமரிப்புத் துறை அலுவலகம், சுகாதாரத் துறை அலுவலகம், வனத்துறை அலுவலகம், முதன்மை கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் அலுவலகம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தமிழ் வளர்ச்சித் துறை, கனிமவளத் துறை போன்ற துறைகளின் அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படவுள்ளன.

> "இராணிப்பேட்டை நகரில் 28,711 சதுர மீட்டர் பரப்பளவில், 118 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தரை மற்றும் 4 தளங்களுடன் கட்டப்படவுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகம்."

ரூ.948 கோடி மதிப்பீட்டில், மத்திய, மாநில அரசின் நிதிவுதவியோடு திருப்பூர் மாநகராட்சியை சீர்மிகு நகரமாக உருவாக்க திட்டம்

திருப்பூர் மாவட்டம் தொழில் வளம் மிக்க மாவட்டம், அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் மாவட்டம். இந்த மாவட்டத்தில் பின்னலாடைத் தொழில், பனியன் உற்பத்தி ஆலைகள் அதிகமாக உள்ளன. இந்த ஆலைகளில் பணிபுரிபவர்களில் வெளிமாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அதிகளவில் உள்ளனர். கொரோனா நோய்த் தொற்றுப் பரவல் ஏற்பட்டபோது, இங்குள்ள தொழிலாளர்கள் தங்கள் சொந்த மாநிலங்களுக்குத் திரும்பிச் செல்ல வேண்டுமென்று அரசுக்கு கோரிக்கை வைத்ததை ஏற்று, அவர்களை பத்திரமாக இரயில்கள் மற்றும் பேருந்துகள் மூலமாக அனுப்பி வைத்தோம். இந்நோய்த் தொற்றுப் பரவல் படிப்படியாக குறைந்து வருவதால், அவர்கள் மீண்டும் தமிழகத்திற்கு வந்து பணிபுரிய விருப்பம் தெரிவித்ததன் அடிப்படையில், அவர்களை அழைத்து வருவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றோம்.

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்
தலைமையில் 06.11.2020 அன்று
திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர்
அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட
வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும்
கொரோனா நோய்த் தடுப்புப் பணிகள்
குறித்த ஆய்வுக் கூட்டத்தில்
ஆற்றிய உரையிலிருந்து...

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்ட காலத்தில், வெளிமாநிலத் தொழிலாளர்களுக்குத் தங்கும் வசதி, பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி சிகிச்சை, அவர்கள் பணிபுரியும் இடத்திலேயே விலையில்லா

அரிசி, பருப்பு, எண்ணெய் என தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து அவர்களையும் நன்கு பாதுகாத்தோம். அவர்கள் தங்குவதற்குத் தேவையான இடத்தை நானே தேர்வு செய்து, அவர்களுக்குத் தேவையான உணவு, உடைகள், மருத்துவ வசதி அனைத்தும் செய்து கொடுத்தோம். மாண்புமிகு அம்மாவின் அரசைப் பொறுத்தவரை தொழிற்சாலைகளில் பணிபுரிகின்ற அனைத்துத் தொழிலாளர்களின் நலன் இந்நோய்த் தொற்றுப் பரவல் காலத்தில் பாதுகாக்கப்பட்டது என்பதை சுட்டிக்காட்ட விழைகிறேன்.

திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள் தொடர்ந்து வைத்த கோரிக்கையை ஏற்று, திருப்பூரில் ரூ.336.96 கோடி மதிப்பீட்டில் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை உருவாக்கப்படும் என்று அறிவித்து, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாவட்டத்தில் வேளாண் பெருமக்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், கால்நடைச் செல்வங்கள் அதிகமாக வளர்க்கப்படுகின்றன. அந்தக் கால்நடைச் செல்வங்களுக்கு சிகிச்சை அளிக்க கால்நடை மருத்துவக் கல்லூரி தேவை என்ற கோரிக்கையை ஏற்று, வாயில்லா ஜீவன்களையும் காக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, மாண்புமிகு அம்மாவின் அரசு அதனையும் அமைத்துத் தந்திருக்கிறது. அதற்காக உடுமலைப்பேட்டை தொகுதியில் பண்ணைக் கிணறு கிராமத்தில் சுமார் ரூ.85 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது, விரைவாக அங்கேயும் கால்நடை மருத்துவக் கல்லூரி துவங்கும் என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

மேலும், இந்த மாவட்ட மக்களின் கனவுத் திட்டமான அத்திக்கடவு–அவிநாசி திட்டத்தை இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுதே நிறைவேற்ற வேண்டுமென்று விரும்பினார்கள். அம்மாவால் கொடுக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றும் வண்ணம் அம்மாவின் அரசால் சுமார் ரூ.1,652 கோடி மதிப்பீட்டில் அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதன்மூலம் வறட்சிப் பகுதியாக இருக்கின்ற திருப்பூர் மாவட்டம் செழுமையான பகுதியாக மாறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருப்பூர் மாநகராட்சியை சீர்மிகு நகரமாக உருவாக்குவதற்கு சுமார் ரூ.948 கோடி மதிப்பீட்டில் மத்திய, மாநில அரசின் நிதியுதவியோடு இத்திட்டத்தை செயல்படுத்தவிருக்கின்றோம். இந்தத் திட்டத்தில் புதிய பேருந்து நிலையம், வாகனங்களை நிறுத்துவதற்காக Multicar Parking வசதியையும் உருவாக்க உள்ளோம். அதோடு, Conventional Centre உருவாக்க இருக்கின்றோம். அனைத்து காய்கறிகள் மற்றும் பழங்கள் விற்பனை செய்யக்கூடிய ஒருங்கிணைந்த வணிக வளாகம் கட்டித் தருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. இன்றைய தினம் மூன்று பூங்காக்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, திருப்பூர் மாநகரம் பொலிவூட்டப்பட்டிருக்கின்றது. இப்படி திருப்பூர் மாநகரம் சீர்மிகு நகரமாக உருவாவதற்குண்டான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் நிறைவடைகின்றபொழுது, இந்த நகரம் மேலும் வளர்ச்சி அடையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, திருப்பூர் மாநகராட்சியுடன் கூடுதலாக இணைக்கப்பட்ட பகுதிகளில் ரூ.258 கோடி மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் மேற்கொள்ளப்பட்டு, தற்சமயம் சோதனை ஓட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அம்ருத் திட்டத்தின் மூலம் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் ரூ.1,120 கோடி மதிப்பீட்டில் புதிய குடிநீர் திட்டப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. ஆகவே, திருப்பூர் மாநகரம் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு நிலையான, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான நடவடிக்கைகள் அம்மாவின் அரசால் எடுக்கப்பட்டு வருகிறது.

காங்கேயம் என்று சொன்னால் காங்கேயம் காளைக்கு பெயர்போனது. அதன் நினைவாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் காங்கேயத்தில் காளை உருவச்சிலை ஒன்று அமைக்கவேண்டுமென்று வைத்த கோரிக்கையை நிறைவேற்றுகின்ற விதமாக, காங்கேயம் நகரத்தில் காவல்நிலையம் ரவுண்டானா அருகில் காங்கேயம் காளை உருவ சிலை ஒன்று அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடுமலைப்பேட்டை நகரம் நூற்றாண்டு கால சரித்திரம் படைத்திருக்கின்றது. உடுமலைப்பேட்டைக்கு அடிப்படைத் தேவையான குடிநீர் வசதி, தெருவிளக்குகள், சாலை வசதி, பாதாளச் சாக்கடை, பேருந்து நிலையங்கள், பூங்காக்கள், குளங்கள், அங்கன்வாடி மையங்கள், நகராட்சி சேவை மையங்கள் போன்றவற்றை மேம்படுத்திட மாண்புமிகு அம்மாவின் அரசு சிறப்பு நிதியாக ரூ.50 கோடி வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்படி பல்வேறு திட்டங்கள் திருப்பூர் மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இம்மாவட்டம் ஒரு தொழில்வளம் மிக்க மாவட்டம், வேளாண் பெருமக்கள் நிறைந்த மாவட்டம். இரண்டும் ஒன்றாக இணைந்த ஒரே மாவட்டம் திருப்பூர் மாவட்டம். இரண்டையும் மாண்புமிகு அம்மாவின் அரசு இரண்டு கண்களைப் போல பாதுகாத்து, இந்த இரண்டு வளங்களும் சிறப்பாக நடைபெற, அம்மாவின் அரசு துணை நிற்கும்.

திருப்பூர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 06.11.2020 அன்று திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கால்நடை பராமரிப்புத் துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, கூட்டுறவுத் துறை, உயர்கல்வித் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, பள்ளிக் கல்வித் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, ஆகிய துறைகளின் சார்பில் ரூ.31.68 கோடி மதிப்பீட்டிலான 18 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, கால்நடை பராமரிப்புத் துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,கூட்டுறவுத் துறை, பள்ளிக் கல்வி துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.287.39 கோடி மதிப்பீட்டில் 12 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 06.11.2020 அன்று திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், சட்டமன்ற உறுப்பினர்கள், திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் கே. விஜய கார்த்திகேயன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

காவல் துறையில், பணியின் போதும், கொரோனா தொற்றினாலும் உயிர்த் தியாகம் செய்த காவலர்கள் நினைவாக “வீரக்காவலர் நினைவுரு கற்கள்”

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலக வளாகத்தில் ‘‘வீரக்காவலர் நினைவுரு கற்கள்’’ மற்றும் நீரூற்றினை திறந்து வைத்தார்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 20.10.2020 அன்று சென்னை, மயிலாப்பூர், டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு காவல் துறையில் பணியின் போதும், கொரோனா தொற்றினாலும் உயிர்த்தியாகம் செய்த வீரக் காவலர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள வீரக்காவலர் நினைவுரு கற்கள் மற்றும் நீரூற்றினை திறந்து வைத்தார்கள். மேலும், மரக்கன்றினை நட்டு, காவல்துறை தலைமையகத்தை பார்வையிட்டார்கள்.

‘காவல் பணியில் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்து வீரமரணமடைந்த காவல் ஆளினர்களுக்கு பெருமை சேர்க்கும் வகையில் ஆண்டுதோறும் அக்டோபர் 21ஆம் நாள் நாடு முழுவதும் வீரவணக்க நாள் அனுசரிக்கப்படுகிறது. 1959ஆம் ஆண்டு, அக்டோபர் 21ஆம் நாளன்று லடாக் பகுதியில், கடல் மட்டத்திலிருந்து 11,000 அடி உயரத்தில் உள்ள Hot Springs என்ற இடத்தில் சீன இராணுவத்தினர் ஒளிந்திருந்து மேற்கொண்ட திடீர் தாக்குதலில் 10 மத்திய பாதுகாப்பு படை (CRPF) காவலர்கள் உயிரிழந்தனர். இத்தாக்குதலில் வீர மரணமடைந்த காவலர்களின் தியாகத்தை இக்காவலர் நினைவுச் சின்னத்தின் பீடத்திலிருந்து ஒவ்வொரு ஆண்டும் நினைவு கூறுகிறோம்.

சட்டம் ஒழுங்கை பராமரிப்பதிலும், தேச விரோதிகள் மற்றும் கொடுங் குற்றவாளிகளை கைது செய்ய முயலும் போதும், பொதுமக்களின் உயிர் மற்றும் உடைமைகளை பாதுகாக்கின்ற பணிகளின் போதும் 1950ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு காவல்துறையைச் சேர்ந்த 151 காவல் ஆளினர்கள் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்துள்ளனர். இந்த ஆண்டில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளின் போது, முன்களப் பணியில் ஈடுபட்ட 29 காவல் ஆளினர்கள் கொரோனா நோய்த் தொற்றுக்கு ஆளாகியும், 3 காவல் துறையினர் தங்களது கடமைகளைச் செய்யும் போதும் வீர மரணமடைந்துள்ளனர்.

இங்ஙனம் பணியின் போது தங்கள் இன்னுயிரை நீத்த 151 தமிழ்நாடு காவல்துறை வீரர்களின் தியாகத்தை நினைவு கூறும் வகையில் நினைவுருவக் கற்களில் அவர்களின் திருவுருவம் மற்றும் உயிர்நீத்த விவரங்கள் காவலர் நினைவுச் சின்னத்தின் பீடத்தைச் சுற்றி பதிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு காவல் துறையில் பணியின் போதும், கொரோனா தொற்றினாலும் உயிர்த்தியாகம் செய்த வீரக் காவலர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள வீரக்காவலர் நினைவுரு கற்கள் மற்றும் நீருற்றினை திறந்து வைத்தார்கள்.

மரம் நடும் திட்டம் தொடக்கம்

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 21.02.2014 அன்று தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலக வளாகத்தில் ஆலமரக்கன்றினை நட்டு, தமிழகம் முழுவதும் 66 இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தினை துவக்கி வைத்தார்கள். அந்த வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலக வளாகத்தில் மரக்கன்றினை நட்டு, காவல்துறை தலைமையகத்தை பார்வையிட்டார்கள்.

இயற்கை மூலிகையின் மூலம் சைனஸ்க்கான தீர்வு

தும்பை பூ

தும்பை பூவை சைனஸ் பிரச்சினைகளுக்கு தீர்வாக பயன்படுத்தலாம். இந்த தும்பை பூவானது சாலை ஓரங்களிலே காணப்படும் ஒன்றாகும். ஒரு ஸ்பூன் தும்பைப் பூச் சாறுடன் கற்கண்டு சேர்த்து அருந்தலாம்.

தூதுவளை

சளி, சைனஸ் போன்ற பிரச்சினைகளுக்கு தூதுவளையை விட சிறந்த தீர்வு எதுவும் இருக்க முடியாது என்று கூறலாம். அரை ஸ்பூன் தூதுவளைப் பொடியில் தேன் கலந்து உண்ணலாம்.

சுக்கு

சுக்கை களியாகச் செய்து நெற்றியில் பற்று போடலாம். மேலும் லவங்கத்தை நீர்விட்டு மைபோல் அரைத்து நெற்றியிலும், மூக்கின் மேலும் பற்று இடலாம்.

சுக்கு நமது வீட்டில் எப்போதும் இருக்கும் ஒரு பொருளாகும். இதனை பற்றாக போட்டால் தலைவலியில் இருந்து நிவாரணம் கிடைக்கும். நீர்க்கட்டு நீங்கும். இதனால் சைனஸ் பிரச்சினையில் இருந்து நிவாரணம் பெற முடியும்.

தொழில் துறை சார்பில் ரூ.1,298.20 கோடி முதலீட்டில் 7 தொழில் நிறுவனங்கள் வணிக உற்பத்தி துவக்கம்

ரூ.10,062 கோடி முதலீட்டில் 9 புதிய திட்டங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 23.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தொழில் துறை சார்பில் 7 தொழில் நிறுவனங்களின் வணிக உற்பத்தியை துவக்கி வைத்து, 9 புதிய தொழிற் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 23.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தொழில் துறை சார்பில் 1,298.20 கோடி ரூபாய் முதலீட்டில் 7,879 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் 7 தொழில் நிறுவனங்களின் வணிக உற்பத்தியை துவக்கி வைத்து, 10,062 கோடி ரூபாய் முதலீட்டில் 8,666 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் வகையில் 9 புதிய தொழிற்திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தவும், தொழில் துறையில் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாகத் தொடர்ந்து திகழச் செய்யவும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் காரணமாக, தொழில் முனைவோர்கள் மற்றும் பெரும் முதலீட்டாளர்களை ஈர்ப்பதில் தமிழ்நாடு முன்னிலை வகித்து வருகிறது.

அந்த வகையில், இன்றைய தினம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வணிக உற்பத்தி துவக்கி வைக்கப்பட்ட 7 தொழில் நிறுவனங்கள் மற்றும் அடிக்கல் நாட்டப்பட்ட 9 தொழிற் திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:

வணிக உற்பத்தி துவக்கி வைக்கப்பட்ட திட்டங்களின் விவரங்கள்

1. திருவள்ளூர் மாவட்டம், தேர்வாய்கண்டிகை சிப்காட் தொழிற்பூங்காவில், 600 கோடி ரூபாய் முதலீட்டில் 1,800 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Wheels India நிறுவனத்தின், வாகன சக்கரங்கள் மற்றும் சுரங்க உபகரணங்கள் உற்பத்தி திட்டம். இத்திட்டம் உலக முதலீட்டாளர்கள் மாநாடு–2019இல் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகும்.

2. காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் நோக்கியா தொலைதொடர்பு சிறப்பு பொருளாதார மண்டலத்தில், 500 கோடி ரூபாய் முதலீட்டில் 5,600 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், ஃபின்லாந்து நாட்டை சேர்ந்த Salcomp நிறுவனத்தின், கைப்பேசி மின்னேற்றிகள் உற்பத்தி திட்டம். பல்வேறு காரணங்களால் மூடப்பட்ட நோக்கியா தொழிற்சாலைக்கு புத்துயிரூட்டி, அப்பகுதியில் தொழில் வளர்ச்சியை மேலும் சிறப்பாக்க அரசு மேற்கொண்ட முயற்சிகளின் பலனே இத்திட்டம் ஆகும். இத்திட்டம் உலக முதலீட்டாளர்கள் மாநாடு–2019இல் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகும்.

3. திண்டுக்கல் மாவட்டம், வத்தலகுண்டில், 70 கோடி ரூபாய் முதலீட்டில் 150 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Kalpathi AGS குழுமத்தின் Dindigul Renewable Energy Private Limited (Phase - 1) நிறுவனத்தின் மின் உற்பத்தி திட்டம். இத்திட்டம் உலக முதலீட்டாளர்கள் மாநாடு–2019இல் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகும்.

4. இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜாபேட்டையில், 37 கோடி ரூபாய் முதலீட்டில் 90 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Power Gear நிறுவனத்தின் மின் உபகரணங்கள் உற்பத்தி திட்டம்.

5. காஞ்சிபுரம் மாவட்டம், இருங்காட்டுக்கோட்டை சிப்காட் தொழிற்பூங்காவில், 12.7 கோடி ரூபாய் முதலீட்டில் 100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Mudhra Fine Blanc நிறுவனத்தின் மோட்டார் வாகன உதிரி பாகங்கள் உற்பத்தி திட்டம். இத்திட்டம் உலக முதலீட்டாளர்கள் மாநாடு–2019இல் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகும்.

6. காஞ்சிபுரம் மாவட்டம், வல்லம் வடகாலில், 56.5 கோடி ரூபாய் முதலீட்டில் 100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Nash Industries India Limited நிறுவனத்தின், மோட்டார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி திட்டம். இத்திட்டம் உலக முதலீட்டாளர்கள் மாநாடு–2019இல் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகும்.

7. காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூரில், ரூ.22 கோடி முதலீட்டில் 39 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், ஜப்பான் நாட்டினை சேர்ந்த BBL Daido நிறுவனத்தின் Shell bearings and bushings உற்பத்தி திட்டம். இத்திட்டம் உலக முதலீட்டாளர்கள் மாநாடு–2019இல் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகும்.

அடிக்கல் நாட்டப்பட்ட திட்டங்களின் விவரங்கள்

1. காஞ்சிபுரம் மாவட்டம், இருங்காட்டுக்கோட்டையில், 150 கோடி ரூபாய் முதலீட்டில், Hyundai Motors நிறுவனத்தின் பயிற்சி மையம் அமைக்கும் திட்டம். மேலும் இந்நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.எஸ்.எஸ். கிம் அவர்கள் Hyundai Motors India Limited நிறுவனத்தின் சார்பாக தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்), கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் தொழிற்பூங்காவில் அமைக்கப்படவுள்ள புதுமை கண்டுபிடிப்பு மையத்திற்கு 1 கோடி ரூபாய் நிதி வழங்கினார்.

2. காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடத்தில் ரூ.5,512 கோடி முதலீட்டில், 4,738 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Vikram Solar நிறுவனத்தின் Solar Module/Cell உற்பத்தி திட்டம். இந்த திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 27.07.2020 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.

3. திருவள்ளூர் மாவட்டம், வல்லூர் கிராமத்தில், 1,000 கோடி ரூபாய் முதலீட்டில், 1,100 நபர்களுக்கு

வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Integrated Chennai Business Park (DP World) நிறுவனத்தின் Logistics Park திட்டம். இந்த திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசுமுறைப்பயணமாக துபாய் சென்றபோது மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு திட்டமாகும்.

4. திண்டுக்கல் மாவட்டம், வத்தலகுண்டில் 300 கோடி ரூபாய் முதலீட்டில், 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Kalpathi AGS குழுமத்தின் Dindigul Renewable Energy Private Limited (Phase-2) நிறுவனத்தின் மின் உற்பத்தி திட்டம். இத்திட்டம் உலக முதலீட்டாளர்கள் மாநாடு–2019இல் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகும்.

5. தூத்துக்குடி மாவட்டம், மேலக்கரந்தையில், 250 கோடி ரூபாய் முதலீட்டில், 228 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Shreevari Energy Systems நிறுவனத்தின் காற்றாலை மற்றும் அனல் மின் உற்பத்தி துறைகளுக்கான தளவாடங்கள் உற்பத்தி திட்டம். இந்த திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 30.11.2019 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.

6. விழுப்புரம் மாவட்டம், மயிலத்தில், 50 கோடி ரூபாய் முதலீட்டில், 400 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Chennai SSSS Equipments நிறுவனத்தின் Earth Breaking Equipments உற்பத்தி திட்டம். இதன் மொத்த வேலைவாய்ப்பில் 40 சதவீதம் பெண் பொறியாளர்கள் பணியாற்ற உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

7. திருப்பூர், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில், 2,000 கோடி ரூபாய் முதலீட்டில், 1,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Adani Gas நிறுவனத்தின் City Gas distribution திட்டம். இத்திட்டம் உலக முதலீட்டாளர்கள் மாநாடு–2019இல் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகும்.

8. திருவள்ளூர் மாவட்டம், தேர்வாய்கண்டிகை சிப்காட் தொழிற்பூங்காவில், 600 கோடி ரூபாய் முதலீட்டில், 300 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Philips Carbon Black நிறுவனத்தின் கார்பன் உற்பத்தி திட்டம்.

9. கோயம்புத்தூர் மாவட்டம், கள்ளப்பாளையத்தில், 200 கோடி ரூபாய் முதலீட்டில், 400 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Aquasub Engineering நிறுவனத்தின் பம்புகள் உற்பத்தி திட்டம். இந்த திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 27.07.2020 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றைய தினம் அடிக்கல் நாட்டப்பட்ட 9 திட்டங்களில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசுமுறைப் பயணமாக துபாய் சென்றபோது மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி செயல்படுத்தப்படும் 1,000 கோடி ரூபாய் முதலீட்டிலான ஒரு திட்டமும், உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019இல் மேற்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி 2 திட்டங்களும் அடங்கும். மேலும் இதே மாநாட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட 6 திட்டங்களின் வணிக உற்பத்தியும் துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

2019ஆம் ஆண்டு நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் 3 இலட்சத்து 501 கோடி ரூபாய் முதலீடுகள் மற்றும் 10.50 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் என்ற வகையில், 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன. இதுவரை துவக்கி வைக்கப்பட்ட திட்டங்களையும் சேர்த்து, 85 திட்டங்கள், அதாவது 27.96% திட்டங்கள், தமது வணிக உற்பத்தியை ஏற்கெனவே துவங்கிவிட்டன. மேலும் 187 திட்டங்கள், அதாவது 61.51% திட்டங்கள், பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன. ஆக, மொத்த திட்டங்களில், 89.47% (அதாவது 272/304) திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் 28 ஆண்டுகள் பயணம் குறித்த குறும்படம்

தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனம் (Guidance TamilNadu) 1992ஆம் ஆண்டு துவக்கப்பட்டு 28 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் அந்நிறுவனத்தின் பங்களிப்பை விவரிக்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஒரு குறும்படம் வெளியிடப்பட்டது.

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் பங்கு ஈவுத்தொகை வழங்குதல்

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் 2019–2020ஆம் நிதி ஆண்டுக்கான பங்கு ஈவுத்தொகையான 14 கோடியே 66 இலட்சத்து 69 ஆயிரத்து 400 ரூபாய்க்கான வரைவுக் காசோலையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி. சம்பத் அவர்கள் வழங்கினார்.

ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ், ரூ.118.46 கோடி மதிப்பீட்டில் 1,10,288 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 28.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 28.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் சேலம் மாவட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலமாக ஜல் ஜீவன் திட்டத்தின் (Jal Jeevan Mission) கீழ், 118 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 64 ஊராட்சிகளுக்குட்பட்ட 1,143 குக்கிராமங்களில் உள்ள 1,10,288 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்தார்கள்.

ஜல் ஜீவன் திட்டம், ஊரகப் பகுதிகளில் மக்கள் பங்கேற்புடன் கூடிய திட்டமாக செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது, அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கி தரமான குடிநீரினை ஒவ்வொரு நபருக்கும் தலா 55 LPCD அளவு தொடர்ந்து வழங்கப்படுவதாகும். இத்திட்டம் 2020–2021ஆம் நிதியாண்டில் தொடங்கி 2023–2024ஆம் நிதியாண்டிற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மத்திய அரசின் பங்கு 45 சதவீதமும், மாநில அரசின் பங்கு 45 சதவீதமும் மற்றும் பொதுமக்களின் பங்கு 10 சதவீதமும் ஆகும்.

அதன்படி இத்திட்டத்தின் கீழ், சேலம் மாவட்டத்திலுள்ள 5,71,683 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட வேண்டியுள்ளது. முதல் கட்டமாக 2020–2021ஆம் நிதியாண்டிற்காக, 118 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், சேலம் மாவட்டத்திலுள்ள 64 கிராம ஊராட்சிகளுக்குட்பட்ட 1,143 குக்கிராமங்களில் உள்ள 1,10,288 வீடுகளுக்கு குழாய் மூலமாக குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இந்த நிதியாண்டில் (2020 –2021) சேலம் மாவட்டத்தில் ஜல் ஜீவன் திட்டம் தவிர்த்து பிற திட்டங்களின் மூலமாக 321 கிராம ஊராட்சிகளுக்குட்பட்ட 649 குக்கிராமங்களில் உள்ள 87,583 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், 2021–2022ஆம் நிதியாண்டில் 173 கிராம ஊரட்சிகளுக்குட்பட்ட 1,779 குக்கிராமங்களில் உள்ள 1,90,079 வீடுகளுக்கும், 2022–2023ஆம் நிதியாண்டில் 138 கிராம ஊரட்சிகளுக்குட்பட்ட 1,538 குக்கிராமங்களில் உள்ள 1,83,733 வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதன்மூலம், மொத்தம் மூன்றாண்டுகளில் குடிநீர் இணைப்பு வழங்கப்படாத 5,71,683 வீடுகளுக்கும் 2022–2023ஆம் நிதியாண்டிற்குள் குடிநீர் இணைப்பு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சட்டப்படிப்பு முடித்த இளம் வழக்கறிஞர்களுக்கு 2 ஆண்டுகளுக்கு மாதம் ரூ.3 ஆயிரம் உதவித்தொகை வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 28.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், இளம் வழக்கறிஞர்களுக்கு உதவிடும் வகையில் உதவித்தொகைக்கான ஆணையை வழங்கி திட்டத்தை துவக்கி வைத்தார்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 28.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், சட்டப்படிப்பு முடித்த இளம் வழக்கறிஞர்களுக்கு உதவிடும் நோக்கில், 2 ஆண்டு காலத்திற்கு மாதம் 3 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்கும் திட்டத்தை துவக்கி வைக்கும் அடையாளமாக, 9 இளம் வழக்கறிஞர்களுக்கு உதவித் தொகைக்கான ஆணையினை வழங்கி, துவக்கி வைத்தார்கள்.

சட்டப்படிப்பினை முடித்து கல்லூரியில் இருந்து வெளிவரும் இளம் வழக்கறிஞர்கள், பார் கவுன்சிலில் நிரந்தர பதிவு சான்றிதழ் பெறுவதற்கு முதலில் தேசிய அளவிலான வழக்கறிஞர்கள் குழும தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். அதன் பின்னர், இளநிலை வழக்கறிஞர்களாக, மூத்த வழக்கறிஞர் ஒருவரிடம் 2 அல்லது 3 ஆண்டுகாலம் பயிற்சி பெற வேண்டும். கிராமப்புற மற்றும் ஏழ்மையான குடும்பத்தில் இருந்து சட்டப்படிப்பு படிக்கும் மாணவர்கள், சட்டப்படிப்பினை முடித்து விட்டு அவர்கள் வழக்கறிஞர்களாக பணியாற்றுவதற்கு குறைந்தபட்சம் 3 அல்லது 4 ஆண்டுகள் தேவைப்படுகிறது. இக்காலக்கட்டத்தில் பல வழக்கறிஞர்கள் மிகவும் வறுமையான நிலையில் உள்ளதோடு, ஒரு சிலர் தங்களை வழக்கறிஞர்களாக நிலைநிறுத்திக் கொள்ள இயலாமல் வேறு மாற்றுத்தொழிலுக்கு சென்று விடும் நிலையும் உள்ளது. இந்நிலையினை கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வறுமையான நிலையில் உள்ள இளம் வழக்கறிஞர்களுக்கு உதவிடும் வகையில், தகுதிகளின் அடிப்படையில் இளம் வழக்கறிஞர்களுக்கு மாதம் 3 ஆயிரம் ரூபாய் வீதம் 2 ஆண்டு காலத்திற்கு உதவித்தொகை வழங்கப்படும் என்று 02.07.2020 அன்று அறிவித்தார்கள்.

அதன்படி, சட்டப்படிப்பு முடித்த இளம் வழக்கறிஞர்கள் பயன்பெறும் வகையில், 2 ஆண்டு காலத்திற்கு மாதம் 3 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்கும் திட்டத்தை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 9 இளம் வழக்கறிஞர்களுக்கு உதவித்தொகைக்கான ஆணையினை வழங்கி, துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களுக்கும், அரசுக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்த "நமது அரசு" வலைதளத்தை துவக்கி வைத்தார்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 28.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் துறையின் கீழ் செயல்படும், தமிழ்நாடு மின்னாளுமை ஆணையரகத்தால், மக்கள் அரசை எளிதில் தொடர்பு கொண்டு தங்கள் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள உதவும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள **"நமது அரசு" (http://tamilnadu.mygov.in வலைதளத்தை துவக்கி வைத்தார்கள்.**

தகவல் தொழில்நுட்பவியில் துறையின் 2017–2018ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில், தமிழக மக்கள் அனைவரும் வலைதளம் வாயிலாக கருத்துக் கணிப்புகள், ஆய்வுகள், விவாதங்கள் போன்றவற்றில் ஆர்வத்துடன் பங்கேற்று அதன்மூலம் தமது கருத்துக்களை சுதந்திரமாகவும், வெளிப்படையாகவும்வலைப்பதிவுகள்மூலமாக அரசுக்கு தெரிவிக்க உதவும் வகையில் "நமது அரசு" என்ற பொதுமக்களுக்கான தமிழ்நாடு அரசின் வலைதளம் தமிழ்நாடு மின்னாளுமை ஆணையரகத்தால் உருவாக்கப்படும் என்று தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு அரசின் "நமது அரசு" வலைத்தளம் 91 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு மின்னாளுமை ஆணையரகத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த வலைதளமானது, அரசின் நடவடிக்கைகள் குறித்து மக்களுக்கும், அரசுக்குமிடையே உரையாடல்கள் வாயிலாக கருத்துப் பரிமாற்றம் செய்து, மக்கள் நலன் சார்ந்த நேர்வுகளில் அரசுக்கு ஆலோசனைகள் வழங்கும் தளமாக இருந்து உதவும். மேலும், கலந்துரையாடல், செயல்பாடுகள், தகவல்களை பரப்புதல், படைப்புத்தளம், கருத்துக்களம், கருத்துக் கணிப்புகள் போன்ற முக்கிய அம்சங்களைக் கொண்டு மக்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்கள் மற்றும் வாக்கெடுப்புகளின் அடிப்படையில் அரசுச் சேவைகளை செம்மையாக செயல்படுத்த இது உதவும்.

"நமது அரசு" வலைதளம், பொதுமக்களுக்கும், அரசுக்குமிடையில் ஒரு புதிய நல்லுறவை ஏற்படுத்துவதோடு, அரசு இயந்திரத்தை எளிதாக மின்னணு வழியில் தொடர்பு கொள்ளவும் உதவும். மேலும், தற்போதுள்ள திட்டங்கள் மற்றும் எதிர்கால நலத்திட்டங்கள் குறித்து கருத்துக் கணிப்புகளைப் பெற்று, அவற்றை மேம்படுத்துவதற்கான ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை மேற்கொள்ளவும், மக்களின் தேவைகளுக்கேற்ப புதிய திட்டங்களை வகுக்கவும் அரசுக்கு உறுதுணையாக அமையும்.

பண்டிகைகள் தொடர்ந்து வருவதால், பொதுமக்கள் பொது இடங்களில், கூடுவதை, கண்காணித்து நோய்த் தொற்று ஏற்படாதவண்ணம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் தலைமைச் செயலகத்தில், 28.10.2020 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுடனான கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுத் தடுப்புப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய தொடக்க உரை

கோவிட்–19 வைரஸ் நோய்த் தொற்றை கட்டுப்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருகின்றது. அதன் விளைவாக நோய்ப் பரவல் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. முக்கியமாக, மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், நோய்த் தொற்று பரவல் குறைந்து கொண்டே வருகிறது. உங்கள் அனைவருடைய அயராத உழைப்பின் காரணமாகத்தான் இது சாத்தியமாயிற்று. இதைக் கருத்தில் கொண்டுதான், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், தமிழ்நாட்டை போல் பிற மாநிலங்கள் செயல்பட வேண்டும் என பாராட்டினார்கள். தமிழ்நாட்டில் கொரோனா பரவல் குறைந்து வரும் சூழல் நீடிக்கவும், அதனை முழுமையாக தடுக்கவும், நாம் அனைவரும் தொடர்ந்து பாடுபட வேண்டும். அதற்கென நமது நடவடிக்கைகளை மேலும் முனைப்புடன் செயல்படுத்த வேண்டும். குறிப்பாக நோய்த் தொற்று குறைந்துள்ள நிலையில், பண்டிகை காலங்களில் மக்கள் அதிகமாக கூடுவதை தவிர்த்தல், விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்றவற்றை முனைப்புடன் செயல்படுத்த வேண்டும்.

எனது தலைமையில், 11 முறை அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஆய்வுக் கூட்டங்கள் நடைபெற்றன. 10 முறை மருத்துவ வல்லுநர்களுடன் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. தலைமைச் செயலாளர் அவர்களுடைய தலைமையில், 11 முறை மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. தமிழ்நாட்டு மக்களின் நலன்

கருதி, நோய்த் தொற்றின் நிலைமையைத் தொடர்ந்து கண்காணித்து, தேவையான தளர்வுகளுடன் பொது முடக்கம் மிகவும் கவனமாகவும், பாதுகாப்பாகவும் அமல்படுத்தப்பட்டது.

கோவிட்–19 நோய்த் தொற்று கட்டுப்பாடு, சிகிச்சை மற்றும் நிவாரணப் பணிகளுக்காக இதுவரை அரசு செலவு ரூபாய் 7,372 கோடியே 25 இலட்சம். மருத்துவம் சார்ந்த செலவினம் 1,983 கோடி ரூபாயும், நிவாரணம் சார்ந்த செலவினம் 5,389 கோடி ரூபாயும் ஆகும். அனைத்து மாவட்டங்களிலும் காய்ச்சல் முகாம்கள் தொடர்ந்து நடத்தியும், வீடு வீடாகச் சென்றும், காய்ச்சல் மற்றும் வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகள் உள்ளவர்களைக் கண்டறிந்தும், RTPCR சோதனை, தனிமைப்படுத்துதல், சிகிச்சை அளித்தல் போன்றவை தொடர்ந்து நடைபெற்ற காரணத்தினால் இன்றைக்கு நோய்ப்பரவல் படிப்படியாக குறையத் தொடங்கியிருக்கிறது.

தமிழகத்தில் 201 ஆய்வகங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதில் 66 அரசு ஆய்வகங்களும், 135 தனியார் ஆய்வகங்களும் இடம் பெற்றுள்ளன. இதுவரை RTPCR பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 96.60 இலட்சம். தற்போது நாளொன்றுக்கு சுமார் 80,000 நபர்களுக்கு RTPCR பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. மாநில அளவில் கோவிட்–19 மருத்துவமனைகளிலும், கோவிட்–19 சிறப்பு மையங்களிலும் 1,39,098 படுக்கைகளும், இதில் ஆக்சிஜன் வசதிகளுடன் கூடிய 34,506 படுக்கைகளும் ICU வசதி கொண்ட 7,666 படுக்கைகளும், 6,517 வென்டிலேட்டர்களும் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக அரசால் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

மிகவும் இன்றியமையாத மற்றும் உயிர்காக்கும் மருந்துகளான டொஸிலிசுமாப் (Tocilizumab) 400 எம்ஜி, ரெம்டெஸ்விர் (Remdesvir) 100 எம்ஜி, இனாக்சபெரின் (Enoxaparin) 40 எம்ஜி போன்றவை கொள்முதல் செய்யப்பட்டு, அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. மருந்துகள், பரிசோதனைக் கருவிகள், N95 முகக்கவசங்கள், பாதுகாப்பு உடைகள் (PPE Kits), மும்முடி முகக்கவசங்கள், CT ஸ்கேன், X-ray இயந்திரங்கள் ஆகியவற்றை தேவையான அளவில் தொடர்ந்து கொள்முதல் செய்து நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய முறையில் சிகிச்சை அளிப்பதற்கு அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

களப்பணியில் உள்ள அனைத்து பணியாளர்களுக்கும், கட்டுப்பாட்டு பகுதியில் வாழும் மக்களுக்கும், ஜிங்க் (zinc) மற்றும் வைட்டமின் மாத்திரைகள் இலவசமாக கொடுக்கப்பட்டு வருகிறது. இந்திய முறை மருத்துவ (Ayush) சிகிச்சை – நோய் எதிர்ப்பு சக்தியினை அதிகரிப்பதற்காக சித்த மருந்தான கபசுர குடிநீர் பெரும்பான்மையான மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டதன் விளைவாக நோய்ப் பரவல் படிப்படியாக குறைக்கப்பட்டிருக்கிறது.

கோவிட்–19 நோய்க்கான சிறப்பு சிகிச்சை அளிக்க, கூடுதலாக 15,000 மருத்துவ பணியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டனர். இதில் சுமார் 2,751 மருத்துவர்கள், 6,893 செவிலியர்கள் மற்றும் இதர மருத்துவ பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டனர். சாதாரண காய்ச்சல் மற்றும் மற்ற ஏனைய நோய்களுக்கு உடனடியாக பொதுமக்கள் சிகிச்சை பெற தமிழ்நாடு முழுவதும், ஒரு மருத்துவர், ஒரு செவிலியர் மற்றும் ஒரு உதவியாளருடன் 2,000 Mini Clinic தொடங்க அரசால் திட்டமிடப்பட்டு, அதற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டு வருகிறது. இந்த Mini Clinic–களில் நோயாளிகளுக்கு பரிசோதனை செய்யப்படுகிறது. நோய் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு அந்தப் பகுதியிலேயே உரிய சிகிச்சை அளிக்கப்படுகிறது.

நோய் கடுமையாக இருந்தால், மேல்சிகிச்சைக்காக அந்தப் பகுதியிலுள்ள மருத்துவமனைக்கு அவர்கள் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

நமது மருத்துவர்களின் சிறப்பான சேவையால், நோய்த் தொற்று 7.39 சதவிகிதத்திற்கு கீழ் கொண்டு வரப்பட்டு, நோய் பரவல் கட்டுக்குள் வைக்கப்பட்டுள்ளது. கடந்த 17 நாட்களாக ஒவ்வொரு நாளும் நோய்த் தொற்றின் எண்ணிக்கை 5,000 நபர்களுக்கு கீழாகவே உள்ளது. கடந்த 4 நாட்களாக 3,000 நபர்களுக்கு கீழாகவே உள்ளது. சிகிச்சையில் இருப்போர் எண்ணிக்கை 50,000இல் இருந்து தற்போது 30,000 நபர்கள் வரை குறைந்து உள்ளது.

மண் சரிவு சீர்செய்தல்

நெல் கொள்முதல் நிலையங்கள்

மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, நாட்டிலேயே சிகிச்சை முடிந்து குணமானவர்களுடைய எண்ணிக்கை 6,75,518. இது 94.57 சதவீதமாகும். இறப்பு விகிதம் 1.53 சதவீதம்தான் இறப்பு உள்ளது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். இறப்பு விகிதத்தை மேலும் குறைக்கும் விதமாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள், சுகாதாரத் துறை அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களை கேட்டுக் கொள்கின்றேன்.

அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் கோவிட் –19 நோய் சிகிச்சை குறித்த நிலையான வழிமுறைகள் கடைப்பிக்கப்படுகின்றனவா? என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தொடர்ந்து தீவிரமாக கண்காணிக்க வேண்டும். கோவிட்–19 சிறப்பு மையங்களில் உணவு, குடிநீர், கழிப்பிட மற்றும் பிற வசதிகளை அவ்வப்போது மாவட்ட ஆட்சியர்கள் தொடர்ந்து ஆய்வு செய்து சிகிச்சை பெறுபவர்களுக்கு முழுமையான உதவிகளை மேற்கொள்ள வேண்டும்.

இதுவரை 46 இலட்சம் மறுமுறை உபயோகிக்கத்தக்க முகக் கவசங்களை சென்னையில் உள்ள ஏழை, எளிய மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. பிற மாவட்டங்களில் இதுவரை 4.95 கோடி முகக்கவசங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

ஏழைகள், சிறு தொழில் செய்வோர், சிறு வணிகம் செய்வோர் போன்றோரின் பொருளாதார நிலையை பாதுகாக்க தமிழ்நாட்டில் உணவுப் பொருட்களை விலையின்றி வழங்குதல், ரொக்க நிவாரணம் வழங்குதல் போன்ற பல்வேறு நிவாரண நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன.

கொரோனா காலத்தில் கூட, இதுவரை 55 புதிய தொழில் திட்டங்கள் தமிழ்நாட்டில் துவங்குவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. இதன் மூலம், சுமார் 40,718 கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்பட்டுள்ளது. சுமார் 74,212 நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட உள்ளன. இந்நடவடிக்கைகளால், நடப்பாண்டில் அதிக புதிய முதலீடுகளை ஈர்த்து, வேலைவாய்ப்புகளை உருவாக்கியதில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாடு உள்ளது.

மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த சிறப்பான நடவடிக்கைகளால், அரசின் நலத்திட்டங்கள் மக்களை பெருமளவில் சென்று சேர்ந்துள்ளது. மக்களைப் பொருளாதார பாதிப்பில் இருந்து பாதுகாத்து, வேலைவாய்ப்பின்மை இரண்டே மாதங்களில், ஆறில் ஒரு பங்காக சரிந்துள்ளது. தனி நபர் வருவாய் படிப்படியாய் உயர்ந்து, கொரோனா சூழலால் ஏற்பட்ட பொருளாதார பாதிப்பிலிருந்து தமிழ்நாடு விரைந்து மீண்டு வருகிறது என ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கடந்த 12.10.2020 அன்று மாநில பேரிடர் மேலாண்மை குழுவின் பருவமழை முன்னேற்பாடு ஆய்வுக் கூட்டம் எனது தலைமையில் நடைபெற்றது. தற்போது, பருவமழை காலம் தொடங்க உள்ளது. இந்த வருடம் இயல்பான அளவில் மழைப்பொழிவு இருக்கும். அனைத்து மாவட்டங்களும், குறிப்பாக கடலோர மாவட்டங்கள் பருவ மழைக்கு முன்னதாகவே நீர்நிலை உட்கட்டமைப்புகளான கால்வாய்கள், அணைக்கட்டுகள் மற்றும் ஏரிகளின் கதவுகள் மற்றும் கரைகளை கண்காணித்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். புயல் காப்பகங்கள், கொரோனா நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுடன் கிருமி நீக்கம் செய்து அவசர காலத்தில் பயன்படுத்துவதற்கு ஏற்ற வண்ணம் தயார் நிலையில் இருக்க வேண்டும். தேவைப்பட்டால், கூடுதல் காப்பகங்களை கண்டறிந்து அவற்றையும் தயார் செய்ய வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன். மலை மாவட்டங்களில் மண் சரிவு ஏற்படும் இடங்களை கண்டறிந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்தும், மரங்கள் விழுந்தால் அகற்றுவதற்கு தேவையான உபகரணங்களை இருப்பில் வைத்தும் மாவட்ட நிருவாகம் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

நாம் முன்னரே திட்டமிட்டு நீர்நிலைகளை தூர் வாரியது, ஆழப்படுத்தியது, வாய்க்கால்களை சீரமைத்தது போன்ற பணிகளினால், முன்னெப்போதும் இல்லாத வகையில் இந்தாண்டு 4 இலட்சத்து 12 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் குறுவை வேளாண் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மாவட்ட ஆட்சித் தலைவர்கள், நெல் கொள்முதல் நிலையங்களை விவசாயிகளின் தேவைக்கேற்ப கூடுதலாக தொடங்க வேண்டும். அதேபோல், நெல் கொள்முதல் நிலையங்களில் அறுவடை செய்யப்பட்டு கொண்டு வரப்படும் நெல் மூட்டைகளை பாதுகாக்க, போதுமான அளவு தார்பாய்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

வரலாற்று சாதனையாக மாண்புமிகு அம்மாவின் அரசு 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்று மிகக் குறுகிய காலத்திலேயே அவற்றிற்கான கட்டுமானப் பணிகளை துவக்கி உள்ளது.

கோயம்பேடு மார்கெட்

நான் ஏற்கெனவே கடந்த கூட்டத்தில் அறிவுறுத்தியது போல அப்பணிகளை மாவட்ட ஆட்சியர்கள் கள ஆய்வு செய்து, பணியினை விரைந்து முடிக்க தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டும். திரையரங்கு உரிமையாளர்களிடமிருந்து திரையரங்குகளை திறக்க கோரிக்கைகள் வந்தவண்ணம் உள்ளன. அதுபற்றி தற்போது நடைபெறும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டம் மற்றும் மருத்துவ நிபுணர்கள் குழு ஆய்வுக் கூட்டத்திற்கு பின், மருத்துவ நிபுணர்கள் கூறும் கருத்துக்களின் அடிப்படையில் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

கோயம்பேடு வளாகத்தில் உணவு தானிய விற்பனை அங்காடிகளும், மொத்த காய்கறி விற்பனை அங்காடிகளும் திறக்கப்பட்டு தற்போது செயல்பட்டு வருகின்றன. தற்போது சுமார் 7,500 வியாபாரிகள் தினமும் இந்த அங்காடியை பயன்படுத்தி வருகின்றனர். இங்கு நோய்ப் பரவல் தடுப்பை உறுதி செய்ய தினசரி கிருமி நாசினி தெளித்தல், சமூக இடைவெளியை கடைப்பிடித்தல் மற்றும் மருத்துவப் பரிசோதனையும் செய்யப்பட்டு வருகிறது. இத்தீவிர நோய்த் தடுப்புப் பணியை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் கண்காணிக்கவும். இதுசம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அவ்வப்போது ஆய்வு செய்து நோய்ப் பரவலைத் தடுப்பதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த ஆலோசனைக் கூட்டத்தின் வாயிலாக அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தற்காலிக இடத்தில் செயல்படும் பழக்கடை மொத்த வியாபாரம், பழம் மற்றும் காய்கறி சில்லரை வியாபாரக் கடைகளை திறப்பதற்கு தொடர்ந்து கோரிக்கைகள் வந்தவண்ணம் உள்ளன. தொழிலாளர்கள், வியாபாரிகள் மற்றும் அங்காடியைச் சார்ந்துள்ள அனைவரது வாழ்வாதாரத்தையும் கருத்தில் கொண்டும், அதேநேரத்தில் பொதுமக்களுக்கு குறைவான விலையில் காய்கறி, கனிகள் கிடைத்திட ஏதுவாகவும், சம்பந்தப்பட்ட அனைவரையும் கலந்தாலோசித்து, கோரிக்கை குறித்து உரிய நேரத்தில் அரசு முடிவெடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீபாவளி போன்ற பண்டிகைகள் வருவதால், பொதுமக்கள் பொது இடங்களில் கூடுவதை தொடர்ந்து கண்காணித்து, தொற்று ஏற்படாவண்ணம் முகக்கவசம், தனி நபர் இடைவெளி ஆகியவற்றை தவறாமல் கடைப்பிடிக்க ஒலிபெருக்கிகள் மூலம் விழிப்புணர்வினை தொடர்ந்து ஏற்படுத்த வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு நோய்ப் பரவல் தமிழகத்தில் படிப்படியாக குறைந்து வருகின்றன. இந்த சூழ்நிலையில் பள்ளிகள், கல்லூரிகள் திறப்பது குறித்தும், இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூறுகின்ற ஆலோசனைகள், மருத்துவ நிபுணர்கள் கூறுகின்ற ஆலோசனைப்படி அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

வேளாண் பணிகளைப் பொறுத்தவரை 100 சதவீதப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை, 100 சதவீதப் பணியாளர்களை வைத்து தொழிற்சாலைகள் இயங்கலாம் என ஏற்கெனவே அறிவிப்பு வெளியிடப்பட்டு, தொழிற்சாலைகள் 100 சதவீதப் பணியாளர்களை வைத்து இயங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு தொழிற்சாலைகளில், 90 சதவீதத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்களை வைத்து தொழிற்சாலைகள் இயங்கி வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிநீரைப் பொறுத்தவரை, பருவமழை நன்றாக பெய்ததன் காரணத்தால், தமிழகத்தில் குடிநீர் பிரச்சினை இல்லாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னை மாநகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியத்திலிருக்கின்ற

அனைத்து நிருவாகத்தின் உயரதிகாரிகளும் சரியான முறையில் நடவடிக்கை எடுத்த காரணத்தால், தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் மக்களுக்குத் தேவையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் முழுமையாக வழங்கப்பட்டு வருகிறது.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவர்களெல்லாம் அன்றைக்கு குறிப்பிட்டார்கள், அதாவது தமிழகத்தில் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. அண்டை மாநிலத்தில் தளர்வுகள் அதிகமாக இருக்கின்றன, ஆகவே, இங்கேயும் தளர்வுகள் வேண்டும். அங்கே தொற்று நோயை கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ளார்கள் என்ற செய்தியையெல்லாம் வேண்டுமென்றே திட்டமிட்டு இந்த அரசின் மீதுள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாக உண்மைக்கு புறம்பான செய்தியை தொடர்ந்து வெளியிட்டார்கள். இன்றைக்கு அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக நமது உயரதிகாரிகள் அரசின் ஆலோசனைகளைப் பெற்று தகுந்த நடவடிக்கை எடுத்ததன் காரணமாக, இன்றைக்கு நோய்ப் பரவல் படிப்படியாக குறைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவர்களெல்லாம் அன்றையதினம் அண்டை மாநிலத்தை ஒப்பிட்டு குறிப்பிட்டார்கள். தமிழகத்தில் தளர்வுகள் இல்லாமல் கடுமையாக்கப்பட்டிருக்கிறது. இதனால் தொழில்கள் முடங்குகின்றன, பல்வேறு பணிகள் முடங்குகின்றன என்ற செய்தியையெல்லாம் வெளியிட்டார்கள். இன்றைக்கு நிலைமை என்ன ? மாண்புமிகு அம்மாவின் அரசு சரியான நடவடிக்கை எடுத்ததன் காரணமாக இன்றைக்கு நோய்ப் பரவல் படிப்படியாக குறைந்து, இயல்பு நிலைக்கு திரும்பக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆனால், அண்டை மாநிலத்தில், அவர்கள் குறிப்பிட்ட அந்த மாநிலங்களிலெல்லாம் இன்றையதினம் அதிக அளவில் கொரோனா வைரஸ் பரவல் இருந்து வருகிறது. வெளி நாட்டிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்து வருபவர்களும் கட்டாயம் பரிசோதனை செய்த கொண்டுதான் தங்களுடைய மாநிலங்களுக்கு வரவேண்டும் என்ற கட்டுப்பாடுகள் விதித்துள்ளதாக செய்தி வருகின்றது. இதை எதற்காக சொல்கிறேன் என்றால், இன்றைக்கு அரசு எடுத்த நடவடிக்கையை வேண்டுமென்றே சிலர் கொச்சைப்படுத்துவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். அரசு எடுக்கின்ற நடவடிக்கையின் மூலமாகத்தான் நமது அரசு அதிகாரிகள் தங்களின் குடும்பத்தை மறந்து நாட்டு மக்களைக் காக்கவேண்டுமென்று கருதி, தன்னையே முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றினார்கள். அப்படி பணியாற்றுகின்றபொழுது பல்வேறு துறைகளைச் சேர்ந்த அரசு அலுவலர்கள் தங்கள் உயிரை நீத்திருக்கின்றார்கள், அதையெல்லாம் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

இது ஒரு புதிய நோய். தமிழ்நாடு அரசு அதை கட்டுப்படுத்தத் தவறியதைப் போலவும் தினந்தோறும் அறிக்கை விட்டு மக்களை குழப்பி அரசியல் ஆதாயம் தேடுவதை இனிமேல் நிறுத்திக் கொள்ள வேண்டும். அரசு சரியான முறையில் நடவடிக்கை எடுத்து வருகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த கூடுதல் தலைமைச் செயலாளர்கள் அந்தஸ்தில் உள்ளவர்கள், முதன்மைச் செயலாளர் அந்தஸ்தில் உள்ளவர்கள், அரசு செயலாளர்கள், அரசு உயரதிகாரிகள் மற்றும் மருத்துவ நிபுணர்கள் ஆகியோரது கருத்துக்களைக் கேட்டுத்தான் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அப்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாகத்தான், தமிழகத்தில் நோய்ப் பரவல் குறைக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியை மக்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அர்ப்பணிப்பு உணர்வோடு அரசு தெரிவித்த ஆலோசனைகளைப் பின்பற்றி, சரியான முறையில் நடவடிக்கை எடுத்த அனைத்து அரசு உயரதிகாரிகளுக்கும், பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் பாராட்டுக்களையும் நன்றியையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித்தலைவி அம்மாவின் அரசு பல்வேறு சாதனைகளை புரிந்து கொண்டிருக்கிறது. நோய்ப் பரவல் இருக்கின்ற இந்த காலத்தில் கூட, எல்லா துறைகளிலும் தங்குதடையில்லாமல் வளர்ச்சியை காண முடிந்திருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அரசின் கோவிட்–19 தடுப்பு நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து முழு ஒத்துழைப்பு வழங்கி வரும் பொதுமக்களுக்கும், செம்மையான முறையில் பணியாற்றி வருகின்ற அனைத்து அரசு அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும், மீண்டும் ஒருமுறை எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுமக்களின் நலன் கருதி, அரசு எடுத்து வரும் கோவிட்–19 தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அனைத்திற்கும் பொது மக்கள் தொடர்ந்து முழு ஒத்துழைப்பினை நல்குமாறு அன்போடு கேட்டுக் கொண்டு எனது உரையை நிறைவு செய்கின்றேன்.

மாவட்ட நிருவாகம் கொரோனா தொடர்பான விழிப்புணர்வை மக்களிடத்தில் தொடர்ந்து ஏற்படுத்த வேண்டும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்
தலைமைச் செயலகத்தில், 28.10.2020 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுடனான
கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுத் தடுப்புப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய முடிவுரையிலிருந்து.

கொரோனா வைரஸ் நோய்ப் பரவலைத் தடுப்பதற்கு நாம் ஏற்கெனவே பல்வேறு ஆலோசனைகளை வழங்கிக் கொண்டுதான் இருக்கின்றோம். ஆனால், பொதுமக்கள் அதை சரிவர கடைபிடிப்பது கிடையாது. மாவட்ட நிருவாகம் கவனமாக இருந்து அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். வெளியிலே சென்றால் கண்டிப்பாக முகக்கவசம் அணிய வேண்டும். பொருட்களை வாங்குகின்றபொழுது சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டும். வீட்டிற்குச் சென்றவுடன் கைகளை சுத்தமாக சோப்பு போட்டு கழுவ வேண்டும். வீட்டை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும், இவற்றை தொடர்ந்து கடைப்பிடித்தால்தான் கொரோனா வைரஸ் நோய்ப் பரவலைத் தடுக்க முடியும். மாவட்ட நிருவாகம், இதற்கான விழிப்புணர்வை மக்களிடத்தில் தொடர்ந்து ஏற்படுத்த வேண்டும். இப்பொழுது தமிழகத்தில் 35 சதவீதத்திற்கு மேற்பட்ட மக்கள் முகக்கவசம் அணிவது கிடையாது. எனவே, அனைவரும் முகக்கவசம் அணியக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதற்கு மாவட்ட நிருவாகம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பொது மக்களுக்கு விழிப்புணர்வு இல்லாத காரணத்தால்தான், இந்த நோயினுடைய தன்மை, அறிகுறி மற்றும் வீரியத்தை உணராமல் இருக்கும் காரணத்தினால்தான், முகக்கவசம் அணியாமல் அலட்சியமாக இருக்கின்றார்கள். ஆகவே, மாவட்ட நிருவாகம் கவனமாக செயல்பட்டு, அனைவரையும் முகக்கவசம் அணியச் செய்ய வேண்டும்.

இப்பொழுது தீபாவளி பண்டிகை வரவிருக்கின்றது. சென்னை மாநகரத்தில் தெருக்கள் முழுவதும் மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கின்றது. பலர் முகக்கவசம் அணியாமல் இருக்கின்றார்கள். காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் விழிப்புணர்வை தொடர்ந்து ஏற்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். அப்பொழுதுதான், அவர்கள் முகக்கவசம் அணியக்கூடிய சூழ்நிலை உருவாகும், நோய்ப் பரவலைத் தடுக்க முடியும்.

கொரோனா வைரஸ் நோய் இருக்கின்ற பகுதிகளில், தொடர்ந்து கிருமிநாசினி தெளித்துக் கொண்டே இருக்க வேண்டும். பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி நிருவாகங்கள் இதில் தனிக்கவனம் செலுத்த வேண்டும். அதோடு, பொதுக் கழிப்பறைகளை சுத்தமாக வைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பருவமழை துவங்கவிருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்திருக்கிறது. பருவமழை துவங்குகின்ற இந்த சூழ்நிலையில் தமிழகம் முழுவதும் எங்கும் தண்ணீர் தேங்காமல் மாவட்ட நிருவாகம் பார்த்துக் கொள்ள வேண்டும். தண்ணீர் தேங்கினால் டெங்கு கொசு உற்பத்தியாகி, டெங்கு காய்ச்சல் ஏற்படும். ஆகவே, மாவட்ட நிருவாகம் விழிப்போடு இருந்து செயல்பட வேண்டும்.

கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பது குறித்து பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்தாலும், சில மாவட்டங்களில் திடீரென்று அதிகரித்து விடுகிறது, அப்படி அதிகரித்து விடாமல் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒருசில மாவட்டங்களில், கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 100க்கு மேல் இருக்கிறது. தீபாவளி வருவதற்குள் 100க்கு கீழ் கொண்டுவர வேண்டும். இன்னும் சில மாவட்டங்களில், கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 100க்கு கீழ் இருக்கிறது, அதை 50க்கு கீழ் குறைக்க வேண்டும். 50க்கு கீழுள்ள மாவட்டங்களில் பெரும்பாலும், கொரோனா வைரஸ் நோய்ப் பரவல் இல்லை என்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும். நோய்ப் பரவல் இல்லை என்ற சூழ்நிலையை உருவாக்குவதற்கு மாவட்ட நிருவாகம் வேகமாக, துரிதமாக நடவடிக்கை எடுத்து அதற்குண்டான பணிகளை நீங்கள் செய்ய வேண்டுமென்று அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, மாவட்ட ஆட்சித் தலைவர்களும், பல்வேறு துறைகளைச் சேர்ந்த உயரதிகாரிகளும் ஒருமித்த கருத்தோடு பணியாற்றிய காரணத்தினால், கொரோனா வைரஸ் நோய்ப் பரவல் தமிழகத்திலே படிப்படியாக குறையத் தொடங்கியிருக்கிறது, இது வரவேற்கத்தக்கது. இன்னும் குறுகிய காலத்தில், தமிழகத்தில் கொரோனா வைரஸ் நோய்ப் பரவல் இல்லை என்ற நிலையை உருவாக்க நீங்கள் பாடுபட வேண்டும்.

நவம்பரில் பூத்த

செம்மொழிச் சிற்பிகள்...



அ.ச.ஞான சம்பந்தன்

தோற்றம் : 10.11.1916

இலக்கியப் பணிக்காக சாகித்ய அகாடமி விருது பெற்றவர். மரபு இலக்கியங்களில் ஆழ்ந்தகழ்ந்து முத்தெடுக்க வல்லவர். 35 ஆய்வு நூல்கள். 3 மொழிபெயர்ப்பு நூல்கள், எண்ணற்ற இலக்கியக் கட்டுரைகள், சொற்பொழிவுகள் என்று தமிழ்த் தொண்டைப் பல முனைகளில் ஆற்றியவர். அ.ச.ஞா என தமிழ் ஆர்வலர்களால் அன்போடு அழைக்கப்பட்டவர்.

அரசங்குடி பெருஞ்சொல் விளக்க ஞான சம்பந்தன்

திருச்சிக் கல்லணையை அடுத்த சிற்றூர் அரசங்குடியில் பிறந்தவர். தந்தை பெருஞ்சொல் விளக்கனார் அ.மு. சரவண முதலியார். தாயார் சிவகாமி அம்மையார்.

1935இல் இலால்குடியில் தனது பள்ளிப்படிப்பை முடித்த அ.ச.ஞா. தனது இடைநிலை வகுப்புக்காக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். பின் பட்டப்படிப்புக்கு அவர் இயற்பியல் பாடத்தை எடுத்தார். அப்போது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நாவலர் சோமசுந்தர பாரதியார் பணிசெய்து வந்தார். அவரது கவனம்அ.ச.ஞா.விடம் திரும்பியது. அ.ச.ஞா.வின் இலக்கணத் தெளிவும், இலக்கிய அறிவும், அவரது தமிழின் ஆளுமையும், நாவலர் சோமசுந்தர பாரதியாரை அசர வைத்தது. தமிழின்பால் இத்தனை ஆர்வமும் அறிவும் கொண்ட இளைஞன் தன் அறிவை இயற்பியலுக்குச் செலுத்துவதா ? என உளம் கொதித்தது ஆனால், அ.ச.ஞா.வுக்குத் தந்தை என்ன சொல்வாரோ என ஒரு சிறு அச்சம். நாவலர் அரசங்குடிக்கே சென்று படித்திருந்த அ.ச.ஞா.வை மீண்டும் தமிழ்த் துறையில் சேர்க்க வைத்தார்.

இப்படியாக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அவரது தமிழ்ப் புலமைக்கு எப்படி நாவலர் அடித்தளமிட்டாரோ, அதுபோல் அ.ச.ஞா. அவர்களின் ஆங்கில அறிவுக்குப் புடம் போட்டவர், வெள்ளி நாக்கு என அழைக்கப்பட்ட சீனிவாச சாஸ்திரியார், பிற்காலத்தில் பல மொழிபெயர்ப்புகளில் அ.ச.ஞா. ஈடுபடுவதற்கு அந்த ஆங்கிலப் புலமை கை கொடுத்தது. பின்னால், அவர் மேற்கொண்ட மொழிபெயர்ப்புப் பணிகளுக்கு இந்த ஆங்கில அறிவே அடிப்படைக் காரணமாகும். தன் முதுகலைப் பட்டப்படிப்பு முடிந்ததும் பச்சையப்பன் கல்லூரியில் பதினாறு ஆண்டு காலம் தமிழ்த்துறையில் விரிவுரையாளராகவும், பேராசிரியராகவும் பணியாற்றினார். பின் சென்னை வானொலியில் நாடக அமைப்பாளராக சில காலமும், மூன்று ஆண்டு செய்தி விளம்பரத் துறையிலும் பணியாற்றியவர் பிற்பாடு தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி துறையின் இணை இயக்குனராகவும், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறை தலைவராகவும் பணியாற்றினார்.

கம்பன் புதிய பார்வை நூலுக்காக 1985ஆம் ஆண்டு “சாகித்ய அகாடமி பரிசும்”, இலக்கியக் கலை நூலுக்காக தமிழக அரசின் பரிசும், பெரிய புராணம் நூலுக்காக 1987 ஆம் ஆண்டு இலக்கியச் சிந்தனை பரிசும் 2000ஆம் ஆண்டு குறள்பீட விருதும் இவர் தன் நெடிய பாதையில் கண்டடைந்த சிகரங்கள்.

மறைவு : 27.08.2002

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில்

➤ ரூ.21.96 கோடி மதிப்பீட்டில் வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதை

➤ ரூ.59.28 கோடி மதிப்பீட்டில் 21 பாலங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 28.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் சென்னை மாவட்டம், அம்பத்தூர் வட்டம், கொரட்டூர் இரயில் நிலையம் அருகில் உள்ள இரயில்வே கடவு எண் 4க்கு மாற்றாக, ரூ.21.96 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட சுரங்கப் பாதையை காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, வேலூர், திருவாரூர், இராமநாதபுரம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி, அரியலூர், தென்காசி, திருநெல்வேலி, தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் ரூ.59.28 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 21 பாலங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள்.

மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் சாலை உள்கட்டமைப்பு வசதிகளின் முக்கியத்துவத்தினை உணர்ந்தும், பெருகிவரும் போக்குவரத்து தேவைக்கேற்ப சாலைகளின் கொள்ளளவை அதிகரிக்கவும், பாதுகாப்பான பயணத்தினை உறுதிசெய்யவும், மாநிலம் முழுவதும் புதிய பாலங்களை கட்டுதல்,

> மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 28.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், காணொலிக் காட்சி மூலமாக மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்.

தேவையான பகுதிகளில் தரமான சாலைகளை அமைத்தல், சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல் போன்ற பணிகளை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், சென்னை மாவட்டம், அம்பத்தூர் வட்டம், கொரட்டூர் இரயில் நிலையம் அருகில் உள்ள இரயில்வே கடவு எண் 4க்கு மாற்றாக, ரூ.21.96 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட சுரங்கப் பாதையை காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், இரும்புலிச்சேரி மற்றும் சேவூர் கிராமங்களின் இடையில்,

செங்கல்பட்டு மாவட்டம் – இரும்புலிச்சேரி – சேவூர் கிராமம் இடையில், இரும்புலிச்சேரியில் பாலாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம் – ரூ.14.30 கோடி

சென்னை மாவட்டம் – கொரட்டூர் இரயில் நிலையம் அருகில், இரயில்வே கடவு எண்.4க்கு மாற்றாக கட்டப்பட்டுள்ள ஒரு வரையறுக்கப்பட்ட சுரங்கப் பாதை – ரூ.21.96 கோடி

இரும்புலிச்சேரியில் ரூ.14.30 கோடி மதிப்பீட்டில் பாலாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம்;

இராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி வட்டம், சிறுகரும்பூர் – வேகாமங்கலம் சாலையில், சிறுகரும்பூரில் ரூ.4.34 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், பெரும்பாடி – சேம்பள்ளி – ஜிட்டப்பள்ளி சாலையில், ஜிட்டப்பள்ளியில் ரூ.7.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டம், பூவனூர் – காளாச்சேரி – முன்னவால் கோட்டை சாலையில், காளாச்சேரியில் ரூ.1.95 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், இராமநாதபுரம் – எமனேஸ்வரம் சாலையிலிருந்து பி.கொடிக்குளம் சாலை, பந்தப்பனேந்தலில் ரூ.3.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், அனுமந்தீர்த்தம் – பொய்யப்பட்டி சாலையில், பன்னிமடுவில் ரூ.4.7 கோடி மதிப்பீட்டிலும்; காரிமங்கலம் வட்டம், மல்லசமுத்திரம் – அனுமந்தபுரம் சாலையில், சாவடியூரில் ரூ.1.56 கோடி மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள 2 பாலங்கள்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், கொப்பம்பட்டி – விஸ்வாம்பாள்சமுத்திரம் – B.மேட்டூர் சாலையில், கோட்டப்பாளையத்தில் தாழையாற்றின் குறுக்கே ரூ.1.9 கோடி மதிப்பீட்டிலும்; முசிறி வட்டம், வாளவந்தி – துளையாநத்தம் (வழி) மங்களம் சாலையில், மங்களத்தில் ரூ.1.36 கோடி மதிப்பீட்டிலும்; பைத்தம்பாறை – சேருகுடி சாலையில், நாடார் காலனியில் ரூ.1.62 கோடி மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள 3 பாலங்கள்;

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், கல்லாத்தூர் – பாப்பாக்குடி – மேலணைக்குழி சாலையில், பாப்பாகுடியில் ரூ.1.54 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

தென்காசி மாவட்டம், சிவகிரி வட்டம், வாசுதேவநல்லூர் – பூலாங்குளம் சாலையில், வாசுதேவநல்லூரில் ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், சிவசைலம் – தருமபுரம்மடம் சாலையில், சிவசைலத்தில் ரூ.99 இலட்சம் மதிப்பீட்டிலும்; கரம்பை – பொட்டல் சாலையில், பொட்டலில் ரூ.1.43 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் நாங்குநேரி வட்டம், ரெட்டியார்பட்டி – விஜயநாராயணம் சாலையில், தாமரைச்செல்வியில் ரூ.1.98 கோடி மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள 3 பாலங்கள்;

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், சின்னப்புலிக்குடிகாடு – ராகவாம்பாள்புரம் சாலையில், சின்னப் புலிக்குடிகாட்டில் ரூ.1.55 கோடி மதிப்பீட்டிலும்; சாலியமங்கலம் – சடையார்கோவில் சாலையில், சடையார்கோவிலில் ரூ.1.55 கோடி மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள 2 பாலங்கள்;

கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் வட்டம், கணபதி – அத்திப்பாளையம் சாலையில், அத்திப் பாளையத்தில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டிலும்; கிணத்துக்கடவு வட்டம், காமநாயக்கன்பாளையம் – நெகமம் – செட்டிபாளையம் சாலையில், பனப்பட்டியில் ரூ.1.60 கோடி மதிப்பீட்டிலும்; பொள்ளாச்சி வட்டம், செடிமுத்தூர் – கோபாலபுரம் சாலையில் பிரிந்து கேரளா எல்லை முதல் தப்பட்டைக் கிழவன்புதூர்

கோயம்புத்தூர் மாவட்டம் – செடிமுத்தூர் – கோபாலபுரம் சாலை, எல்லைப்பள்ளத்தில் கட்டப்பட்டுள்ள பாலம் – ரூ.2.50 கோடி

செல்லும் சாலையில், எல்லைப் பள்ளத்தில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள 3 பாலங்கள்;

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், காரமடை – பெரியபட்டி – நெகமம் சாலை (வழி) ஆமந்தக்கடவு சாலையில், வீதம்பட்டியில் ரூ.1.85 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

என மொத்தம் ரூ.81.24 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 21 பாலங்கள் மற்றும் ஒரு வரையறுக்கப்பட்ட சுரங்கப் பாதை ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் ரூ.45 கோடி மதிப்பீட்டில், 21 மாவட்டங்களில், நிறுவப்பட்டுள்ள 25 தொடர் சுற்றுப்புற காற்றுத் தர கண்காணிப்பு நிலையங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 28.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக தமிழ்நாட்டில் உள்ள 21 மாவட்டங்களில் 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள 25 தொடர் சுற்றுப்புற காற்றுத் தர கண்காணிப்பு நிலையங்களை (Continuous Ambient Air Quality Monitoring Stations) திறந்து வைத்தார்கள்.

காற்றுத் தர கண்காணிப்பு நிலையம் நிறுவப்பட்டுள்ள மையம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்
28.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில்
காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்கள்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தமிழ்நாட்டில் முக்கிய நகரங்கள் மற்றும் தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிகள் உள்ள 28 இடங்களில் தேசிய காற்று மண்டல கண்காணிப்பு (National Ambient Air Quality Monitoring Programme) திட்டத்தின் கீழ், வாரத்தில் இரண்டு நாட்கள் காற்று மாதிரி சேகரிப்பு செய்து காற்றின் தரத்தினை கண்காணித்து வருகின்றது. இது தவிர சுற்றுப்புற காற்று தன்மையை தொடர்ந்து 24 மணி நேரமும் கண்காணிக்கும் வகையில் சென்னையில் 5 இடங்களிலும், கும்மிடிப்பூண்டி, கோயம்புத்தூர், பெருந்துறை, தூத்துக்குடி ஆகிய இடங்களில் தலா ஒரு தொடர் காற்று தர கண்காணிப்பு நிலையங்களும் (Continuous Ambient Air Quality Monitoring Stations) இயங்கி வருகின்றன. இதில் பதிவாகும் புள்ளி விபரங்களைக் கொண்டு காற்றின் தர குறியீடு (Air Quality Index)

காற்றுத் தர பகுப்பாய்வு கருவிகள்

கணக்கிடப்பட்டு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளத்தில் வெளியிடப்படுகிறது.

இத்திட்டத்தினை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தும் நோக்கில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடந்த 27.08.2015 அன்று சட்டப்பேரவை விதி எண் 110இன் கீழ், வெளியிட்ட அறிவிப்பில், இந்தியாவில் மிகவும் நகரமயமானதும், தொழிற்சாலைகள் மிகுந்த மாநிலங்களில் ஒன்றாகவும் தமிழ்நாடு விளங்குகிறது. காற்று மாசுபடுவதற்கு முக்கிய காரணியாக வாகனங்கள் மற்றும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் புகை உள்ளது. எனவே, காற்றின் தன்மையை நகர மற்றும் தொழிற்சாலைப் பகுதிகளில் கண்காணிப்பது மற்றும் தகுந்த தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது மிகவும் அவசியமாகிறது. எனவே, காற்றின் தன்மையை தொடர்ச்சியாக உடனுக்குடன் கண்காணிக்க மாநிலம் முழுவதும் உள்ள நகரம் மற்றும் தொழிற்சாலைப் பகுதிகளில் 25 இடங்களில் தொடர் காற்று கண்காணிப்பு நிலையங்கள் நிறுவப்படும் என்று அறிவித்தார்கள்.

அதன்படி, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், கிருஷ்ணகிரி, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், சேலம், கடலூர், நாகப்பட்டினம், அரியலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, கரூர், நாமக்கல், திருப்பூர், கோயம்புத்தூர், நீலகிரி, இராமநாதபுரம், மதுரை, விருதுநகர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலுள்ள 25 இடங்களில் 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள சுற்றுப்புற காற்றுத்தர கண்காணிப்பு நிலையங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்நிலையங்களில், **காற்றில் கலந்துள்ள மாசு காரணிகள் 10 மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள நுண்துகள்கள் (PM_{10}), 2.5 மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள நுண்துகள்கள் ($PM_{2.5}$), சல்பர்–டை–ஆக்ஸைடு (SO_2), நைட்ரஜன்–டை–ஆக்ஸைடு (NO_2), அம்மோனியா (NH_3), ஓசோன் (O_3), கார்பன் மோனக்சைடு (CO) மற்றும் பென்சின், டெலுவின், ஜைலின் ஆகியவற்றின் அளவுகள் ஒவ்வொரு 15 நிமிடத்திற்கு ஒருமுறை தொடர்ந்து பதிவு செய்யப்பட்டு, இப்புள்ளி விவரங்கள் ‘6x4’ அளவிலான மின்னணு காட்சிப் பலகையில் (Electronic Display Board) பொதுமக்களின் பார்வைக்காக தொடர்ந்து காட்சிப்படுத்தப்படும்.** இப்புள்ளி விவரங்களைக் கொண்டு காற்று தன்மை குறியீடு (Air Quality Index) கணக்கிடப்பட்டு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளத்தில் வெளியிடப்படும்.

மேலும், இந்நிலையங்களிலிருந்து பெறப்படும் புள்ளி விவரங்கள் கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களின் ஆராய்ச்சிக்கு பயன்படுத்திக் கொள்ளும் வகையில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், அந்தந்த மாவட்டங்களின் அருகிலுள்ள பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. அத்துடன், மாண்புமிகு தேசிய பசுமைத் தீர்ப்பாய உத்தரவின்படி, காற்றுத்தரக் குறியீட்டினை எட்டாத நகரங்களுக்கு (Non-attainment cities) காற்று மாசு கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து கொள்கை முடிவு எடுக்கவும், திட்ட அறிக்கை தயாரித்து செயல்படுத்தவும், புதிய தொழிற்சாலைகள் சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்காக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயார் செய்வதற்கும் இப்புள்ளி விவரங்கள் பயன்படுத்தப்படும்.

மேற்படி 25 தொடர் காற்றுத் தர கண்காணிப்பு நிலையங்கள் செயல்பட துவங்கியதன் மூலம் நாட்டிலேயே அதிக எண்ணிக்கையில் தொடர் காற்றுத் தர கண்காணிப்பு நிலையம் கொண்ட வாரியமாக, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் திகழ்ந்து தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்ப்பது குறிப்பிடத்தக்கதாகும்.



காற்றுத் தர அளவீடு காட்சி பலகை

குழந்தைத் திருமணம், வளரிளம் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் மற்றும் அவற்றை எதிர்கொள்ளுதல் பற்றிய விழிப்புணர்வு தகவல் தொடர்புக் கைமேடுகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 28.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில் 23 புத்தகங்கள் அடங்கிய தொகுப்பை வெளியிட்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 28.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், வளரிளம் பருவத்தினரின் தன்னுரிமை மேம்பாடு மற்றும் குழந்தைத் திருமண முறையை முடிவுக்குக் கொண்டு வருதல் திட்டத்தின் ஒரு பகுதியாக, யுனிசெஃப் அமைப்பின் நிதியுதவியுடன், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககத்தின் மாநிலக் கருவூல மையம் சார்பில் தயாரிக்கப்பட்ட 23 புத்தகங்கள் அடங்கிய இளந்தென்றல் தகவல் தொடர்புக் கையேடுகளை வெளியிட்டார்கள்.

குழந்தைத் திருமணம், வளரிளம் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் மற்றும் அவற்றை எதிர்கொள்ளுதல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககத்தின் மாநிலக் கருவூல மையம் சார்பில் தயாரிக்கப்பட்ட 23 புத்தகங்கள் அடங்கிய இளந்தென்றல் தகவல் தொடர்புக் கையேடுகளான, இளந்தென்றல் பெட்டகம் – ஓர் அறிமுகம், வளரிளம் பருவ ஆண்கள் மற்றும் பெண்களின் தன்னுரிமை மேம்பாடு – வாழ்க்கைத்திறன் பயிற்சிக் கையேடு, பாலினம் சார்ந்த வன்முறை – வளரிளம் பருவத்தினருடன் பேசுவோம், குழந்தைத் திருமணம் – ஏன்? எதற்கு? எப்படி? வளரிளம் பருவ ஆண்களுக்கான திறன் வளர்ப்புப் பயிற்சிக் கையேடு, வளரிளம் பருவ பெண்களுக்கான திறன் வளர்ப்புப் பயிற்சிக் கையேடு, வளரிளம் பருவ ஆண் மற்றும் பெண்களுக்கான திறன் வளர்ப்புப் பயிற்சிக் கையேடு, முன்னணிக் களப்பணியாளர்களுக்கான திறன் வளர்ப்புப் பயிற்சிக் கையேடு, குழந்தைகள் மற்றும் வளரிளம் பெண்களுக்கான சட்டங்கள் மற்றும் திட்டங்கள், களத்தில் சவால்களை எதிர்கொள்வதற்கான உத்திகள், காவல் துறையினர் – நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள், பள்ளி ஆசிரியர்கள் – நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு

வழிமுறைகள், முன்னணிக் களப்பணியாளர்கள் – நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள், மாவட்ட குழந்தைத் திருமண தடுப்பு அலுவலர் – நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள், மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலுவலர் – நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள், பஞ்சாயத்து தலைவர்கள், உறுப்பினர்கள் – நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள், பாலினம் சார்ந்த வன்முறை மற்றும் குழந்தைத் திருமணம் பற்றி காவல் துறையினருக்கான பயிற்சிக் கையேடு, பாலினம் சார்ந்த வன்முறை மற்றும் குழந்தைத் திருமணம் பற்றி ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கையேடு, பாலினம் சார்ந்த வன்முறை மற்றும் குழந்தைத் திருமணம் பற்றி முன்னணிக் களப்பணியாளர்களுக்கான பயிற்சிக் கையேடு, பாலினம் சார்ந்த வன்முறை மற்றும் குழந்தைத் திருமணம் பற்றி மாவட்ட குழந்தை திருமண தடுப்பு அலுவலர்களுக்கான பயிற்சிக் கையேடு, பாலினம் சார்ந்த வன்முறை மற்றும் குழந்தைத் திருமணம் பற்றி மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலுவலர்களுக்கான பயிற்சிக் கையேடு, பாலினம் சார்ந்த வன்முறை மற்றும் குழந்தைத் திருமணம் பற்றி பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கான பயிற்சிக் கையேடு, பாதுகாப்பான குழந்தைப் பருவத் திட்டம் – பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கான கையேடு ஆகிய புத்தகங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள்.

குழந்தைத் திருமணங்கள் அதிகமாக நடைபெறும் மாவட்டங்களான திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், பெரம்பலூர், சேலம், விருதுநகர் மற்றும் தேனி ஆகிய 7 மாவட்டங்களில் குழந்தைத் திருமணத் தடைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் சமூக நலத்துறை, சமூக பாதுகாப்புத் துறை (குழந்தை நலக்குழு, மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலகு, இளஞ்சிறார் நீதிக் குழுமம்), காவல் துறை, பள்ளிக் கல்வித் துறை ஆசிரியர்கள், பஞ்சாயத்து துறை மற்றும் முன்னணிக் களப்பணியாளர்கள் போன்றவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக இக்கையேடுகள் வழங்கப்படும்.

பசுமரத்தாணி

ஒரு சிறுவன் அவனுடைய தேர்வுத்தாளை மாலையில் அவன் வீடு திரும்பியதும், அதனை தந்தை வாங்கிப் பார்க்கிறார். 5 மதிப்பெண் வாங்கி வந்திருக்கிறான் என்பதை கண்டு ஆத்திரமடைந்த தந்தை, கண்மண் தெரியாமல் கோபம் பையனைப் போட்டு அடிக்கிறார். அவன் பரீட்சைப் பேப்பரைக் காட்டி ஏதோ சொல்ல வருகிறான். ஆனால், அப்பா கேட்பதாக இல்லை. வெளுத்து வாங்கி விட்ட பிறகுதான் ஓய்கிறார்.

மறுநாள் காலை தன் மகனை அழைத்துக் கொண்டு பள்ளிக்குப் போகிறார். தலைமை ஆசிரியரைப் பார்த்து, ஆத்திரத்துடன் கேட்கிறார். "என்ன பாடம் நடத்துறீங்க நீங்க? என் மகன் 5 மார்க் வாங்கிக் கொண்டு வருகிறான். இதுதான் நீங்க சொல்லித்தரும் இலட்சணமா'' என்று திட்டும் அப்பாவிடம் தலைமையாசிரியர் அமைதியாகச் சொல்லுகிறார். "ஐயா, உங்கள் மகன் 5க்கு 5 மார்க் வாங்கியிருக்கிறான். அதைக் கவனிக்கவில்லையா நீங்கள்?'' தந்தை திடுக்கிட்டுப் போய்த் தன் கையிலுள்ள பேப்பரைப் பார்க்கிறார். மகன் 5க்கு 5 மதிப்பெண்தான் வாங்கியிருக்கிறான்.

"இதை ஏன் நீ நேற்று சொல்லவில்லை?'' என்று மகனிடம் பாய்கிறார்.

"அதைச் சொல்வதற்குத்தானே அப்பா நான் பலமுறை முயற்சி செய்தேன். நீங்கள் காது கொடுத்துக் கேட்காமலே அடித்தீர்கள்'' என்கிறான்.

தந்தைக்கு அப்போதும் தான் செய்த தவறு புரியவில்லை. அவருக்கு அதுபற்றி எந்தக் குற்ற உணர்வும் இல்லை.

ஏன் பெற்றோர் பிள்ளைகளைப் புரிந்து கொள்ளாமல் அடிக்கிறார்கள்? பால்ய வயதின் கசப்பு எளிதில் மறந்து போகாது.

இந்நிகழ்வு, அந்தச் சிறுவனின் மனதில் பசுமரத்தாணி போல் பதிந்துவிடும்.

ரூ.77.25 கோடி மதிப்பீட்டில், வணிகவரி மற்றும் பதிவுத் துறை கட்டடங்கள்

> மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
> திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 28.10.2020 அன்று
> தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 28.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், வணிகவரி மற்றும் பதிவுத் துறை சார்பில் சென்னை மாவட்டம், கிண்டி வட்டம், நந்தனத்தில் 73 கோடியே 17 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை கட்டடத்தை காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், 4 கோடியே 7 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் இராஜபாளையம் மற்றும் பழனியில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடங்கள் மற்றும் மதுரை ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடத்தில் நிறுவப்பட்டுள்ள 3 மின்தூக்கிகள் ஆகியவற்றையும் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடந்த 07.08.2014 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–இன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், வணிகவரித் துறை அலுவலகங்களுக்கு வருகை புரியும் வணிகர்களுக்கு கூடுதல் வசதிகளை செய்திடும் வகையிலும், பணியாளர்கள் பணிபுரிவதற்கான உகந்த சூழ்நிலையை உருவாக்கும் வகையிலும், அனைத்து வசதிகளுடன் கூடிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டு என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக, சென்னை நகரில் வணிகவரி அலுவலகங்களை உள்ளடக்கிய அனைத்து வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த இரண்டு வணிகவரி அலுவலகங்கள் கட்டப்படும் என்று அறிவித்தார்கள். அதன்படி, சென்னை, வேப்பேரியில் கட்டப்பட்ட வடசென்னை ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 19.11.2019 அன்று திறந்து வைத்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக, சென்னை மாவட்டம், கிண்டி வட்டம், நந்தனத்தில், 23,360 சதுர மீட்டர் பரப்பளவில், 73 கோடியே 17 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். இப்புதிய கட்டடமானது தரை மற்றும் 7 தளங்களுடன், 60 வணிகவரி அலுவலகங்கள் மற்றும் 7 பதிவுத் துறை அலுவலகங்களை உள்ளடக்கி கட்டப்பட்டுள்ளது. மேலும், இக்கட்டடம், மின்தூக்கிகள், ஜெனரேட்டர் வசதி, மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்தள வசதி, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு, கூட்ட அரங்கு உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

மேலும், விருதுநகர் மாவட்டம் – இராஜபாளையத்தில் 1 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம்; திண்டுக்கல் மாவட்டம் – பழனியில் 1 கோடியே 53 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம்; மதுரை, ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடத்தில் 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள 3 மின்தூக்கிகள்;

என மொத்தம் 77 கோடியே 24 இலட்சத்து 83 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான வணிகவரி மற்றும் பதிவுத்துறை கட்டடங்கள் மற்றும் மின்தூக்கிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

நவம்பரில் பூத்த

செம்மொழிச் சிற்பிகள்...

சி. இலக்குவனார்

தமிழுக்காக வாழ்ந்த தகைமையாளர். தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர். **“யெஸ் சார்” என ஆங்கிலத்தில் கூறித் தங்களது வருகையை வகுப்பில் மாணவர்கள் பதிவு செய்த காலத்தில் “உள்ளேன் ஐயா” எனத் தமிழில் முதன்முதலாக உரக்கக் கூவச் செய்தவர். பிற்பாடு தமிழகம் முழுவதும் இவ்வழக்கம் வகுப்புகளில் பரவக் காரணமாக இருந்தவர்.**

சி.இலக்குவனார், தஞ்சை மாவட்டத்தில் வாய்மைமேடு எனும் இடத்தில் பிறந்தவர். தந்தை பெயர் சிங்காரவேலர், தாயார் இரத்தினம் அம்மையார். வாய்மைமேடு துவக்கப் பள்ளியில் தன் கல்விப் பயணத்தைத் துவக்கிக்கொண்ட இலக்குவனார் பின்பு இராசாமடம் பள்ளியில் நடுநிலைக் கல்வி பயின்றார். இங்கு இவருக்கு ஆசிரியராக இருந்தவர் தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய சாமி சிதம்பரனார் அவர்கள். பிறகு ஒரத்தநாட்டுக்குச் சென்று தன் உயர்நிலைக் கல்வியை முடித்துக்கொண்ட இலக்குவனார் திருவையாறு மன்னர் கல்லூரியில் புலவர் பட்டப்படிப்பில் சேர்ந்து தேர்வில் மாநிலத்திலேயே முதல் மாணவனாக அறிவிக்கப்பட்டார். தொடர்ந்து பி.ஓ.எல் மற்றும் முதுகலைப் பட்டங்களையும் சேர்த்து தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் தனிச்சிறப்பு வாய்ந்தவராக உருவெடுக்கத் துவங்கினார்.

படித்து முடித்த கையோடு திருவாரூர் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக வேலை பார்த்தார். குலசேகரன்பட்டினத்தில் தொடங்கிய தமிழ்க் கல்லூரியில் முதல்வராகப் பணியமர்த்தம் பெற்றார். பின்னர் நெல்லை ம.தி.தா இந்துக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகவும், 1947இல் விருதுநகரில் தொடங்கப்பெற்ற வி.இ.செந்திற்குமார நாடார் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணிபுரிந்தார். ஈரோடு மகாசனக் கல்லூரி, நாகர்கோவில் தெ.தி. இந்துக் கல்லூரி, மதுரை தியாகராசர் கல்லூரி என இவர் பணியாற்றிய கல்லூரிகளின் பட்டியல் பெரிதாகும். மாணவரிடையே தமிழுணர்வை இவர் ஊட்டியமை, இவர் மாணவர்களைப் புரட்சிக்குத் தூண்டுவதாகக் கல்லூரிப் பொறுப்பாளர்களைக் கருதச் செய்தது.

அம்மூவனார், தொல்காப்பிய ஆராய்ச்சி, எழிலரசி, மாணவராற்றுப் படை, வள்ளுவர் கண்ட இல்லறம், பழந்தமிழ் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ள இலக்குவனார் தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து தன் வாழ்நாளை சிறப்பித்துக் கொண்டார். பிற்பாடு முதல்வராக இருந்த அண்ணா அவர்கள் போப்பைச் சந்தித்தபோது இந்நூலைத்தான் அவருக்குப் பரிசாகத் தந்தார். மேலும், தமிழ் இலக்கணம் குறித்தும், தமிழ் மொழியின் சிறப்புக் குறித்தும் ஆங்கிலத்தில் நான்கு நூல்களை எழுதி தமிழின் பெருமைக்கு உலக வாசல்களை உண்டாக்கித் தந்தார். முத்தமிழ்க் காவலர், இலக்கண செம்மல், செந்தமிழ் மாமணி போன்றவை இவரோடு இணைந்து கொண்ட நற்பெயர்கள்.

மறைவு : 03.09.1973

தமிழில் எழுதும்போது...

வாழ்த்துக்கள் என்பது தவறு “வாழ்த்துகள் என்பதே சரி. “க்” வரக்கூடாது ”.

வாழ்க வளமுடன் என்பது தவறு “வாழ்க வளத்துடன்” என்பதே சரி.

“நச்சுன்னு ஒரு பாட்டு”, “நச்சுன்னு பேசு” என்பது தவறு நச்சு என்றால் நஞ்சு (விஷம்).

நச்சுன்னு ஒரு பாட்டு என்றால் விஷம் போன்ற ஒரு பாட்டு என்று பொருள்.

நறுக்கென்று என்பதே நச்சுன்னு என்று மருவி வந்துள்ளது.

பொது ஊரடங்கு உத்தரவு ஏற்கெனவே நடைமுறையில் உள்ள பல்வேறு கட்டுப்பாடுகளுடனும், தளர்வுகளுடனும் 30.11.2020 வரை மேலும் நீட்டிப்பு செய்யப்படுகிறது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்
அறிக்கை – 31.10.2020

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றை தடுப்பதற்காக, மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் 25.03.2020 முதல் ஊரடங்கு உத்தரவு பல்வேறு தளர்வுகளுடன் அமலில் இருந்து வருகிறது. மாண்புமிகு அம்மாவின் அரசு, இந்த நோய்த் தொற்றிலிருந்து மக்களை காத்து அவர்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்கி, முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

அதன் விளைவாக நோய்ப் பரவல் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. முக்கியமாக, மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், நோய்த் தொற்று பரவல் படிப்படியாக குறைந்து வருகிறது. தமிழ்நாடு அரசின் சிறப்பான செயல்பாட்டினாலும், பொதுமக்களின் ஒத்துழைப்பினாலும் தான் நோய்த் தொற்று கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

நமது மருத்துவர்களின் சிறப்பான சேவையால், நோய்த் தொற்று விகிதம் 7.30 சதவிகிதத்திற்கும் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. கடந்த 7 நாட்களாக நாள் ஒன்றுக்கு இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 3,000 நபர்களுக்கு கீழாகவே உள்ளது. சிகிச்சையில் இருப்போர் எண்ணிக்கை சுமார் 50,000இல் இருந்து தற்போது 25,000 நபர்கள் என்ற அளவிற்கு குறைந்து உள்ளது.

நான் பல்வேறு தினங்களில் நடத்திய ஆய்வுக் கூட்டங்களின் அடிப்படையிலும், மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட 12 ஒருங்கிணைப்புக் குழுக்களின் கருத்துக்களின் அடிப்படையிலும், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்களின் கருத்துகளின் அடிப்படையிலும், தமிழ்நாட்டில் 31.10.2020 முடிய பல்வேறு தளர்வுகளுடன் ஊரடங்கு உத்தரவு தொடர்ந்து நீட்டிக்கப்பட்டது.



பல்வேறு தினங்களில் நான் நடத்திய ஆய்வுக் கூட்டங்களின் அடிப்படையிலும், 28.10.2020 அன்று நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையிலும், மருத்துவ நிபுணர்கள் மற்றும் பொது சுகாதார வல்லுநர்களுடன் நடத்தப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையிலும், மூத்த அமைச்சர்களுடன் கலந்தாலோசித்தும், தற்போதுள்ள நோய் பரவல் நிலையைக் கருத்தில் கொண்டு கொரோனா வைரஸ் நோய்த்தொற்றை தடுப்பதற்காக தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ், 31.10.2020 முடிய தமிழ்நாடு முழுவதும் தற்போதுள்ள பொது ஊரடங்கு உத்தரவு, ஏற்கெனவே நடைமுறையில் உள்ள பல்வேறு கட்டுப்பாடுகளில் கீழ்க்கண்ட தளர்வுகளுடன் 30.11.2020 நள்ளிரவு 12 மணி வரை மேலும் நீட்டிப்பு செய்யப்படுகிறது. பொருளாதாரத்தை மீட்டெடுக்க வேண்டிய அவசியத்தை கருத்தில் கொண்டும், நோய்த் தொற்றின் தன்மையை கருத்தில் கொண்டும், தமிழ்நாடு முழுவதும் நோய் கட்டுப்பாட்டு பகுதி தவிர (Except Containment Zones) மற்ற பகுதிகளில் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட பல்வேறு தளர்வுகளுடன் கீழ்க்கண்ட பணிகளுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது:

1) பள்ளிகள் (9, 10, 11, மற்றும் 12ஆம் வகுப்புகள் மட்டும்), அனைத்து கல்லூரிகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களும் 16.11.2020 முதல் நிலையான வழிகாட்டு நடைமுறைகளைப் பின்பற்றி செயல்பட அனுமதிக்கப்படுகின்றன.

2) பள்ளி /கல்லூரிகள் மற்றும் பணியாளர்கள் விடுதிகள் உட்பட அனைத்து விடுதிகளும் 16.11.2020 முதல் செயல்பட அனுமதிக்கப்படுகின்றன.

3) **கோயம்பேடு வணிக வளாகம் :**

தற்காலிக இடத்தில் தற்போது செயல்படும் பழக்கடை மொத்த வியாபாரம் 02.11.2020 முதலும், பழம் மற்றும் காய்கறி சில்லரை வியாபாரக் கடைகள் மூன்று கட்டங்களாக 16.11.2020 முதலும் கோயம்பேடு அங்காடி வளாகத்தில், அரசால் வெளியிடப்பட உள்ள நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி, செயல்பட அனுமதிக்கப்படுகிறது.

4) பொதுமக்களுக்கான புறநகர் மின்சார இரயில் போக்குவரத்து சேவை (Suburban trains) மத்திய அரசின் முடிவுக்கு ஏற்ப நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி செயல்பட அனுமதிக்கப்படுகிறது.

5) சின்னத்திரை உட்பட திரைப்படத் தொழிலுக்கான படப்பிடிப்புகளுக்கு உரிய வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு ஒரே சமயத்தில் 150 நபர்களுக்கு மிகாமல் பணி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது. படப்பிடிப்பின் போது பார்வையாளர்களுக்கு அனுமதி கிடையாது.

6) திரையரங்கு உரிமையாளர்களிடமிருந்து திரையரங்குகளை திறக்க வரப்பெற்ற கோரிக்கைகளை பரிசீலித்து, தமிழ்நாடு முழுவதும் நோய்க் கட்டுப்பாட்டு பகுதி தவிர மற்ற பகுதிகளில் அரசால் வெளியிடப்பட உள்ள நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றியும், பார்வையாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அவற்றை திரையிட்டும், ஒன்றுக்கும் மேற்பட்ட திரையரங்குகள் உள்ள திரையரங்கு வளாகங்கள் (multiplex), வணிக வளாகங்களில் (shopping malls) உள்ள திரையரங்குகள் உட்பட அனைத்து திரையரங்குகளும் 50 சதவீதம் இருக்கைகளை மட்டும் பயன்படுத்தி 10.11.2020 முதல் செயல்பட அனுமதிக்கப்படுகிறது.

7) மதம் சார்ந்த கூட்டங்கள், சமுதாய, அரசியல், பொழுதுபோக்கு, கலாச்சார நிகழ்வுகள், கல்வி சார்ந்த விழாக்கள் மற்றும் இவை தொடர்பான கூட்டங்கள் 16.11.2020 முதல் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி, 100 நபர்கள் பங்கேற்கும் வகையில், நடத்த அனுமதிக்கப்படுகிறது.

8) பொழுதுபோக்கு பூங்காக்கள் (Entertainment / Amusement Parks), பெரிய அரங்குகள், கூட்ட அரங்குகள், உயிரியல் பூங்காக்கள், அருங்காட்சியகங்கள் போன்ற பொதுமக்கள் கூடும் இடங்கள் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி **10.11.2020** முதல் செயல்பட அனுமதிக்கப்படுகிறது.

9) நிலையான வழிகாட்டு நடைமுறைகளைப் பின்பற்றி, திருமண நிகழ்வுகளுக்கு **100** நபர்களுக்கு மிகாமலும், இறுதி ஊர்வலங்களுக்கு **100** நபர்களுக்கு மிகாமலும் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

10) ஏற்கெனவே 50 வயது மற்றும் அதற்கு குறைவான வயதுடைய வாடிக்கையாளர்களுடன் உடற்பயிற்சிக் கூடங்கள் இயங்க அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், நிலையான வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி **01.11.2020** முதல் **60** வயது மற்றும் அதற்கு குறைவான வயதுடைய வாடிக்கையாளர்களுடன் உடற்பயிற்சிக் கூடங்கள் இயங்க அனுமதிக்கப்படுகின்றன.

பொது

- தமிழ்நாடு முழுவதும் நோய்க் கட்டுப்பாட்டு பகுதிகளில் (Containment Zones) தற்போதுள்ள நடைமுறைகளின்படி, எந்த விதமான தளர்வுகளுமின்றி ஊரடங்கு முழுமையாக கடைபிடிக்கப்படும்.

ஏற்கெனவே நடைமுறையில் உள்ள கீழ்காணும் செயல்பாடுகளுக்கான தடைகள், மறு உத்தரவு வரும் வரை தொடர்ந்து அமலில் இருக்கும்:–

- நீச்சல் குளங்கள், கடற்கரை, சுற்றுலாத் தலங்கள் போன்ற பொதுமக்கள் கூடும் இடங்கள்.
- மத்திய உள்துறை அமைச்சகத்தால் அனுமதிக்கப்பட்ட வழித் தடங்களைத் தவிர சர்வதேச விமான போக்குவரத்திற்கான தடை நீடிக்கும்.
- வெளி மாநிலங்களிலிருந்து (புதுச்சேரி மாநிலம் தவிர) தமிழ்நாட்டிற்குள் வருபவர்களுக்கும், ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு போன்ற சுற்றுலாத் தலங்களுக்கு செல்பவர்களுக்கும் தற்போது நடைமுறையிலுள்ள இ–பதிவு (E-registration) முறை, தொடர்ந்து அமல்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் கொரோனா பரவல் குறைந்து வரும் சூழல் நீடிக்கவும், அதனை முழுமையாக தடுக்கவும், நாம் அனைவரும் தொடர்ந்து பாடுபட வேண்டும். குறிப்பாக நோய்த் தொற்று குறைந்துள்ள நிலையில், பொதுமக்கள் பண்டிகை காலங்களில் அதிகமாக கூடுவதை தவிர்த்து, விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும்.

பொதுமக்கள் வெளியில் செல்லும்போதும், பொது இடங்களிலும் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதால் முகக்கவசத்தை கட்டாயம் அணிய வேண்டும். பொதுமக்கள் வீட்டிலும், பணிபுரியும் இடங்களிலும் அடிக்கடி சோப்பை பயன்படுத்தி கை கழுவியும், வெளியிடங்களுக்கு முகக்கவசத்தை அணிந்து சென்றும், சமூக இடைவெளியை தவறாமல் கடைபிடித்தும், அவசிய தேவை இல்லாமல் வெளியில் செல்வதைத் தவிர்த்தும், அரசுக்கு முழு ஒத்துழைப்பு நல்கினால் தான், இந்த நோய்த் தொற்றுப் பரவலை முற்றிலுமாக கட்டுப்படுத்த முடியும்.

எனவே, பொதுமக்களின் நலன் கருதி, உங்கள் அரசு எடுத்து வரும் கோவிட்–19 தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அனைத்திற்கும் பொதுமக்கள் தொடர்ந்து முழு ஒத்துழைப்பினை நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். நோய்த் தொற்றின் போக்கு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, பொதுமக்களின் ஒத்துழைப்பையும், நோய்த் தொற்றின் நிலையையும் கருத்தில் கொண்டு, எஞ்சியுள்ள கட்டுப்பாடுகளுக்கும் தேவைக்கேற்ப தளர்வுகள் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழரசு 62

மாற்றுத்திறனாளிகள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்ட குழந்தைகள் உறவினர்களை பராமரிக்கும் அரசு ஊழியர்களுக்கு பணி மாறுதலில் இருந்து விலக்கு அளித்து அரசாணை

ABSTRACT

Public Services – Transfer of Government servants – Once in three years – Exemption to Government servants who are the caregiver of differently abled person – Orders – Issued.

PERSONNEL AND ADMINISTRATIVE REFORMS (S) DEPARTMENT

G.O.(Ms)No.107

Dated: 03.09.2020
சார்வரி, ஆவணி – 18,
திருவள்ளுவர் ஆண்டு 2051.

Read:

1. G.O. (Ms.) No.10, Personnel and Administrative Reforms (Per.S) Department, dated 07.01.1994.
2. Letter No.15210/94-1, Personnel and Administrative Reforms (Per.S) Department, dated 29.06.1994.
3. Office Memorandum F.No.42011/3/2014-Estt. (Res)., Department of Personnel and Training, Government of India, dated 08.10.2018.

ORDER:

In the Government Order first read above, the Government have laid down a transfer policy wherein detailed instructions were issued for making transfer of Government servants in Groups A, B and C. In continuation of the above order, the Government have further directed in the reference second read above, that the Government Servants who are having mentally retarded or differently abled children can make a request for his transfer before the completion of 3 years period as mandated in the general transfer policy. The same factor shall also be considered as a valid reason for his retention in the same station up to 5 years.

2. The Department of Personnel and Training, Government of India in its Office Memorandum third read above, have issued instructions exempting a Government employee who is a caregiver of dependent daughter / son / parents / spouse / brother / sister with Specified Disability, as certified by the certifying authority as a Person with Benchmark Disability as defined under Section 2(r) of the Rights of Persons with Disabilities Act, 2016 from the routine exercise of transfer / rotational transfer subject to the administrative constraints.

(P.T.O)

- 2 -

3. After careful consideration, the Government direct that a government employee who is a caregiver of dependent daughter / son / parents / spouse / brother / sister with Specified Disability, as certified by the certifying authority as a Person with Benchmark Disability as defined under Section 2(r) of the Rights of Persons with Disabilities Act, 2016 may be exempted from the routine exercise of transfer, subject to the administrative constraints, during the transfer period namely, between the 1st April and the 31st May, every year. This exemption is, however subject to the following conditions:-

(i) A Government servant must be a caregiver of differently abled dependent such as daughter / son / parents / spouse / brother / sister.

(ii) A Government servant who is a caregiver of differently abled dependent should furnish a certificate, certified by the certifying authority that the dependent is a Person with Benchmark Disability as defined under Section 2(r) of the Rights of Persons with Disabilities Act, 2016.

4. The Government also directs to follow the instructions issued in the Government letter second read above while considering the Government Servants who are having mentally ill or differently abled children for transfer.

(BY ORDER OF THE GOVERNOR)

S. SWARNA,
SECRETARY TO GOVERNMENT.

பள்ளிகள் திறப்பு மறு உத்தரவு பிறப்பிக்கும் வரை இரத்து செய்யப்படுகிறது

சமுதாய, அரசியல், பொழுதுபோக்கு, கலாச்சார நிகழ்வுகள், கல்வி சார்ந்த விழாக்கள் மற்றும் மதம் சார்ந்த கூட்டங்கள் தொடர்பான நிலையான வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி, 100 நபர்களுக்கு மிகாமல் பங்கேற்கும் வகையில் 16.11.2020 முதல் நடத்த அனுமதிக்கப்பட்ட உத்தரவு தற்போது இரத்து செய்யப்படுகிறது. அவற்றிற்கான தடை மறு உத்தரவு பிறப்பிக்கும் வரையில் தொடர உத்தரவிடப்படுகிறது.

9, 10, 11, 12ஆம் வகுப்புகளுக்கு பள்ளிகள் மற்றும் பள்ளி விடுதிகள் 16.11.2020 முதல் திறக்க அனுமதிக்கப்பட்ட உத்தரவு, மறு உத்தரவு பிறப்பிக்கும் வரை இரத்து செய்யப்படுகிறது. பள்ளிகள் திறப்பு தேதி சூழ்நிலைக்கு ஏற்ப பின்னர் அறிவிக்கப்படும்.

அதேபோல், பல்கலைக்கழக நிருவாகங்களிடம் கருத்து கேட்கப்பட்டது. இதன்படியும், 05.11.2020 அன்று வெளியிடப்பட்டுள்ள பல்கலைக்கழக மானியக் குழுவின் வழிகாட்டுதலின்படியும், அனைத்து ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் முதுநிலை இறுதி ஆண்டு பயிலும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மாணவர்களுக்கு மட்டும் கல்லூரி / பல்கலைக்கழகங்களை 02.12.2020 முதல் திறக்க உத்தரவிடப்படுகிறது. மேலும், இதர வகுப்பு மாணவர்களுக்கு கல்லூரி திறப்பு தேதி பின்னர் அறிவிக்கப்படும். 02.12.2020 அன்று திறக்கப்படும் கல்லூரிகளில் மட்டும் மாணவர்களுக்கான விடுதிகள் திறக்கப்படும். கல்லூரிகள் மற்றும் விடுதிகளுக்கான நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் தனியாக வெளியிடப்படும். பிற மாணவர்களுக்கு ஏற்கனவே நடைபெற்று வரும் இணையவழி கல்விமுறை தொடர்ந்து நடைபெறும்.

புதுக்கோட்டை மக்கள் எதிர்பார்த்த காவேரி-குண்டாறு திட்டத்தை

மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள், அதனை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்துகிறது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் தலைமையில் 22.10.2020 அன்று புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தொற்றுப் பரவல் தடுப்புப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை.

மாண்புமிகு அம்மாவின் அரசு கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கு கடுமையான முயற்சிகள் எடுத்ததின் விளைவாக தமிழகத்தில் இந்நோய்த் தொற்றுப் பரவல் படிப்படியாக குறையத் தொடங்கியுள்ளது. மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் எந்தளவிற்கு பலன் தந்துள்ளது என்பதை நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். கேரளா, கருநாடகா, ஆந்திரா போன்ற நமது அண்டை மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் இந்நோய்த் தொற்றுப் பரவல் எந்தளவிற்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதை உணர முடியும். இதற்கான முயற்சியில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை அமைச்சர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்கள் முழு ஈடுபாட்டோடு இப்பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். அவருடன், மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கூட்டுறவு சங்க

நிருவாகிகள், பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசு அதிகாரிகள், சமூக ஆர்வலர்கள் என அனைவரும் ஒருங்கிணைந்து இப்பணியில் ஈடுபட்டதன் காரணமாக நல்ல பலன் கிடைத்துள்ளது.

உலகம் முழுவதும் பரவியுள்ள இந்தக் கொடிய நோயை, வல்லரசு நாடுகளே கட்டுப்படுத்த முடியாத இந்தச் சூழ்நிலையில், மாண்புமிகு அம்மாவின் அரசு தனிக் கவனம் செலுத்தி ஒரு உயிரைக்கூட இழக்கக் கூடாது என்ற அடிப்படையில் தகுந்த சிகிச்சை அளித்து உயிரிழப்பு குறைக்கப்பட்டுள்ளது, தொற்றுநோய் ஏற்பட்டவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது, குணமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கொரோனா வைரஸ் பரவல் தடுப்புப் பணியில் மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள், உள்ளாட்சித் துறை, வருவாய்த் துறை, காவல் துறை, கூட்டுறவுத் துறை, உணவுத் துறை மற்றும் பல துறைகளைச் சேர்ந்த பணியாளர்களும் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்கள். இந்தக் கொடிய நோயிலிருந்து மக்களைக் காக்க வேண்டும் என்பதற்காக பொறுப்புடன் இப்பணியில் ஈடுபட்ட பல துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் உயிரைக்கூட தியாகம் செய்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் மறக்க முடியாது. அந்த அதிகாரிகளின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இந்த நேரத்தில் எனது அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறேன். அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றிய அனைவருக்கும் அரசின் சார்பாகவும், எனது சார்பாகவும் மனமார்ந்த நன்றியை இந்நேரத்தில் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்று ஏற்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க முழுமையான படுக்கை வசதிகளும் போதுமான அளவிற்கு பரிசோதனை நிலையங்களும் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே அதிகமான பரிசோதனைகள் செய்கின்ற முதல் மாநிலம் தமிழ்நாடு தான். RTPCR Test மூலம்தான் இந்த நோயை துல்லியமாக கண்டுபிடிக்க முடியும் என்று மருத்துவ நிபுணர்கள் கூறிய ஆலோசனையின்படி, RTPCR Test செய்யப்படுகிறது. மற்ற மாநிலங்களில் RTPCR Test குறைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, RTPCR Test-ஐ முழுமையாக பயன்படுத்தியதன் விளைவாக நாளொன்றுக்கு சராசரியாக 90,000 பரிசோதனைகள் செய்யப்பட்டதன் காரணமாக, நோய்த் தொற்று கண்டறியப்பட்டு உடனடியாக சிகிச்சை அளித்ததால் இத்தொற்று பரவல் படிப்படியாக குறையத் தொடங்கியுள்ளது, உயிரிழப்பு பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் அரசு எடுத்த முயற்சிக்கு கிடைத்த பலன் என்பதை குறிப்பிட விரும்புகிறேன். அதற்காக பாடுபட்ட அனைவருக்கும் மீண்டும், மீண்டும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

உலக சுகாதார அமைப்பு, மத்திய சுகாதாரத் துறை மற்றும் மருத்துவ நிபுணர்கள் அளித்த அறிவுரைகளின்படி காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொண்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, நோய் அறிகுறி தென்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்ததன் விளைவாக, இந்நோய்த் தொற்றுப் பரவல் தடுக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும் நாளொன்றுக்கு 70 காய்ச்சல் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டு, இதுவரை சுமார் 10,225 காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட்டு, 4.77 இலட்சம் நபர்கள் கலந்து கொண்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை அளிப்பதற்கு மருத்துவமனைகளிலும் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் போதுமான படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், புதிதாக மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு அனைத்து வழிகளிலும் அரசு உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டதன் விளைவாக கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவல் தமிழகத்தில் படிப்படியாக குறைந்துள்ளது.

வேளாண் பணிகளுக்கு ஏற்கெனவே ஊரடங்கிலிருந்து அரசு முழு விலக்கு அளித்த காரணத்தினால் தமிழ்நாடு முழுவதும் வேளாண் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு டெல்டா மாவட்டங்களில் அதிக விளைச்சலைக் காணமுடிகிறது. தொழில் துறையை சேர்ந்தவர்களுக்கு 100% ஊரடங்கிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டு அனைத்துத் தொழிற்சாலைகளும் சுமார் 90 சதவிகிதப் பணியாளர்களுடன் இயக்கப்பட்டு வருகின்றன.

2015 மற்றும் 2019ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட தொழில் முதலீட்டாளர் மாநாடுகளின் மூலம் நாட்டு மக்களுக்கு என்ன நன்மை கிடைத்தது என்ற கேள்வியை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். காலையில்

கூட ஐடிசி நிறுவனத்தின் தொழிற்சாலையை நான் துவக்கி வைத்துள்ளேன். இந்த தொழில் முதலீட்டாளர் மாநாடுகளின் மூலம் பலன் கிடைத்துள்ளது என்பதற்கு இதுவே ஒரு சான்றாகும். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் 2015ஆம் ஆண்டு சென்னையில் நடத்தப்பட்ட உலக முதலீட்டாளர் மாநாட்டில் ஐடிசி நிறுவனத்துடன் சுமார் ரூ.1,170 கோடி மதிப்பீட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டு, இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டு, முதல் பகுதி ரூ.820 கோடி மதிப்பீட்டில் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அதனை நான் திறந்து வைத்தேன். மற்றொரு அலகில் சுமார் ரூபாய் 350 கோடி மதிப்பீட்டிலான பணிகள் நடைபெற்று வருகின்றன. அது பிப்ரவரி மாதம் துவங்கப்படும். ஐடிசி நிறுவனத்தில் சுமார் 2,700 நபர்கள் பணிபுரிவதில் சுமார் 2,300 நபர்கள் (85 சதவிகிதம்) முழுக்க முழுக்க கிராமங்களைச் சேர்ந்த பெண்கள் பணியாற்றுகின்றனர். இது பெருமைக்குரிய விஷயமாகும்.

புதுக்கோட்டை மாவட்ட மக்களின் பிரதான தொழில் வேளாண்மை. இத்தகைய பின்தங்கிய பகுதியில் தொழிற்சாலைகளைக் கொண்டுவந்து மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தரவேண்டுமென்ற அடிப்படையில் இதயதெய்வம் அம்மா அவர்கள் இருக்கின்றபொழுதே 2015ஆம் ஆண்டு இத்தொழிற்சாலை தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டு, தற்பொழுது இங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கப் பெற்றது. இதேபோல, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் தொழிற்சாலைகள் துவங்கியிருக்கின்றன. **இன்றைக்கு உலகத்தையே அச்சுறுத்தி வரும் கொரோனா நோய்த் தொற்று இருக்கும் சூழ்நிலையிலும் 40,718 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான முதலீட்டை ஈர்த்து, அதன்மூலம் 74,212 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் 55 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டன. இதன் மூலம் 2020ஆம் ஆண்டில் புதிய முதலீடுகளை ஈர்ப்பதில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடத்தை பிடித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அளவிற்கு அம்மாவின் அரசு விரைவாக செயல்பட்டு, புதிய தொழில்களை தமிழகத்தில் உருவாக்குவதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.**

மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்றபோதே புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவேண்டும் என்பதற்காக இரண்டு பகுதிகளாகப் பிரித்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அறிவித்தார்கள். அந்தத் திட்டங்களின் மதிப்பு ரூ.616 கோடி ஆகும். மாண்புமிகு அம்மா அவர்கள் மறைந்தாலும், அம்மா அவர்கள் துவக்கிய திட்டத்தை துரிதமாக நடைமுறைப்படுத்தி மக்களுக்கு தங்குதடையில்லாமல் குடிநீரை வழங்கிய அரசு அம்மாவின் அரசு. அந்தத் திட்டத்தையும், மாண்புமிகு அம்மா வழியில் நானே துவக்கி வைத்தேன் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக, புதுக்கோட்டை மாவட்டத்தில் அதிக அளவிலான ஏரிகள் தூர்வாரப்பட்டிருக்கின்றன. பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் முழுவதும் சேமித்து பாதுகாக்க வேண்டுமென்பதற்காகத் தான் இந்தத் திட்டத்தை அம்மாவின் அரசு கொண்டுவந்து அற்புதமாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் முழுக்க முழுக்க வேளாண் பெருமக்களைக் கொண்டு குடிமராமத்துத் திட்டத்தை நாங்கள் நிறைவேற்றியிருக்கிறோம் அதுமட்டுமல்ல, மாவட்ட ஆட்சித்தலைவர் வரவேற்புரையில் குறிப்பிட்டதுபோல, சுமார் 45 ஆண்டு காலமாக காவேரி நதிநீர் பிரச்சினைக்காக நாம் போராடி வந்தோம். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டார்கள். அம்மா அவர்களின் மறைவிற்குப் பிறகு, அம்மாவின் அரசு சட்டப் போராட்டம் நடத்தி விவசாயிகள் மகிழ்ச்சியாக வேளாண் பணிகளை மேற்கொள்வதற்கு உச்சநீதிமன்றத்தின் மூலமாக நல்ல தீர்ப்பைப் பெற்றுத் தந்து, வேளாண் பெருமக்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் காவேரி நீர் கிடைப்பதற்கான உத்தரவாதத்தை பெற்றுத் தந்துள்ளது.

அதேபோல, டெல்டா மாவட்டங்களை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்க வேண்டுமென்று குரல் கொடுத்து வந்த விவசாயிகளுக்கு, அவர்களுடைய எண்ணப்படி, மாண்புமிகு அம்மாவின் அரசு டெல்டா பகுதிகளைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து, அதற்குத் தேவையான உத்தரவையும் வழங்கி, விவசாயிகளை பாதுகாத்த அரசு அம்மாவின் அரசு என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கல்லணை கால்வாயை ரூபாய் 2,664 கோடி மதிப்பீட்டில் நவீனப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டு, ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டாளர் வங்கிக் கடன் பெறுவதற்கு மத்திய அரசின் அனுமதியைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மக்கள் எதிர்பார்த்த காவேரி–குண்டாறு திட்டத்தை புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். துரதிர்ஷ்டவசமாக மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த மண்ணை விட்டு மறைந்தாலும், மாண்புமிகு அம்மாவின் அரசு, மாண்புமிகு அம்மா அறிவித்த அந்த அறிவிப்பை நடைமுறைப்படுத்த இருக்கின்றது. காவேரி–அக்னியாறு, தெற்கு வெள்ளாறு–மணிமுத்தாறு, வைகை–குண்டாறு இணைப்புக் கால்வாய்த் திட்டமான காவேரி–குண்டாறு திட்டம் புதுக்கோட்டை வழியாகச் செல்கின்றது. இதன்மூலம், புதுக்கோட்டையிலுள்ள நூற்றுக்கணக்கான ஏரிகளில் நீர் நிரப்பப்பட்டு, நிலத்தடி நீர் மட்டம் உயரும், நீர் செறிவூட்டப்படும். இந்தத் திட்டம் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளில் முடிவடையும். அதன் பின்னர், புதுக்கோட்டை மாவட்டம் ஒரு பசுமையான மாவட்டமாகத் திகழும். வானம் பார்த்த மாவட்டமாக உள்ள புதுக்கோட்டை மாவட்டம் பசுமை நிறைந்த பகுதியாக மாற்றுவதற்கு அம்மாவின் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்தத் திட்டத்தையும் நானே நேரடியாக வந்து துவக்கி வைப்பேன் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலமைச்சர் சிறப்புக் குறை தீர்க்கும் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் பொதுமக்கள் கொடுக்கின்ற மனுக்களை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டத்தில் முதியோர் உதவித் தொகை வேண்டுமென்று விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டது. அதேபோல, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2016ஆம் ஆண்டு நான் முதலமைச்சராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டால் உழைக்கும் மகளிருக்கு இருசக்கர வாகனம் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அதன் அடிப்படையில் அம்மாவின் அரசு அதனை செயல்படுத்தி வருகிறது. நான் இங்கு வரும்பொழுதே உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கிவிட்டுத்தான் வந்திருக்கிறேன். இந்த மாவட்டத்தில் அம்மா இருசக்கர வாகனம் விண்ணப்பித்த தகுதியான நபர்கள் அனைவருக்கும் இருசக்கர வாகனம் வழங்கப்பட்டு இருக்கின்றது. தேர்தல் நேரத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தும் அம்மாவின் அரசால் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

சுயஉதவிக் குழுக்களுக்குத் தேவையான கடனுதவியை வழங்க வேண்டுமென்று அனைத்து வங்கிகளுக்கும் அம்மாவின் அரசால் ஆணையிடப்பட்டு, அவர்களுக்கு வங்கி இணைப்புக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. அதனால் ஆயிரக்கணக்கான சுயஉதவிக் குழுக்களில் இடம் பெற்றிருக்கின்ற மகளிர் பயன் பெற்றிருக்கிறார்கள். இந்த மாவட்டத்திற்கு அரசு மருத்துவக் கல்லூரி கொடுத்த தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள். அந்த அரசு மருத்துவக் கல்லூரியை நானே துவக்கி வைத்தேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாலைகள் அனைத்தும் சீர் செய்யப்பட்டிருக்கின்றன. புதிய பாலங்கள் கட்டிக் கொடுத்திருக்கின்றோம். புறவழிச் சாலைகள் அமைக்கும் பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எல்லா துறைகளிலும் அம்மாவின் அரசு தனிக் கவனம் செலுத்தி, புதுக்கோட்டை மாவட்டம் இன்றைக்கு வளர்ச்சிப் பாதையிலே பீடுநடை போட்டுக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அம்மாவின் அரசு மக்களின் அரசு. மக்களுக்குத் தேவையான திட்டங்களை நிறைவேற்ற இந்த அரசு தொடர்ந்து பாடுபட்டுக் கொண்டிருக்கிறது.

நான் மக்களுக்கு வேண்டுகோளாக வைப்பதெல்லாம், தற்பொழுது படிப்படியாக கொரோனா வைரஸ் தொற்று குறைந்து கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், பெரும்பாலான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ள நிலையில், அரசு அறிவிக்கின்ற வழிகாட்டுதல்களை முழுமையாக பின்பற்ற வேண்டும். வெளியில் செல்லும்போது கண்டிப்பாக முகக்கவசம் அணிய வேண்டும், சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டும். வெளியில் சென்று வீடு திரும்பும்பொழுது கை, கால்களை நன்றாக சோப்பு போட்டுக் கழுவ வேண்டும். இவற்றையெல்லாம் கடைபிடித்தால் நோய்த் தொற்றுப் பரவலை நாம் தடுக்க முடியும். கொரோனா தடுப்பு பணிகளில் பொதுமக்கள் அரசுக்கு முழு ஒத்துழைப்பை நல்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 22.10.2020 அன்று, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு), நெடுஞ்சாலைத் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, காவல் துறை, கால்நடை பராமரிப்புத் துறை ஆகிய துறைகளின் சார்பில் 54.68 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 48 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, பொதுப்பணித் துறை (நீர்வள ஆதாரத் துறை), நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.210.25 கோடி மதிப்பீட்டில் 29 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள், 22.10.2020 அன்று, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.ஆர்.காமராஜ், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் திரு.ஜி.பாஸ்கரன், சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் திரு.பி.கே.வைரமுத்து, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

அக்டோபர் 30: உலக சிக்கன நாள்

சிறுகச் சிறுக சேமிக்கப்படும் தொகை பன்மடங்காகப் பெருகி, எதிர்கால வாழ்க்கைக்கு பாதுகாப்பு அளிக்கும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்
உலக சிக்கன நாள் செய்தி

மக்களிடையே சிக்கனம் மற்றும் சேமிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்திடும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் திங்கள் 30–ஆம் நாள் உலக சிக்கன நாளாக கொண்டாடப்படுகிறது.

“சிக்கனம் வீட்டை காக்கும், சேமிப்பு நாட்டை காக்கும்” என்ற முதுமொழிக்கேற்ப ஒவ்வொரு மனிதனும் தனது உழைப்பால் ஈட்டிய செல்வத்தை தன் குடும்பத்திற்கும், நாட்டிற்கும் பயன்படும் வகையில் சேமிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். எதிர்காலத் தேவைகளைக் கருத்தில் கொண்டு மக்கள் சிக்கனமாக வாழ்ந்து, தங்கள் வருமானத்தின் ஒரு பகுதியை சேமிக்கும் பழக்கத்தினை வளர்த்துக் கொள்ள வேண்டும். எதிர்கால வாழ்க்கை ஒளிமயமாக திகழ்ந்திட பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சிறு வயதிலிருந்தே சேமிப்பின் அவசியம் குறித்து எடுத்துரைத்து, சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும்.

“சிறு துளி பெரு வெள்ளம்” என்பதற்கேற்ப மக்கள் தாங்கள் ஈட்டிய பணத்தை, அஞ்சலகச் சிறுசேமிப்பு திட்டங்களில் முதலீடு செய்வதன் மூலம், சிறுகச் சிறுக சேமிக்கப்படும் அத்தொகை பன்மடங்காகப் பெருகி, எதிர்கால வாழ்க்கைக்கு பாதுகாப்பை அளிக்கும்.

இந்த உலக சிக்கன நாளில், தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் தங்கள் வாழ்வு வளம்பெற, அஞ்சலகங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் சிறுசேமிப்பு திட்டங்களில் சேர்ந்து பயன்பெற்றிட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழில் எழுதும்போது...

மங்கலம் - மங்களம்

“நிகழும் மங்களகரமான ஆண்டு” என்று அழைப்பிதழில் அச்சிடுவது தவறு.
“மங்கலமான ” என்பதே சரி.

“மங்கள இசை ” என்றால் ஒப்பாரி . அதாவது கடைசி பயணத்தின் போது இசைப்பது.
“மங்கல இசை” என்றால் தொடக்கம்.

இசை நிகழ்ச்சியில் கடைசியில் பாடும் பாட்டுக்கு “மங்களம்” என்பர் .
கச்சேரியை முடிப்பதற்கு “மங்களம்” பாடு என்பர்.

ஒரு நூல் (புத்தகம்) எழுதிய ஆசிரியர் அதை எழுதி முடிக்கும் போது கடைசிப் பக்கத்தில் “சுப மங்களம்” என்று முடிப்பர். இதற்கு, இனிதே முடிவுற்றது என்று பொருள்.

__மங்கலம்__ என்ப மனைமாட்சி மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு – என்கிறார் திருவள்ளுவர்.

2018-2019ஆம் ஆண்டிற்கான 64ஆவது தேசிய பள்ளி விளையாட்டு போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 572 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.9.78 கோடி உயரிய ஊக்க தொகை வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 28.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் 2018–2019ஆம் ஆண்டிற்கான 64ஆவது தேசிய பள்ளி விளையாட்டு போட்டிகளில் பதக்கங்கள் வென்ற சென்னையைச் சேர்ந்த 14 மாணவ, மாணவியருக்கு 54 இலட்சம் ரூபாய் உயரிய ஊக்கத் தொகைக்கான காசோலைகளையும், வாள்வீச்சு வீராங்கனை செல்வி C.A. பவானி தேவி அவர்களுக்கு 15 இலட்சம் ரூபாய் உயரிய ஊக்கத் தொகைக்கான காசோலையையும் வழங்கி, பாராட்டினார்கள்.

அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி வாகை சூடும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத் தொகை வழங்குதல், சர்வதேச அளவில் பங்கு பெறும் விளையாட்டு வீரர்களுக்கு நிதியுதவி அளித்தல், மாணவர்கள் தங்கி விளையாட்டில் பயிற்சி பெற விளையாட்டு விடுதிகள் ஏற்படுத்துதல், கிராமப்புற விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் கிராம விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல், மாவட்ட விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துதல், பாரம்பரிய விளையாட்டுகளை ஊக்குவித்தல் போன்ற பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

அந்த வகையில், 2018–2019ஆம் ஆண்டிற்கான 64ஆவது தேசிய பள்ளி விளையாட்டு போட்டிகள் மாணவர்கள் மற்றும் மாணவியர்களுக்கு 14 வயது, 17 வயது மற்றும் 19 வயதிற்குட்பட்டோர் என 3 பிரிவுகளில் நடத்தப்பட்டது. தமிழ்நாட்டைச் சார்ந்த 266 மாணவர்கள் 28 விளையாட்டுகளில் 88 தங்கம், 107 வெள்ளி, 109 வெண்கலப் பதக்கங்களையும், 306 மாணவியர்கள் 29 விளையாட்டுகளில் 135 தங்கம், 100 வெள்ளி மற்றும் 113 வெண்கலப் பதக்கங்களையும், என மொத்தம்

572 மாணவ, மாணவியர்கள் 652 பதக்கங்களைப் பெற்று தமிழ்நாட்டிற்கு பெருமையைப் பெற்று தந்துள்ளனர்.

இப்போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்றவர்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாய், வெள்ளிப் பதக்கம் வென்றவர்களுக்கு தலா 1.50 இலட்சம் ரூபாய் மற்றும் வெண்கலப் பதக்கம் வென்றவர்களுக்கு தலா 1 இலட்சம் ரூபாய், என மொத்தம் 9 கோடியே 78 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் உயரிய ஊக்கத் தொகையாக வழங்கிட தமிழ்நாடு அரசு ஆணையிட்டது.

அதன்படி, 64ஆவது தேசிய பள்ளி விளையாட்டு போட்டிகளில் ஸ்குவாஷ் விளையாட்டுப் போட்டியில் ஒரு தங்கம், ஒரு வெள்ளிப் பதக்கம் வென்ற சென்னை, செவன்த் டே அட்வென்டிஸ்ட் மேல்நிலைப் பள்ளி மாணவர் திரு.S.நவனீத் பிரபுவுக்கு 3.50 இலட்சம் ரூபாய், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலம் பதக்கம் வென்ற சென்னை, செவன்த் டே அட்வென்டிஸ்ட் மேல்நிலைப் பள்ளி மாணவர் திரு.R.கிஷோர் அரவிந்திற்கு 2.50 இலட்சம் ரூபாய், இரண்டு தங்கப் பதக்கங்கள் வென்ற சென்னை, செவன்த் டே அட்வென்டிஸ்ட் மேல்நிலைப் பள்ளி மாணவி செல்வி R.பூஜா ஆர்த்திக்கு 4 இலட்சம் ரூபாய், இரண்டு தங்கப் பதக்கங்கள் வென்ற சென்னை, செயின்ட் ரோஸரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவி செல்வி S.அக்ஷயா ஸ்ரீக்கு 4 இலட்சம் ரூபாய் மற்றும் ஒரு தங்கம், ஒரு வெள்ளிப் பதக்கம் வென்ற சென்னை, செவன்த் டே அட்வென்டிஸ்ட் மேல்நிலைப் பள்ளி மாணவி செல்வி J.S.கிருத்திகாவுக்கு 3.50 இலட்சம் ரூபாய்;

கேரம் விளையாட்டுப் போட்டியில் ஒரு தங்கம், ஒரு வெண்கலப் பதக்கம் வென்ற சென்னை, மேல்நிலைப் பள்ளி மாணவர் திரு.K.அபுஅசேனுக்கு 3 இலட்சம் ரூபாய், ஒரு தங்கம், ஒரு வெண்கலப் பதக்கம் வென்ற சென்னை, செயின்ட் பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளி மாணவர் திரு.N.மிதுனுக்கு 3 இலட்சம் ரூபாய்;

ஸ்கேட்டிங் விளையாட்டுப் போட்டியில் ஒரு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப் பதக்கம் வென்ற சென்னை, எஸ்பிஓஏ மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவர் திரு.S.கிஷோர் வெங்கடேஷ்க்கு 2.50 இலட்சம் ரூபாய், ஒரு தங்கம், இரண்டு வெள்ளிப் பதக்கங்கள் வென்ற சென்னை, செயின்ட் மைக்கேல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவி செல்வி S.மீனலோக்ஷினிக்கு 5 இலட்சம் ரூபாய்;

நீச்சல் விளையாட்டுப் போட்டியில் ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கம் வென்ற சென்னை, செயின்ட் மைக்கேல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவர் திரு.ஆல்பிரெட் ராஜனுக்கு 2.50 இலட்சம் ரூபாய், ஒரு தங்கம், இரண்டு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப் பதக்கம் வென்ற சென்னை, எம்.சி.சி மேல்நிலைப் பள்ளி மாணவி செல்வி B.பிரீத்திக்கு 6 இலட்சம் ரூபாய்;

தடகளப் போட்டியில் இரண்டு தங்கம், இரண்டு வெள்ளிப் பதக்கங்கள் வென்ற சென்னை, ஜெய் கோபால் கரோடியா அரசு மேல்நிலைப் பள்ளி மாணவி செல்வி P.M.தபிதாவுக்கு 7 இலட்சம் ரூபாய், ஒரு தங்கம் மற்றும் ஒரு வெள்ளி பதக்கம் வென்ற சென்னை, வித்யோதயா மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவி ஆர். கிரிதாரணிக்கு 3.50 இலட்சம் ரூபாய்;

புல்தரை டென்னிஸ் விளையாட்டுப் போட்டியில் இரண்டு தங்கப் பதக்கங்கள் வென்ற சென்னை, அழகப்பா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவி செல்வி. பண்டாரு குந்தனாஸ்ரீக்கு 4 இலட்சம் ரூபாய்;

என மொத்தம் 14 மாணவ, மாணவியருக்கு 54 இலட்சம் ரூபாய் உயரிய ஊக்கத் தொகைக்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி பாராட்டினார்கள்.

மேலும், வாள்வீச்சு வீராங்கனை செல்வி C.A.பவானி தேவி அவர்களுக்கு 29.09.2019 அன்று பெல்ஜியம் நாட்டில் ஜெண்ட் (Gent) நகரில் நடைபெற்ற 22ஆவது ஃபிளமிஸ் ஓபன் ஃபென்சிங் சாம்பியன்ஷிப் போட்டியில் (22nd Flemish Open Fencing Championships) வெள்ளிப் பதக்கம் வென்றதற்காக 10 இலட்சம் ரூபாயும், 05.10.2019 அன்று ஐஸ்லாண்ட் நாட்டில் ரெய்காவிக் (Reykjavik) நகரில் நடைபெற்ற பெண்கள் உலக கோப்பை சாட்டிலைட் சாப்ரே விளையாட்டுப் போட்டியில் (Women's World Cup Satellite Sabre Tournament) வெண்கலப் பதக்கம் வென்றதற்காக 5 இலட்சம் ரூபாயும், என மொத்தம் 15 இலட்சம் ரூபாய் உயரிய ஊக்கத் தொகைக்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, பாராட்டினார்கள்.

சென்னை கத்திப்பாரா சந்திப்பில், தமிழ்நாடு அரசின் சார்பில், 14.11.2020 அன்று பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் 132ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. பா.பென்ஜமின், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு. க.பாண்டியராஜன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் திரு. மகேசன் காசிராஜன். இ,ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. தெ.பாஸ்கர பாண்டியன், இ.ஆ.ப., ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

நேரு எனும் மாமேதை

கல்வி அளித்தான் குழந்தைகள்
கனவில் நிறைந்தான்
கண்கள் திறந்தான் ‘சாசா’ நேரு என
நினைவில் மலர்ந்தான்.

அண்ணல் காந்தியின் அடிச்சுவட்டில்
அருமையாக நடந்து சென்றான்
மண்ணில் பாரதம் உயர்ந்திடவே
அல்லும் பகலும் உழைத்திட்டான்.

பாரில் உயர்ந்த ஆலைகளே
ஆலயம் என்றே போற்றிடுவான்
பண்பில் உயர்ந்த மனிதர்களே
ஆண்டவன் என்றே புகழ்ந்திட்டான்.

பாரதந்தன்னை பாரோர்கள்
வியக்குமாறு வளர்த்திட்டான்
யாரிதற்கெல்லாம் வேரென்றால்
நேரு எனும்மா மேதைதான்.

நன்றி : நேரு எனும் மாமேதை
எனும் நூலிலிருந்து...

தமிழ்நாடு இந்தியாவின் மருத்துவத் தலைநகரமாக விளங்குகின்றது

சென்னை, வடபழனியில்
Fortis Health Care நிறுவனத்தின்
புதிய மருத்துவமனையைத் திறந்து வைத்து
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்
ஆற்றிய உரை – 26.10.2020

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

நோயை ஆராய்ந்து, நோய்க்கான காரணத்தை ஆராய்ந்து, நோயை தீர்க்கும் வழிகளை ஆராய்ந்து, நோயாளியின் உடலுக்கு ஏற்றவாறு மருத்துவம் செய்வதே சிறந்தது என்று மருத்துவப் பணி எப்படி இருக்க வேண்டும் என்ற இலக்கணத்தைத் தந்தவர் தெய்வப்புலவர் திருவள்ளுவர் அவர்கள்.

Fortis Health Care நிறுவனம், இந்தியா முழுவதும் பல்வேறு இடங்களில் மருத்துவமனைகளை நிறுவி, மக்களுக்கு தரமான மருத்துவ சேவை வழங்கி வருவது பாராட்டுக்குரியது. சென்னை அடையாறில் இந்த நிறுவனத்தின் மருத்துவனை ஏற்கெனவே இயங்கி வருகிறது. இதனைத் தொடர்ந்து தற்போது வடபழனியில் அனைத்து நவீன வசதிகளும் கொண்ட ஒரு புதிய மருத்துவமனையைத் தொடங்கியிருப்பது, தமிழ்நாடு, இந்தியாவின் மருத்துவ தலைநகரம் என்று அழைக்கப்படுவதை மேலும் வலுவாக்குவதாக அமைந்துள்ளது என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

“மக்கள் நம் பக்கம் இருக்கின்றார்களா என்பதை விட மக்களின் பக்கம் நாம் இருக்கிறோமா என்பதே எப்போதும் என்னுடைய சிந்தனையாக இருக்கிறது. என்னை நம்புகின்ற மக்களுக்கு என்னென்ன வழிகளில் எல்லாம்

நன்மை செய்ய இயலுமோ அந்த வழிகளைப் பற்றியே நான் சதா சர்வகாலமும் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். அதனால்தான் மக்களாகிய நீங்கள் எப்பொழுதுமே என் பக்கம் இருக்கிறீர்கள்" என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

இதய தெய்வம் அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசும், அனைவருக்கும் உயர்தர மருத்துவ சேவை கிடைக்கும் வகையில் மிகச் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளைத் தொடர்ந்து ஏற்படுத்தி வருவதனால்தான், **இந்தியாவிலேயே தமிழ்நாடு மருத்துவத் துறையில் ஒரு முன்னோடி மாநிலமாக இன்றையதினம் விளங்கி வருகிறது.**

"நலமான மாநிலமே, வளமான மாநிலம்" என்ற கோட்பாட்டின் அடிப்படையில், ஏழை எளிய மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகள் கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில், மக்கள் வாழும் பகுதிகளுக்கு அருகிலேயே தரம் வாய்ந்த மருத்துவ வசதி கிடைக்க வழிவகை செய்தல், தொழில்நுட்ப வளர்ச்சியினை பயன்படுத்தி உயர்தர மருத்துவ வசதிகள் அளித்தல் போன்ற பல முன்னோடித் திட்டங்களை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில், தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. அவற்றில் ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன்.

- **முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம், வளர் இளம் பெண்களுக்கான சுகாதாரத் திட்டம், பிரசவ உடனாளர் திட்டம், அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகம், அம்மா ஆரோக்கிய திட்டம், அம்மா மகப்பேறு சஞ்சீவித் திட்டம், அம்மா முழு உடல் பரிசோதனை திட்டம் மற்றும் மகளிருக்கான அம்மா மகளிர் முழு உடல் பரிசோதனை திட்டம், நடமாடும் மருத்துவமனை திட்டம், அம்மா மருந்தகம் போன்ற தடுப்பு, கட்டுப்படுத்துதல் மற்றும் சிகிச்சை அளிக்கும் திட்டம், உயர்நிலை மருத்துவமனைகளில் கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்துதல், 108 அவசர கால ஊர்தி சேவை, இரத்த வங்கிகள், விபத்து சேவை மையங்களுடன் கூடிய உயர் சிறப்பு மருத்துவமனைகளை நிறுவுதல் போன்ற பல முன்னோடி திட்டங்களை அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகிறது.**

- 11 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் செயல்படும் சிமாங்க் மையங்கள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

- தாய்சேய் நலப் பிரிவுகள் ஒப்புயர்வு மையங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி திட்டத்தின் கீழ், தகுதி வாய்ந்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இரண்டு பேறுகாலம் வரை 18,000 ரூபாய் நிதி உதவியாக வழங்கப்படுகிறது. இந்தியாவிலேயே அதிக அளவாக தமிழ்நாட்டில் மட்டுமே சுமார் 99.9 சதவீத பிரசவங்கள்

மருத்துவமனைகளில் நடைபெறுவது இத்திட்டத்தின் வெற்றியை காட்டுகிறது.

- கடந்த ஆண்டில் தமிழ்நாட்டில் குழந்தை இறப்பு விகிதம் 16இல் இருந்து 15 ஆகவும், பேறுகாலத்தில் தாய்மார்களின் இறப்பு விகிதத்தைப் பொறுத்தவரையில், **2030இல் அடைய வேண்டிய நீடித்த நிலையான இலக்குகளை இப்போதே அடைந்து விட்டோம் என்பது ஒரு சரித்திர சாதனையாகும்.**

கோப்பு படம்

- மாண்புமிகு அம்மாவின் ஆட்சியில், 254 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. 30 படுக்கை வசதி, ஸ்கேன் போன்ற வசதிகளுடன் 166 ஆரம்ப சுகாதார நிலையங்கள் நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

- இதன் தொடர்ச்சியாக, 32 ஆரம்ப சுகாதார நிலையங்களில், நவீன இணையவழி கண் பரிசோதனை மையங்கள், மாவட்டத்திற்கு ஒன்று வீதம், ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- கடந்த மூன்று ஆண்டுகளில் அரசு மருத்துவமனைகளுக்கு 56 சி.டி.ஸ்கேன், 22 எம்.ஆர்.ஐ. ஸ்கேன், 18 கேத்லேப் மற்றும் 530 டயாலிசிஸ் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு அரசு, அரசு மருத்துவமனைகளில் புற்று நோய்க்கு உயரிய சிகிச்சை அளிக்கும் வகையில் 190 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10 அரசு மருத்துவமனைகளில் Linear Accelerator என்ற உயர் தொழில் நுட்பக் கருவி நிறுவப்பட்டு வருகிறது.

- சென்னை அடையாறு, புற்றுநோய் மையத்தை 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநில அளவில் புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்கும் ஒப்புயர்வு மையமாக தரம் உயர்த்தும் பணி, நிறைவடையும் தருவாயில் உள்ளது.

- 59 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நான்கு புற்றுநோய் மண்டலங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- காஞ்சிபுரம், காரப்பேட்டை அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனையில் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் **மேன்மைமிகு மையம்** ஏற்படுத்தும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

- **உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் தமிழ்நாடு 5 வருடங்களாக தொடர்ந்து தேசிய அளவில் மிகச் சிறந்த மாநில விருதைப் பெற்று வருகிறது. உடல் உறுப்பு தானத்தில் சிறந்த மருத்துவமனைக்கான விருது, சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ளது.**

- தேசிய தர உறுதி திட்டத்தின் கீழ், சிறந்த செயல்பாடுகளுக்காக தமிழ்நாட்டில் உள்ள 26 அரசு மருத்துவமனைகள் மற்றும் 47 ஆரம்ப சுகாதார நிலையங்களும் தேர்வு செய்யப்பட்டு, மத்திய அரசால் பாராட்டு சான்றிதழும் பரிசுத் தொகையும் வழங்கப்பட்டுள்ளன.

- உயர்தர மருத்துவ சேவைகளை வழங்குவதில் மட்டுமல்லாது, மிகச் சிறந்த மனித வளம் மற்றும் கட்டமைப்பை ஏற்படுத்தித் தருவதிலும், தமிழ்நாடு இந்தியாவிலேயே ஒரு முன்மாதிரி மாநிலமாக திகழ்ந்து வருகின்ற காரணத்தினால், **தமிழ்நாடு இந்தியாவின் மருத்துவ தலைநகரமாக விளங்குகின்றது.**

- மக்களுக்கு தரமான மருத்துவ சேவைகளை அளிப்பதில், அரசு மருத்துவமனைகளோடு, தனியார் மருத்துவமனைகளும் தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. இன்றைக்கு தரமான மருத்துவ சிகிச்சை குறைந்த செலவில் பெறுவதற்காக, வெளி மாநிலங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும், அதிக எண்ணிக்கையில் தமிழ்நாட்டிற்கு வருகின்றனர்.



இதன் மூலம், **தமிழ்நாடு இந்தியாவின் மருத்துவ சுற்றுலாத் தலமாக** விளங்கி வருகிறது.

மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் படிப்படியாக அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட வேண்டும் என்பது மாண்புமிகு அம்மாவின் கொள்கையாகும்.

2010–2011ஆம் ஆண்டில் 1,945 ஆக இருந்த மருத்துவப் பட்டப்படிப்பு இடங்கள், தற்போது 3,400 ஆக உயர்ந்துள்ளது. **இதைத் தொடர்ந்து, அதிக அளவில் தமிழ்நாட்டைச் சார்ந்த கிராமப்புற மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மாணவர்களின் மருத்துவர் ஆகும் கனவை நனவாக்கும் விதமாக, மாண்புமிகு அம்மாவின் அரசு,** குறுகிய காலத்தில் இராமநாதபுரம், விருதுநகர், திண்டுக்கல், நீலகிரி, அரியலூர், நாகப்பட்டினம், கள்ளக்குறிச்சி, திருவள்ளூர், திருப்பூர், நாமக்கல், கிருஷ்ணகிரி ஆகிய 11 மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் அமைப்பதற்கு மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்று, அவை அனைத்திற்கும் அடிக்கல் நாட்டப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. **இதன் மூலம், வரும் ஆண்டுகளில் கூடுதலாக 1,650 மருத்துவப் பட்டப்படிப்பு இடங்கள் உருவாக்க நடவடிக்கை எடுத்த அரசு அம்மாவின் அரசு.**

அரசுப் பள்ளி மாணவர்களின் மருத்துவராகும் கனவினை மெய்ப்பிக்கும் வகையில் அரசுப் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு மருத்துவப் படிப்பில் உள் ஒதுக்கீடாக 7.5 விழுக்காடு வழங்க மாண்புமிகு அம்மாவின் அரசு சட்டம் இயற்றியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உயர்தர சுகாதார சேவைகளை வழங்குவது மட்டுமல்லாமல், **மிகச் சிறந்த மனித வளம் மற்றும்**

“2010–2011ஆம் ஆண்டில் 1,945 ஆக இருந்த மருத்துவப் பட்டப்படிப்பு இடங்கள், தற்போது 3,400 ஆக உயர்ந்துள்ளது. **இதைத் தொடர்ந்து, அதிக அளவில் தமிழ்நாட்டைச் சார்ந்த கிராமப்புற மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மாணவர்களின் மருத்துவர் ஆகும் கனவை நனவாக்கும் விதமாக, மாண்புமிகு அம்மாவின் அரசு,** குறுகிய காலத்தில் இராமநாதபுரம், விருதுநகர், திண்டுக்கல், நீலகிரி, அரியலூர், நாகப்பட்டினம், கள்ளக்குறிச்சி, திருவள்ளூர், திருப்பூர், நாமக்கல், கிருஷ்ணகிரி ஆகிய 11 மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் அமைப்பதற்கு மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்று, அவை அனைத்திற்கும் அடிக்கல் நாட்டப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. **இதன் மூலம், வரும் ஆண்டுகளில் கூடுதலாக 1,650 மருத்துவப் பட்டப்படிப்பு இடங்கள் உருவாக்க நடவடிக்கை எடுத்த அரசு அம்மாவின் அரசு.**”

கோப்பு படம்

கட்டமைப்பை ஏற்படுத்துவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒரு முன்மாதிரி மாநிலமாக இன்றையதினம் விளங்கி வருகிறது.

மருத்துவம் நுண் கலையாகும். அது வணிகமன்று. ஒரு சேர இதயமும் மூளையும் ஒருமித்து பணியாற்றும் உன்னதமான பணியே மருத்துவமாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு, உங்கள் மருத்துவமனையை நாடி வரும் அனைத்து தரப்பு மக்களிடமும் அன்புடன் பழகி, அவர்களுக்கு உயரிய மருத்துவ சேவையை வழங்க வேண்டும் என்று அன்போடு இந்த நிறுவனத்தை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன்.

இறைவன் எப்படி தன்னை நாடி வரும் மக்களிடம், வித்தியாசம் ஏதும் பாராமல், அவர்களின் குறையைத் தீர்க்கின்றானோ, அதேபோல் மருத்துவர்களும், தங்களை நாடி வரும் நோயாளிகளிடம் வித்தியாசம் ஏதும் பாராமல் அனைவருக்கும் தரமான மருத்துவ சேவையை வழங்கி, அவர்களது நோயைக் குணப்படுத்த வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

உங்கள் நிறுவனம் இருதய மாற்று சிகிச்சையினை அதிக அளவில் செய்து வருவதாக அறிகிறேன். நம்மிடையே பணியாற்றும் மருத்துவர்கள் மிகுந்த திறமையானவர்கள். சாதிக்கப் பிறந்தவர்கள். அவர்களின் திறமைகளை நன்கு பயன்படுத்தி, மருத்துவத் துறையில், மேலைநாடுகளை மிஞ்சும் வகையில், உயிர்காக்கும் உயரிய சிகிச்சைகள் செய்து, சாதனைகள் படைக்க வேண்டும் என்று அன்போடு இந்த நிகழ்ச்சியின் வாயிலாக கேட்டுக் கொள்கிறேன்.

சமீபத்தில் கொரோனா நோய்த் தொற்றின் பரவலை, மருத்துவத்துறையில் முன்னேறிய நாடுகள் என்று சொல்லப்பட்ட மேலை நாடுகளைவிட, குறுகிய காலத்தில் அதிகமாக கட்டுப்படுத்தி, மக்களைக் காப்பாற்றியது நமது நாட்டு மருத்துவர்கள்தான் என்பது நமக்கெல்லாம் பெருமை.

மாநிலத்தில் உள்ள மிகவும் ஏழையான ஒரு நோயாளிக்கு எத்தகைய மருத்துவ சிகிச்சை கிடைக்கின்றது என்பதைப் பொறுத்தே மாநிலத்தின் முழு சுகாதாரம் அளவிடப்படுகிறது. எனவே, ஏழை, எளிய மக்களுக்கு உயரிய சிகிச்சைகள் தேவைப்பட்டு, அவர்கள் தனியார் மருத்துவமனைகளை அணுக வேண்டிய சூழ்நிலையில், அவர்களுக்கு தகுந்த சிகிச்சை அளித்து அவர்களைக் காப்பாற்ற, மாண்புமிகு அம்மாவின் அரசு, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பொறுப்பை நிறைவேற்றும்பொழுது, சம்பந்தப்பட்ட நோயாளிக்கு ஏற்படும் புன்னகையில் உங்களுக்கு மன நிறைவு கிடைக்கும்.

இதைத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் **“ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பேன்”** என்றார்.

இன்று தொடங்கப்பட்டுள்ள Fortis நிறுவனத்தின் வடபழனி மருத்துவமனை, மக்களுக்கு சிறந்த தரமான மருத்துவ சேவையை வழங்க வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். இங்கு பணியாற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் இதர பணியாளர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்வினை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பட்டுத்தொழில் முனைவோர்களுக்குத் தேவையான பயிற்சி மற்றும் மானியம் வழங்கி விவசாயிகளின் பொருளாதாரத்தை உயர்த்திய அரசு

பட்டு உற்பத்தி தொழிலானது இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் கடந்த 2,500 ஆண்டுகளாக பிரசித்தி பெற்ற தொழிலாக விளங்குகிறது. பட்டு ஓர் இயற்கை இழையாகும். இதன் நளினம் மற்றும் ஈர்க்கும் தன்மையால் "ஆடைகளின் ராணி" என அழைக்கப்படுகிறது. மல்பெரி, டசார், ஈரி மற்றும் முகா என நான்கு வகையான இயற்கை பட்டு வகைகள் தயாரிப்பதில், இந்தியா உலக அளவில் இரண்டாம் இடத்தில் பட்டு உற்பத்தியிலும், நுகர்வோர்கள் சந்தையிலும் சிறந்து விளங்குகிறது. இதில், மல்பெரி என்ற பட்டு வகையில் வெண்பட்டு மற்றும் மஞ்சள் பட்டு முக்கிய வர்த்தகமாக விளங்குகிறது.

இது குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

"பட்டு தொழில் முனைவோர்களுக்கு தேவையான பட்டுத் தொழில் குறித்த பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இதில், மல்பெரி சாகுபடி, பட்டு முட்டை உற்பத்தி, பட்டுப்புழு வளர்ப்பு, பட்டு நூற்பு, முறுக்கேற்றுதல், அதற்கான அலகு அமைத்தல், பிற நோய்களிலிருந்து பட்டுப்புழுக்களை காப்பாற்றுதல், உற்பத்தி திறனை அதிகரிக்க செய்தல், கணினி உதவியுடன் துணிநூல் வடிவமைத்தல் ஆகியவை குறித்து உரிய பயிற்சிகள் வழங்கப்படுகிறது. இத்தொழிலில் மகளிர், வயதானோர் என அனைவரும் ஈடுபட்டு வருவாய் ஈட்ட முடியும்.

தென்காசியை தலைமையிடமாக கொண்டு பட்டு வளர்ச்சித்துறை அலுவலகம் 1958ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது. இவ்வலுவலகம் திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் பட்டு வளர்ச்சி பணிகளை கவனித்து வருகின்றது. நாகர்கோவிலை தலைமையிடமாகக் கொண்டு, நாகர்கோவில் கோணத்தில் அரசு பட்டுக்கூடு அங்காடி மற்றும் பட்டு நூற்பகம் செயல்பட்டு வருகின்றது. இங்கு, கொள்முதல் செய்யப்படும் பட்டுக்கூடுகளை அரசு பட்டு நூற்பகத்தில் நூற்பு செய்து, அதன் மூலம் கிடைக்கும் பட்டு நூலை துறையின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும், காஞ்சிபுரத்தில் உள்ள அண்ணா பட்டு பரிமாற்றகத்தில் விற்பனை செய்யப்படுகிறது. பட்டு தொழிலில் ஈடுபடுவோர்களுக்கு தமிழக அரசால் மானியங்கள் வழங்கப்படுகிறது".

- ❖ மல்பரி நடவுக்கான ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தில் அலகு மதிப்பீடு ரூ.14,000/–இல் ரூ.10,500/– அரசு மானியமாக வழங்குகிறது. (ஒரு விவசாயிக்கு 5 ஏக்கர் வரை),
- ❖ புழுவளர்ப்பு மனை கட்டுதல் நிலை–1 திட்டத்தில் அலகு மதிப்பீடு ரூ.2,75,000/–இல் ரூ.82,500/– அரசு மானியமாக வழங்குகிறது.
- ❖ புழுவளர்ப்பு மனை கட்டுதல் நிலை–2 திட்டத்தில் அலகு மதிப்பீடு ரூ.1,75,000/–இல் ரூ.87,500/– அரசு மானியமாக வழங்குகிறது.
- ❖ புழுவளர்ப்பு மனை கட்டுதல் நிலை–3 திட்டத்தில் அலகு மதிப்பீடு ரூ.1,00,000/–இல் ரூ.63,000/– அரசு மானியமாக வழங்குகிறது.
- ❖ சொட்டு நீர் பாசனம் அமைத்தல் ஏக்கருக்கு (சிறுகுறு விவசாயிக்கு) ரூ.33,600/– வீதம் (GST வரி உட்பட) அலகு மதிப்பீடு ரூ.33,600/–இல் ரூ.26,100/– (ஒரு விவசாயிக்கு 2 ஏக்கர் வரை) அரசு மானியம் வழங்குகிறது.
- ❖ நவீன பட்டுப்புழு வளர்ப்பு தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் அலகு மதிப்பீடு ரூ.75,000/–இல் ரூ.52,500/– அரசு மானியம் வழங்குகிறது.

பட்டு வளர்ச்சிக்கு வழங்கப்பட்ட மானியம்

2011 முதல் 2019 வரை மல்பெரி நடவுக்காக 60 விவசாயிகளுக்கு 96.05 நடவு பரப்பிற்கு

ரூ.7,72,893/–மும், சொட்டு நீர் பாசனம் அமைக்க 10 விவசாயிகளுக்கு 19.10 நடவு பரப்பிற்கு ரூ.3,38,250/–மும், புழுவளர்ப்பு மனை அமைக்க 21 விவசாயிகளுக்கு 38.40 நடவு பரப்பிற்கு ரூ.17,14,000/–மும், நவீன புழுவளர்ப்பு தளவாடங்களான களை எடுக்கும் இயந்திரம், கூடு கட்டும் வலை, ஊசி ஈ வலை, ஈரப்பதமானி, தார்பாலின், பவர் ஸ்பிரேயர் ஆகியவற்றிற்கு ரூ.4,25,000/– மானியமாக வழங்கப்பட்டுள்ளது. எனவே, நமது மாவட்டத்திலுள்ள விவசாயிகள் பருவ நிலைக்கேற்ப தங்களது விவசாயத்தை மாற்றி அமைக்க ஏதுவாக, பட்டு வளர்ப்பு விவசாயத்தை மேற்கொண்டு அதிக பயன்பெற வேண்டும்.

இத்திட்டத்தில் பயனடைந்த ஆரல்வாய்மொழி கிராமத்தை சேர்ந்த திரு.ஆ.அனந்தப்பன் என்பவர் கூறியதாவது :

திரு.ஆ.அனந்தப்பன்

“என்னுடைய பெயர் அனந்தப்பன், நான், ஆரல்வாய்மொழி கிராமத்தில் வசித்து வருகின்றேன். என்னுடைய தகப்பனார் திரு.ஆதிநாராயணன் என்பவர் எனக்கு அளித்த 2 ஏக்கர் பரப்பில் மல்பெரி பயிரிட்டு, வெண்பட்டுப்புழு வளர்ப்பில் கடந்த ஆறு வருடங்களாக புழு வளர்ப்பு மேற்கொண்டு வருகின்றேன். கடந்த ஆண்டு 1,125 பட்டு முட்டைத் தொகுதிகளுக்கு 813 கிலோ பட்டுக் கூடுகள் அறுவடைச் செய்து, ரூ.2,76,571 வருமானம் ஈட்டியுள்ளேன். இதன் வாயிலாக 2019–2020ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தின் சிறந்த பட்டு விவசாயியாக முதல் பரிசை வென்றுள்ளேன். பல்வேறு வேளாண் பயிர்களை பயிரிட்டுள்ளேன். இருப்பினும் என்னுடைய பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் உதவியாக இருந்தது பட்டு கூடு என்பதை மறுக்க முடியாது. இதற்கு உதவிய தமிழ்நாடு அரசுக்கும், முதல்வர் அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்”.

இத்திட்டத்தில் பயனடைந்த மங்காவிளை சேர்ந்த திரு.தி.கங்காராம் என்பவர் கூறியதாவது

“நான் கன்னியாகுமரி மாவட்டம் மங்காவிளை சேர்ந்த தியாகராஜன் என்பவரின் மகன்கங்காராம் எனக்கும், 1.50 ஏக்கர் பரப்பு நிலம் உள்ளது. இதில் பல விதமான பயிர்கள் உற்பத்தி செய்தும், போதிய

திரு.தி.கங்காராம்

வருவாய் ஈட்ட முடியாத காரணத்தினால், பட்டு வளர்ச்சி துறையின் மூலம் மல்பெரி சாகுபடிக்கு மானியத்துடன் கூடிய பயிற்சிகள் வழங்கப்படுவதை அறிந்து, பட்டு வளர்ச்சித் துறை அலுவலர்களை சந்தித்து, மல்பெரி சாகுபடி குறித்து விவரங்களை கேட்டறிந்து பின், என்னுடைய நிலத்தில் மல்பெரி பயிரிட்டு, 2018 முதல் நல்ல முறையில் புழு வளர்ப்பு மேற்கொண்டு வருகின்றேன். நான் கடந்த ஆண்டு 200 முட்டை தொகுதிகளுக்கு 104 கிலோ பட்டு கூடுகள் அறுவடை செய்து மொத்தம் ரூ.34,803 வருமானம் ஈட்டியுள்ளேன். இதன் வாயிலாக 2019–2020ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தின் சிறந்த பட்டு விவசாயியாக மூன்றாம் பரிசை வென்றுள்ளேன். பட்டு வளர்ப்பினால் என்னுடைய பொருளாதாரம் சிறந்து நிலையில் உள்ளது. என்னுடைய வளர்ச்சிக்கு உதவியாக இருந்த பட்டு வளர்ச்சித் துறைக்கும், தமிழ்நாடு அரசுக்கும், தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்”.

கன்னியாகுமரி மாவட்டம் பட்டு வளர்ச்சித்துறை அரசு அலுவலர்களை தொடர்பு கொண்டு பட்டு வளர்ப்பு தொடர்பான விவரங்களை கேட்டு பயன்பெறலாம்.

1. க.நிஷாந்தி, உதவி இயக்குநர், தென்காசி, அலைபேசி எண். 9944777571.
2. கே.எஸ்.செல்வி, ஆய்வாளர், நாகர்கோவில் அரசு பட்டுக்கூடு அங்காடி (ம) நூற்பகம், அலைபேசி எண். 7667257577.
3. பா. மீனாகுமாரி, உதவி ஆய்வாளர், நாகர்கோவில் தொழில்நுட்ப சேவை மையம் மற்றும் மருங்கூர் மற்றும் திங்கள் சந்தை சார் சரகம், அலைபேசி எண். 9488284967.
4. சு.சித்ரா, இளநிலை ஆய்வாளர், குலசேகரம் சார் சரகம், அலைபேசி எண். 9080428458.

– T. நவாஸ்கான்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

குடிமராமத்து திட்டம் விவசாயிகளுக்கு கிடைத்த வரபிரசாதமாகும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், விவசாயிகளை பாதுகாக்கவும், அவர்களது வாழ்க்கை தரத்தை மேம்படுத்தவும், உணவு உற்பத்தியை பெருக்கி, பொருளாதார வளர்ச்சி பெறும் வகையில் குடிமராமத்து திட்டத்தின் அவசியம் கருதியும், குடிமராமத்து திட்டத்தை தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்த வகையில், தமிழ்நாட்டில் நீர்வள ஆதாரங்களை மேம்படுத்திட, தமிழ்நாடு முழுவதும், பல்வேறு துரித நடவடிக்கைகளை போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், குடிமராமத்து திட்டத்தில், வரத்து வாய்க்கால் மற்றும் கால்வாய்கள், ஏரிகள், மதகுகளை மறு கட்டுமானம் செய்தல், நீர்வழிகளில் அடைத்திருக்கும் செடிகளை அகற்றுதல் உள்ளிட்ட சீரமைக்கும் பணிகளின் மதிப்பீடு ரூ.10 இலட்சங்களுக்கு கீழ் உள்ள பணிகள் பாசன சங்கம், நீரினை பயன்படுத்துவோர் சங்கங்கள், சங்கங்கள் இல்லாத இடங்களில், முன்னோடி விவசாயிகள் மூலம், நியமன முறையில் வழங்கப்பட்டு, செயல்படுத்தப்படும். இப்பணிகளுக்கு விவசாயிகளின் பங்களிப்பாக மதிப்பீட்டு தொகையில் 10 சதவீதம் தொகையினை தொழிலாளர்கள் வடிவத்திலோ அல்லது பொருளாகவோ அல்லது ரொக்கமாகவோ செலுத்திட வேண்டும். திருச்சிராப்பள்ளி மாவட்டம், பொதுப் பணித்துறை, நீர்வள ஆதாரத்துறையின் ஆற்றுப் பாதுகாப்புக் கோட்டத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகளை மறுசீரமைக்கும் பணியான குடிமராமத்து திட்டத்தின் கீழ், 2019–2020ஆம் ஆண்டு மொத்தம் 52 பணிகள் ரூ.609.85 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2020–2021ஆம் ஆண்டு 16 பணிகள் ரூ.412 இலட்சம் மதிப்பீட்டில் நிருவாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதில், இலால்குடி வட்டத்தில் 11 பணிகளும், திருவெறும்பூர் வட்டத்தில் 2 பணிகளும், மண்ணச்சநல்லூர் வட்டத்தில் 3 பணிகளும் மேற்கொள்ளப்பட்டு, இதில் 10 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதர 6 பணிகள் பாசன பருவகாலம் முடிவு பெற்றபின் மேற்கொண்டு முடிக்கப்படும். இப்பணிகள் செயலாக்கத்தின் மூலம் வாய்க்கால்கள் சீரமைத்தல், மதகுகள் மராமத்து பணிகள், தடுப்பணை கட்டுதல், அடைப்பான்களை பழுதுபார்த்தல் போன்றவை மேற்கொள்ளப்பட்டதின் அடிப்படையில் விவசாயிகளின் நீண்டகால கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு பாசனத்திற்கு உரிய நீர் வழங்கப்படுவதில் விவசாயம் சீராக நடைபெற வழிவகைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குடிமராமத்து திட்டம் 2019–2020ஆம் ஆண்டிற்கு ரூ.28.75 கோடி மதிப்பீட்டில் 575 சிறுபாசன குளங்கள் மற்றும் ரூ.4.81 கோடி மதிப்பீட்டில் 481 குட்டைகள், ஊரணிகளில் குடிமராமத்துப் பணிகள் நடைபெற்று முடிவடைந்துள்ளது. மாநில நிதிக்குழு மானியம் 2019–2020ஆம் ஆண்டிற்கு ரூ.14.52 கோடி மதிப்பீட்டில் 120 சிறுபாசன குளங்கள் மற்றும் ரூ.15.45 கோடி மதிப்பீட்டில் 850 குட்டைகள், ஊரணிகள் என மொத்தம் ரூ.29.97 கோடி மதிப்பீடில் எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசால் சிறப்பாக செயல்படுத்தப்பட்ட குடிமராமத்து திட்டத்தின் மூலம் பயன்பெற்ற பயனாளிகள் தெரிவித்ததாவது:

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், தெற்கு மற்றும் வடக்கு அய்யன் வாய்க்கால் பாசனதாரர்கள் சங்கத் தலைவர் திரு.என்.வீரசேகரன் அவர்கள் தெரிவித்ததாவது,

“எனது பெயர் வீரசேகரன் (வயது 51), நான் தெற்கு மற்றும் வடக்கு அய்யன் வாய்க்கால் பாசனதாரர்கள் சங்கத் தலைவராக உள்ளேன். எங்களது நீண்ட நாள் கோரிக்கையான இலால்குடி வட்டம், அய்யன் வாய்க்காலில் உள்ள பம்பரம்சுத்தி படுக்கை அணை, சவுக்கடி படுக்கை அணை மற்றும் தெற்கு அய்யன் வாய்க்காலில் உள்ள திருவாதிரை படுக்கை அணை மற்றும் தெற்கு அய்யன் வாய்க்காலில் உள்ள மதகுகள் சீரமைத்தல் போன்ற பணிகளை குடிமராமத்து திட்டத்தின் கீழ், மிகச்சிறப்பாக செய்து கொடுத்துள்ளனர். இதன் மூலம் பாசனத்திற்கு சீராக தண்ணீர் வரப்பெற்றதில் நெல் சாகுபடி அமோக மகசூல் தந்துள்ளது. இதன் மூலம் இப்பகுதியில் உள்ள 250 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மேலும், தடுப்பணை அமைத்ததன் மூலம் நிலத்தடி நீர் பெருகி விவசாயத்திற்கு தேவையான தண்ணீர் கிடைக்கிறது. குடிமராமத்து திட்டத்தின் மூலம், கடைமடைப் பகுதிக்கும் தண்ணீர் செல்லும் வகையில், வழிவகை செய்து எங்களை போன்ற விவசாயிகளின் வாழ்வில் ஒளி விளக்கேற்றிய மாண்புமிகு அம்மாவின் வழியில் ஆட்சி நடத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு விவசாயிகள் சார்பிலும், விவசாய சங்கத்தின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறோம்”.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மங்கம்மாள்புரம் கிராம பாசன வாய்க்கால் விவசாயிகள் சங்க தலைவர் திரு. எம்.ராஜ்மோகன் அவர்கள் தெரிவித்ததாவது:

“எனது பெயர் ராஜ்மோகன் (வயது 65), நான் மங்கம்மாள்புரம் கிராம பாசன வாய்க்கால் விவசாயிகள் சங்க தலைவராக உள்ளேன். எனக்கு 2 மகன்கள் உள்ளனர். சந்தோஷ்பாபு என்ற மகன் விவசாயம் செய்து வருகிறான். 2வது மகன் விக்னேஷ் பொறியியல் கல்லூரியில் படித்து வருகிறான். விவசாயத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்தை வைத்து எனது மகனை படிக்க வைத்து வருகிறேன். எனக்கு சொந்தமான 20 ஏக்கர் நிலத்தில் இந்த ஆண்டு குறுவை சாகுபடியாக ஆடுதுறை 36 ரக நெல் சாகுபடி செய்துள்ளேன். நெல் விளைச்சல் அமோகமாக உள்ளது. குடிமராமத்து திட்டத்தின் கீழ், மங்கம்மாள்புரம் கிராம பாசன வாய்க்கால் சுமார் 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு தூர்வாரப்பட்டதால் தண்ணீர் கடைமடை வரை சீராக வருகிறது. இதனால் சுமார் 1,500 விவசாயிகள் நெல்

சாகுபடி செய்து பயனடைந்துள்ளனர். குடிமராமத்து திட்டம் விவசாயிகளுக்கு கிடைத்த வரபிரசாதமாகும் இந்த திட்டத்தை கொண்டு வந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது சார்பாகவும், விவசாயிகள் சார்பாகவும் நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு இந்த அரசுக்கு நன்றி கடன் பட்டவர்களாக இருப்போம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்”.

R. சிங்காரம்
உதவி இயக்குநர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 30.10.2020 அன்று மதுரை தெப்பக்குளத்தில் அமைந்துள்ள மருதுபாண்டியர்களின் திருவுருவச் சிலைகளுக்கு மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

தமிழரசு

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/18-20
& WPP No. TN/PMG (CCR) 518/18-20

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்
30.10.2020 அன்று பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகனாரின்
113ஆவது பிறந்தநாள் விழா மற்றும் 58ஆவது குருபூஜையை முன்னிட்டு,
இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நினைவிடத்தில்
மலர்வளையம் வைத்து, மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

Published by D. BASKARA PANDIAN, IAS, on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor: D. BASKARA PANDIAN, IAS